
சுவடி : 39
ஏடு : 11
மே 2016
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
**தி.துரை சித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
72994 41712
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

ஆசிரியவுரை

# தமிழகத்தில் தேர்தல் :

## திராவிடர் இயக்க - தமிழ் இயக்க இளைஞர்களே! மாணவமணிகளே! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!



தமிழகத்தை, 1956 நவம்பர் 1 முதல் தனிமொழி மாநிலமாகப் பெற்றோம். அது வரையில் தி.மு.க. தேர்தலில் ஈடுபடவில்லை. 1957 முதல் தேர்தலில் ஈடுபட்டது. 1962 தேர்தலில் 50 இடங்களைப் பெற்ற தி.மு.க., 1967 தேர்தலுக்குள் "தனித் திராவிட நாடு" பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டது. 1967இல் தமிழக ஆட்சியைப் பிடித்த தி.மு.க., உயர்நிலைப் பள்ளிகளில் மூன்று மொழி களில் ஒன்றாக இந்தி கற்பிக்கப்பட்டதை நீக்கியது; தமிழ்நாடு சென்னை மாநிலம் என்று அழைக்கப்பட்டதைத் தமிழ்நாடு எனச் சட்டப்படி மாற்றியது; சுயமரியாதைத் திருமணம் செல்லுபடியாகும் வகையில் சட்டம் இயற்றியது.

1965இல், "இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி" என்பதை எதிர்த்து மாணவர்கள் தொடங்கிய போராட்டத்தில், தி.மு.க. ஈடுபட்டு முழு வீச்சில் போராடியது. அதனால், அடுத்து 1967இல் நடைபெற்ற தேர் தலில் இந்தி எதிர்ப்புப் போராட்ட உயிர் ஈகங்கள்தான் தி.மு.க.வை தமிழக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியது.

முதலமைச்சராக இருந்த அறிஞர் சி.என். அண்ணாதுரை, 1969இல் முதிராச் சாவு எய்தினார்.

1969 பிப்பிரவரி முதல் 1976 சனவரி முடிய கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சராக விளங்கினார்.

1977 முதல் 1987 வரையில், நடிகர் ம.கோ. இராமச்சந்திரன் முதலமைச்சராக விளங்கினார். அவர் மறைவையொட்டி, ஒரு முப்பது நாள் சானகி இராமச்சந்திரன் முதலமைச்சராகச் செயல்பட்டார்.

1989 தேர்தல் முதல் 2016 சட்டமன்றத் தேர்தல் வரையில் கலைஞர் மு.கருணாநிதி, செல்வி. ஜெ. செயலலிதா என, மாறி மாறி முதலமைச் சர்களாக விளங்கினார்கள். இப்போது வரையில் இந்த இரண்டு திராவிட வாக்குவேட்டைக் கட்சிகளும்

1. "மாநிலத்தில் சுயஆட்சி அல்லது தன்னாட்சி" வர, என்ன செய்தன?
2. "இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி" என்பதை எதிர்த்து, அரச மைப்பில் கண்ட எல்லா இந்திய மொழிகளும் இந்திய ஆட்சி மொழிகளாக வந்திட என்ன செய்தன? எப்போதாவது, ஏன் நாடாளுமன்றத்தில் அதற்கான தீர்மானத்தை முன்மொழிந்து விவாதம் நடைபெறச் செய்து, அதை நிறைவேற்ற இவர்கள் வழிகாணவில்லை?

3. மய்ய அரசு அதிகாரப் பட்டியலில் (Union List) அடங்கிய தேசியக் கல்வி நிறுவனங்கள் தவிர்த்த - மற்ற ஒட்டுமொத்தக் கல்வித் துறையும் மாநில அரசுப் பட்டியலில் (State List) 3-1-1976 வரையில் இருந்தது. அதன்பிறகு பொது அதிகாரப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டது.

1977க்குப் பிறகு படிப்படியாக எல்லாக் கல்வித் துறை அதிகாரங்களையும் மய்ய அரசு பிடுங்கிக் கொண்டது.

இதை மாற்றிடவும் மீண்டும் கல்வித்துறை மாநிலப் பட்டியலுக்கு வந்து சேர்ந்திடவும், 1977 முதல் 39 ஆண்டுகளாக மாறி, மாறி ஆட்சி செய்த இரண்டு திராவிடக் கட்சிகளும் செய்தது என்ன?

இப்போது 2016 மே 16 அன்று நடைபெறும் தேர்தல் நேரத்தில், திராவிட - தமிழின உணர்வுள்ள இளைஞர்களும் மாணவ மணிகளும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இவை பற்றிச் சிந்தியுங்கள்!

**இச்செய்திகளில், இவர்கள் இதுவரை பூண்ட பொய்க்கோலத்தை இப்போது அம்பலப்படுத்துங்கள்.**

இவை மட்டுமா?

இன்றைக்கு உள்ள அரசமைப்புச் சட்டப்படி, தமிழ்நாட்டில் தமிழ்மொழி வழியில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகப் படிப்பு வரையில் எல்லாத் துறைக் கல்வியையும் தர முழு அதிகாரம் தமிழக அரசுக்கு இருக்கிறது.

அப்படி இருந்தும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் உயர் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கலைக் கல்லூரிகள், தொழிற் படிப்புக் கல்லூரிகள், அரசுசார் பல்கலைக்கழகங்கள் இவற்றில் 1977 முதல் இன்று வரையில் முற்றிலுமாகத் தமிழ் வழியில் கல்வி தர ஏற்ற சட்டங்களைச் சட்டமன்றில் நிறைவேற்றி - நூற்றுக்கு நூறுமாக அதை நடைமுறைப்படுத்தாதது ஏன்?

இதை நீங்களும் கற்றறிந்த மேதைகளும் தமிழ்ப் பெருமக்களும் ஏன் என்று கேட்காமல், வேறு யார் கேட்பது? எப்போது கேட்பது? இவர்களிடம் இப்போது கேட்காமல், நாளைக்கு எப்படிக் கேட்பீர்கள்?

உலகத்தில் உள்ள 220க்கு மேற்பட்ட சுதந்தர நாடுகளில்-எந்த நாட்டிலாவது தன் தாய் மொழியில் அல்லாமல் வேற்று மொழிவழியில் ஒருவன் கல்வி கற்கிறானா?

யுனைடெட் கிங்டம் (United Kingdom) என்கிற பிரிட்டிஷ் அரசில் ஆங்கிலம், அய்ரிஷ், ஸ்காட்ஸ், வெல்ஸ் என நான்கு வெவ்வேறு மொழிகளைப் பேசும் பிரிவுகள் அடங்கி இருக்கின்றன. அவர்கள் எல்லோரும் ஆங்கில மொழி வழியிலா படிக்கிறார்கள்? இல்லை. அவரவர் தாய்மொழி வழியில் மட்டுமே படிக்கிறார்கள்.

அய்ரோப்பிய ஒன்றியத்தில் (European Union) கிட்டத்தட்ட 27 தனிச் சுதந்தர நாடுகள் இருக்கின்றன. அந்நாட்டு மொழிகளுக்கு எழுத்து வடிவம் - அதாவது நெடுங்கணக்கு a, b, c, d தான். ஆனால் அவரவர் மொழி வேறு வேறு; உச்சரிப்பு முறை வேறு வேறு. அவரவர் தாய் மொழி வழியில் தான் எல்லாத் துறைப் படிப்பையும் அங்கெல்லாம் படிக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள - தமிழகத்தில் உள்ள படித்த மடையர்களும், வயிற்றுப்பாட்டுக் கல்வியாளர்களும், தனியார் கல்வி நிறுவன வணிகக் கொள்ளையர்களும் தாம், ஆங்கில மொழி வழியில் மழலையர் வகுப்பு முதல் கலை, பொது அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், கணினி இயல் எல்லாக் கல்வியையும் கற்றுத் தருகிறார்கள். அப்படிக் கற்றவர்களில் பெரும்பாலோர் திறன்வாய்ந்தவர்களாக (Talented) இல்லையே அது ஏன்? ஏன்? ஏன்?

**தாய்மொழி வழியில் கற்காதவன் எதையும் புரிந்து கொள்ளமாட்டான். பாடத்தை மனப்பாடம் செய்வான் - அதைத் தேர்வில் வாந்தியெடுப்பான் - மதிப்பெண் பெறுவான் - தேர்ச்சியுறுவான்.**

**அவன், தான் கற்றதை அடுத்தவனுக்குத் திறம்படச் சொல்லித்தர முடியாது; சுயமாகச் சிந்திக்க முடியாது; புதிய கருத்துக்களையோ, கண்டுபிடிப்புகளையோ உருவாக்க முடியாது.**

இரண்டு திராவிடக் கட்சி ஆட்சிகளும் - இவர்களின் தொங்கு சதைகளாக நேற்று வரை இருந்த எல்லாக் கட்சிக்காரர்களும் இந்த ஈன நிலைமைக்குப் பொறுப்பு ஆவார்கள்.

ஆட்சி என்பது தலைமைச் செயலகம், மாவட்ட அளவிலான பல துறை அலுவலகங்கள், வட்டம் - குறுவட்டம் - ஊராட்சி எல்லாம் அடங்கியவை தான். இங்கெல்லாம் தமிழில் மட்டுமே

ஆவணங்கள் - குறிப்பேடுகள் - ஆணைகள் - மடல்கள் - பட்டியல்கள் எல்லாம் இருக்க வேண்டும். இவை அப்படி இல்லையே! ஏன்?

இதில் எந்தக் கட்சிக்கும் உள்ளார்ந்த அக்கறை இல்லை; இதை நிறைவேற்றித் தீரவேண்டும் என்ற உறுதிப்பாடும் எந்தக் கட்சிக்கும் இல்லை.

உயர்நீதிமன்றத்தில், இந்துக் கோவில்களில், மற்ற வழிபாட்டு இடங்களில் தமிழ் இல்லை.

இலக்கிய - இலக்கண வளம் மிக்க - சொற்களஞ்சியம் நிரம்பி வழிகிற செம்மொழி, நம் தமிழ்மொழி. அவரவர் தாய்மொழி அவரவர்க்கு உயிரானது. நம் தாய்மொழியான தமிழ், நம் ஒவ்வொருவர்க்கும் உயிரானது.

**நம் தமிழை வாழ வைக்காதவர்கள் மீண்டும் மீண்டும் ஆட்சிக்கு வந்து, மேலும் மேலும் செல்வந்தர்களாக - செல்வாக்கு உள்ளவர்களாக ஆனதை, நாம் எல்லோரும் நேரில் கண்டோம்.**

இத்தோடு நமக்கு நல வாழ்வு வந்துவிடுமா?

வேளாண்மைக்கும், குடிநீருக்கும் இந்த ஏப்பிரல் மாதமே தண்ணீர் தட்டுப்பாடு வந்துவிட்டது.

இந்தியாவிலுள்ள மொத்தம் 670 மாவட்டங்களில், 10 மாநிலங்களிலுள்ள 254 மாவட்டங்களில், 2,55,923 ஊர்களில் உள்ள 33 கோடி மக்கள் இன்று குடிநீரின்றித் தவிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், பெரம்பலூர், அரியலூர், காவிரிப் பாசனக் கடைமடைப் பகுதிகளில் உள்ள மக்கள் ஒரு போகம் கூடப் பயிரிட நீரின்றி, குடிக்க நீரின்றித் தத்தளிக்கிறார்கள்.

தமிழகத்திலும், ஆந்திராவிலும் பெரிய, சிறிய ஏரிகள் அதிகம்.

தமிழகத்தில் பெரிய, சிறிய ஏரிகள் 41,000 உள்ளன.

2015 நவம்பர், திசம்பர் வெள்ளப் பாழுக்கு திருவள்ளூர், சென்னை, கடலூர், தஞ்சை, தூத்துக்குடி, புதுவை முதலிய மாவட்டங்கள் இரை ஆயின.

இப்போது நிலத்தடி நீர் சென்னையில் மட்டும் உயர்ந்திருக்கிறது. ஆனால் தாமிரபரணி, வைகை, கொள்ளிடம், காவிரி, தென்பெண்ணை, வெள்ளாறு, சின்னாறு, பாலாறு இவற்றை - கடந்த 49 ஆண்டுகளாக ஆண்ட திராவிடக் கட்சிகள் - 15, 20 அடி ஆழத்துக்கு மணல் அள்ளி அள்ளி ஆளும்கட்சி - எதிர்க்கட்சி இருதரப்பாரும் கூட்டுச் சேர்ந்து ஆறுகளைப் பாழடித்துவிட்டார்கள்.

இதனால் முதலில் குடிநீர்ப் பஞ்சம் வந்துவிட்டது. இது, போர்க்கால விசையில் நீக்கப்பட, இனிவரப்போகும் அரசை நாம் எல்லோரும் நெருக்கிட வேண்டும்.

வேளாண்மை ஒரு போகம் பாசனப் பகுதியில் நடைபெற ஏதுவாக - ஏரிகளைத் தூர்வாரத் தவறியவர்களும், தூர்வாரியதாக அதிகாரிகளைக் கையாளாள்களாக ஆக்கிக் கொண்டு, பணத்தைப் பெற்றுக்கொண்டு, ஏரிகளைத் தாம் பாளங்கள் போல் ஆக்கியவர்களும் திராவிடக் கட்சியினரே!

வனத்துறைத் தோப்புகளை வனத்துறை அதிகாரிகளின் துணையுடன் வெறுங் கானகங்களாக ஆக்கி, மழை வராமல் தடுத்தவர்களும், சுற்றுச்சூழலைப் பாழ்படுத்தியவர்களும் இவர்கள் தாம்.

பாலங்கள், சாலைகள், கட்டடங்கள் கட்டும் - அமைக்கும் ஒப்பந்தக்காரர்கள் அமைச்சர்கள் - சட்டமன்ற உறுப்பினர்கள் - அதிகாரிகள், ஆகியோர் கூட்டணி அமைத்துக் கொண்டு, இவற்றை வீணடித்தவர்கள் நம்மை ஆண்ட இவர்களே!

தனியார் நடத்தும் 540க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள், 20 மருத்துவக் கல்லூரிகள், 3000க்கு மேற்பட்ட மெட்ரிக் பள்ளிகள், மற்ற கல்வி நிறுவனங்களை நடத்துவோர் நேற்று வரையிலும் இன்றும் இலக்கம், கோடி வரையில் பணக் கொள்ளை அடிக்கவும், அவர்கள் ஆங்கில மொழி வழியில் பாடங்களைக் கற்பிக்கவும் துணை போன அதிகாரம் படைத்த கும்பலினர் இவர்களே!

**தமிழ்நாட்டில் எட்டாம் வகுப்புக்குமேல் பெரிய பட்டப் படிப்பும், தொழிற் படிப்பும் படித்தவர்கள் ஏறக்குறைய ஒரு கோடி ஆண்களும் பெண்களும் எந்த வேலையும் இன்றித் தவிக்கின்றனர்.**

தமிழகத்தில் ஒரு வகுப்புக்கு ஓர் ஆசிரியர் - ஒவ்வொரு பாடத்துக்கும் ஓர் ஆசிரியர் என, அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் சில இலக்கம் பேர், இது வரையில் வேலைக்கு அரசினால் அமர்த்தப் பட்டிருக்க வேண்டும்.

அப்படி வேலைக்கு அமர்த்த பல இலட்சம், இடம் மாறுதல் பெறச் சில இலட்சம் ரூபா கைக் கூலி என்பது, 1990களிலேயே தமிழகத்தில் வழக்கத்துக்கு வந்துவிட்டது.

இந்த அட்டூழியங்களைச் செய்து பணக்கொள்ளை அடித்தது போதாமல், 45 ஆண்டுகளுக்குமேல் 6800க்கு மேற்பட்ட சாராயக் கடைகளைத் திறந்து, 7.5 கோடி மக்களில் 5 கோடி மக்களை மிடாக்குடியர்களாக ஆக்கியவர்கள் - வள்ளுவத் தைக் கற்ற டாக்டர் கலைஞர், புரட்டு(சி) நடிகர் ம.கோ. இரா., கவர்ச்சி நடன நாயகி செல்வி செயலலிதா ஆகியோரே!

தமிழகத்திலுள்ள 64 பொதுத்துறை நிறு வனங்களும், இந்தியாவிலுள்ள 247 பொதுத் துறை நிறுவனங்களும் - அந்த ஒவ்வொரு துறை யிலும் உயர் பொறுப்பில் இருந்த பார்ப்பனர் - காயஸ்தர் - நாயர் - வேளாளர் போன்ற மேல் சாதிக்காரர்களால் 1991 முதல் கொள்ளையடிக் கப்பட்டு இழப்புக்கு ஆளாக்கப்பட்டுவிட்டன.

அரசுப் பணிகளில் தமிழ்நாட்டில் 69 விழுக் காடு, 1980, 1989 முதல் நடப்பில் உள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் பங்கு 50; பட்டியல் வகுப்பினர் - பழங்குடியினர் பங்கு 19.

ஆனால் மற்ற எல்லா மாநிலங்களிலும் 1994 முதல்தான், மாநில அரசுகளில், பிற்படுத்தப் பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு தரப்படுகிறது. 1970 முதல், பட்டியல் - பழங்குடி வகுப்பினர்க்கு விகிதாசாரம் உண்டு.

இவை பற்றி, படித்த இளைஞர்களும், மாணவ மணிகளும், ஒடுக்கப்பட்ட எல்லா வகுப்பினரும் ஒன்றை உணர வேண்டும்.

தொடர்வண்டித் துறை, அஞ்சல் துறை - தொலைப்பேசித் துறை, காப்பீட்டுத் துறை - தேசிய மயமாக்கப்பட்ட 22 வங்கிகள் துறை, பல்கலைகள் இவையெல்லாம் மிகப் பெரிய வேலை வாய்ப்பு உள்ள நிறுவனங்கள். இவை மய்ய அரசு நிறுவனங்கள்.

இவற்றில் பிற்படுத்தப்பட்டோருக்குப் பெயர ளவுக்கு, 1994 முதல், இடஒதுக்கீடு அளிக்கப் படுகிறது. இது பெரிய ஏமாற்று வேலை. எத னால்?

பழைய சென்னை மாகாணத்தில், நீதிக்கட்சி ஆட்சியில் அரசு வேலையிலும், அரசுக் கல்வி யிலும் 1928 முதல் 100 விழுக்காடு இடங்களும் - முற்பட்ட வகுப்பு உள்ளிட்ட எல்லா வகுப்பு களுக்கும் பங்கிட்டுத் தரப்பட்டன. இந்தப் பங் கீட்டு முறை வெள்ளையர் ஆண்ட 1947 வரை யிலும், காங்கிரசு ஆட்சியில் 1954 வரையிலும் நீடித்தது.

1955க்குப் பிறகு இங்கு இம்முறை மாறியது.

இப்போது என்ன நமக்குத் தேவை?

**இந்திய அரசின் எல்லாக் கல்வியிலும், எல்லா வேலையிலும் 100 விழுக்காடு இடங் களையும்; மாநில அரசுகளின் எல்லாக் கல்வி யிலும், எல்லா வேலையிலும் 100 விழுக் காடு இடங்களையும்;**

1. **எல்லா மதங்களிலும் உள்ள பிற்படுத் தப்பட்டோருக்கு;**
2. **எல்லா மதங்களிலும் உள்ள முற்பட்டோ ருக்கு;**
3. **பட்டியல் வகுப்பினருக்கு;**
4. **பட்டியல் பழங்குடியினர்க்கு - அவரவர் மக்கள் தொகை விழுக்காட்டுக்குச் சம மாகப் பிரித்துக் கொடுக்க வகை செய்து, அரசமைப்புச் சட்ட விதிகளைத் திருத் துங்கள் என, நாம் இந்திய அரசிடம் கோரிப் போராட வேண்டும். தமிழ்நாட்டு அரசினரும் போராடிடக்கோரி, நாம் போராட வேண்டும்.**

**இளைஞர்களும் மாணவ மணிகளும் தாம் மொத்த மக்கள் தொகையில் கணிச மான பகுதியினர்.**

நீங்கள் தான் கண்தெரிந்த வழிகாட்டிகள்! நீங்கள் தான் வருங்காலப் பெரியவர்கள்! நீங் கள் தான் வருங்கால சமூகத் தலைவர்கள்!

நாம் முயன்றால் முடியும் - ஒன்றுபட்டு நாம் போராடினால் எதையும் சாதிக்க முடியும் - முடியும் எனத் தன்னம்பிக்கை கொள்ளுங்கள்!

வாக்குக் கேட்க வருவோரை, இவை பற்றிக் கேளுங்கள்!

நாம் வெகுமக்கள். நம்மை இதுகாறும் ஏய்த்த வர்கள், தேர்தல் கட்சியினர்!

சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

1-5-2016 - **வே. ஆனைமுத்து**

# போராட்டங்களின் மூலமே உரிமைகளை வென்றெடுக்க முடியும்- பெங்களூரு தொழிலாளர்களின் மேநாள் அறைகூவல்

- க. முகிலன்

முதலாளித்துவத்தின் மீதான போர் அறிவிக்கை யாக (பிரகடனமாக) மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை 1848 பிப்ரவரியில் வெளியிடப் பட்டது.

1760 முதல் நீராவி சக்தியைக் கொண்டு இயந்தி ரங்கள் மூலமாக உற்பத்தி செய்தல் என்கிற நடை முறை ஏற்பட்டது. முதலில் பஞ்சாலைகளும், நூற்பாலைகளும் நெச வாலைகளும் ஏற்பட்டன. பெரிய கூரையின் கீழ் ஒரே தொழிற்சாலையில் நூற்றுக் கணக் கில் தொழிலாளர்கள் வேலை செய்யும் புதிய முதலாளிய இயந்திர உற்பத்தி முறை உண் டானது.



*பெங்களூரு-ஒசூர் நெடுஞ்சாலையில் பெண் தொழிலாளர்கள் சாலை மறியல் போராட்டம்*

இத்தொழிற்சாலைகளில் பதினான்கு, பதினாறு, பதினெட்டு மணிநேரம் என்கிற அளவில் தொழிலா ளர்கள் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர். இவ்வாறு கசக்கிப் பிழியப்பட்டதால் பல்லாயிரக்கணக்கில் தொழி லாளர்கள் தொழிற்சாலைகளிலேயே செத்து மடிந்தனர். இக்கொடுமையை எதிர்த்திட தொழிலாளர்கள் துணிவு கொண்டனர்.

தங்கள் முதல் கோரிக்கையாக “ஒரு நாளைக்குப் பத்து மணிநேர வேலை” என்பதை முன் வைத்து அமெரிக்காவிலும், அய்ரோப்பிய நாடுகளிலும் பல நகரங்களில் தொழிலாளர்கள் போராடத் தொடங்கினர். முதலாளிகள் தொழிலாளர்கள் மீது கொடுமையான ஒடுக்குமுறைகளை ஏவினர். அரசுகள் முதலாளிகளுக் குச் சார்பாகவே செயல்பட்டன.

இந்நிலையில் 1864 செப்டம்பர் 28 அன்று மார்க்சு, எங்கெல்சு ஆகியோரின் வழிகாட்டுதலுடன் அய்ரோப் பாவின் பல நாடுகளிலிருந்து வந்து குழுமியிருந்த தொழிலாளர்கள் கூட்டத்தில் இலண்டன் மாநகரின் செயின்ட் மார்டின் மண்டபத்தில் சர்வதேசத் தொழிலாளர் சங்கம் (International Workings Men's Association) தோற்றுவிக்கப்பட்டது. இது தமிழில் ‘முதல் அகிலம்’ என்று அழைக்கப்படுகிறது. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் செயல்பாடுகள் தொழிலாளர்கள் மேலும் போர்க் குணத்துடன் தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடவும், தொழிற்சங்கங்களை வலிமையாகக் கட்டியமைக்கவும் உந்து விசையாக அமைந்தன.

1806 இல் அமெரிக்காவில் பிலடெல்பியா நகரில் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கமே உலகில் முதலாவது தொழிற்சங்கம் எனக் கருதப்படுகிறது. அமெரிக்காவில் பால்டிமோர் என்ற இடத்தில் 1866 ஆகத்து 20 அன்று அமெரிக்காவில் உள்ள தொழிற்சங்கங்களை இணைத் துத் தேசிய தொழிற்சங்கம் வில்லியம் எச்.சில்விஸ் என்பவரின் முன்முயற்சியால் உருவாக்கப்பட்டது. இவரே தேசிய தொழிற்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் இலண்டனில் இருந்த முதல் அகிலத்தின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டி ருந்தனர்.

தேசிய தொழிற்சங்கத்தின் முதல் மாநாடு அதே ஆண்டில் (1866) நடைபெற்றது. அம்மாநாட்டில், “அமெரிக்கா முழுமைக்கும் 8 மணிநேர வேலைநாள் என்பதைச் சட்டமாக்க வேண்டும். அதன் மூலம் மட்டுமே முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து இந்நாட்டின் உழைப்பை விடுவிக்க முடியும். இந்த மாபெரும் பயனை அடைய நாம் நம்முடைய ஆற்றல் அனைத்தையும் ஒன்று திரட்டத் தீர்மானிக்கிறோம்” என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1877ஆம் ஆண்டு 8 மணிநேர வேலை நாள் கோரிக்கையை முன்வைத்து அமெரிக்காவில் பல நகரங்களில் தொழிலாளர்கள் போராடினார்கள். அரசும் முதலாளிகளும் கூட்டுச் சேர்ந்து அப்போராட்டங்களை நசுக்கினர். தொழிலாளர்கள் மீண்டும் வீறு கொண்டெ ழுந்தனர். அமெரிக்கா முழுவதும் 8 மணிநேர வேலை நாள் என்பதைச் சட்டமாக்கிடக் கோரி 1866 ஆம் ஆண்டு மே முதல் நாள் அமெரிக்கா முழுவதும் தொழி லாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதுடன் பேரணிகள், கூட்டங்கள் நடத்துவது என்று தேசிய தொழிற்சங்கம் முடிவெடுத்தது.

சிகாகோ நகரில் 1866 மே அன்று ஊர்வலமாகச் சென்ற தொழிலாளர் களை அரசும் முதலாளிகளும் கூட் டாக ஏவிய கூலிப்படையினர் தாக்கி னர். இதைக் கண்டித்து மே 3ஆம் நாள் தொழிலாளர் நடத்திய கண்ட னக் கூட்டத்தில் காவல்துறையினர் தொழிலாளர் களைக் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கினர். காவல் துறை யைக் கண்டித்து மே 4 அன்று வைக்கோல் சதுக்கம் என்ற இடத்தில் தொழிலாளர்கள் மாபெரும் கண்டனக் கூட்டம் நடத்தினர். அப்போது கூட் டத்தில் ஒரு வெடிகுண்டு வீசப்பட் டது. இதனால் ஏற்பட்ட மோதலில் படை அதிகாரி ஒருவரும் ஏழு காவல் துறையினரும், நான்கு தொழி லாளர்களும் கொல்லப்பட்டனர். வைக்கோல் சதுக்கத் தில் தொழிலாளர்களின் குருதி ஆறு போல் ஓடியது. சிகாகோ தொழிலாளர் தலைவர்கள் சிலர் தூக்கிலிடப் பட்டனர். பலருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. வைக்கோல் சதுக்கத்தில் தொழிலாளர்களின் குருதி தோய்ந்த சட்டையே செங்கொடியானது.



*போராட்டத்தில் ஈடுபட்ட பெண் தொழிலாளர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கிய ஆண் காவலர்கள்*

இரண்டு ஆண்டுகள் கழித்து 1888இல் திசம்பரில் கூடிய தொழிலாளர் கூட்டமைப்பு சிகாகோ நகரில் மே மாதம் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதை-தொழிலாளர் உரிமை நாளாகக் கொண்டாடுவது என்று முடிவெடுத் தது. 1889இல் பாரிசு நகரில் உலகின் பல நாடுகளி லிருந்து வந்திருந்த சோசலிசத் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் 1890 மே முதல் நாளை சர்வ தேச தொழிலாளர் நாளாகக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு எங்கெல்சு உந்து விசை யாக விளங்கினார். 1890ஆம் ஆண்டு அய்ரோப் பாவிலும் அமெரிக்காவிலும் மே முதல் நாளை உலகத் தொழிலாளர் நாளாகக் கொண்டாடினர். இன்றுவரை உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் மே முதல் நாள் தொழிலாளர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொடர்ந்து போராட்டகள் நடத்தியதன் மூலமே தொழிலாளர்கள் பல உரிமைகளையும், பல நலத்திட்டங் களையும் பெற்றனர். குறிப்பாக அய்ரோப்பாவில் 1930 களுக்குப்பின் தொழிலாளர்களின் வாழ்க்கையில் உறுதி செய்யப்பட்ட நலக்கூறுகள் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டன. அவை தொழில் வளர்ச்சி பெற்ற நாடு கள் என்பதாலும் கல்வி அறிவும், சமத்துவ, சுதந்தர உணர்வும் மிக்க நாடுகள் என்பதாலும், தொழிலா ளர்கள் ஒரே வர்க்கமாக அணிதிரண்டு போராடினர். பல பயன்களைப் பெற்றனர்.

இந்தியாவில் வர்க்க உணர்வு ஏற்படாதவாறு மக்கள் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட சாதிகளாகப் பிளவுண்டு கிடக்கின்றனர். பெரும்பான்மை மக்கள் இன்றும் வேளாண்மையைச் சார்ந்தே வாழ்கின்றனர். மொத்த உழைப்பாளர்களில் 90 விழுக்காட்டினர் அமைப்பு சாராத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். 10 விழுக் காட்டினர் மட்டுமே அமைப்பு சார்ந்த (Organised Sector) தொழிலாளர்கள். 1991 முதல் தாராளமயம், தனி யார்மயம், உலகமயம் என்கிற கொள்கையை நடுவண் அரசும், மாநில அரசுகளும் நடைமுறைப்படுத்தத் தொடங்கிய பிறகு, அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் பெற்றிருந்த உரிமைகளும், காப்பு நலன்களும் பறிக்கப்பட்டு வருகின்றன. இதில் மன்மோகன் சிங்கை விஞ்சும் வகையில் நரேந்திர மோடி அரசு செயல்பட்டு வருகிறது.

2016-17 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை யை நிதி அமைச்சர் அருண் ஜெட்லி நாடாளுமன் றத்தின் முன்மொழிந்தபோது, தொழிலாளர்கள் பணி யிலிருந்து ஓய்வுபெறும்போது, அவர்களுடைய வருங் கால வைப்பு நிதி சேமிப்புக் கணக்கில் உள்ள மொத்தத் தொகையில் அய்ந்தில் மூன்று பங்குத் தொகை மீது வரி விதிக்கப்போவதாக அறிவித்தார். இக்கருத்தைக் கண்டித்து சமூக வலைதளங்களில் இலட்சக்கணக் கானோர் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர் எனவே ஒரு கிழமைக்குள் வரி விதிக்கும் இந்த எண்ணத்தைக் கைவிடுதாக நடுவண் அரசு அறிவித்தது.

நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைப் பதற்கு முன்பே 2016 பிப்ரவரி 10 அன்று தொழிலா ளர்கள் தங்கள் வருங்கால வைப்பு நிதியில் சேமித் துள்ள பணத்தை அவர்கள் எடுப்பதற்குப் பல கட்டுப் பாடுகளை விதித்தது.

இந்த அறிக்கைக்கு முன்பு இருந்த நிலையைப் பார்ப்போம். அமைப்பு சார்ந்த தொழிலாளரின் அடிப் படை ஊதியத்திலிருந்து தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் சேமிப்புக்காக 12 விழுக்காடு தொகை பிடித்தம் செய்யப்படும். தொழிலாளி பணியாற்றும் நிறுவனம், தொழிலாளர் நலனுக்காக, அதன் பங்காக 12 விழுக்காடு தொகையை அளிக்கும். அமைப்புச் சார்ந்த தொழில் நிறுவனம் என்கிற வரையறைக்குள் உள்ள ஒரு நிறுவனத்தில்-20 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்தால், தொழிலாளர் ஊதியத்தில் 12% பிடித்தமும், நிறுவனத்தில் சார்பில் 12% தொகை யும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் சேமிப் பாகச் செலுத்த வேண்டும். தொழிலாளர்கள் தங்களின் நெருக்கடியான தேவைக்குத் தாங்கள் செலுத்திய சேமிப்புத் தொகையை முழுவதும் கூட எடுத்துக் கொள்ள லாம். ஆனால் நிறுவனம் தொழிலாளருக்காகச் செலுத் திய தொகையை அவர் 58 அகவையை எய்திய பிறகே எடுக்க முடியும்.

10-2-2016 அன்று நடுவண் அரசின் தொழி லாளர் நலத்துறை வெளியிட்ட ஆணையின்படி, இனி தொழிலாளர்கள் வேலையிலிருந்து நின்றுவிட்டால், அவர்கள் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமிப்புத் தொகையைகூட 58 அகவைக்குப் பிறகே அவர் எடுக்கமுடியும். இதற்குத் கடுமையான எதிர்ப்பு கள் தெரிவிக்கப்பட்டன. அதன்பின், தொழிலாளர் தன் குடும்ப உறுப்பினர்களின் கல்வி, மருத்துவம், திரு மணம், வீடு கட்டுதல் அல்லது வாங்குதல் ஆகிய செலவு களுக்கு மட்டும் அவர் செலுத்திய தொகையிலிருந்து பணத்தைப் பெறலாம் என்று நடுவண் அரசு கூறியது. ஆனால் இதை இந்திய அளவில் தொழிலாளர்கள் ஏற்கவில்லை.



பெங்களூவில் ஆடை தயாரிப்பு நிறுவனங்களில் 5 இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவர்களில் கிட்டத்தட்ட 90 விழுக்காட்டினர் பெண்கள். இவர்களில் 18-2-16 அன்று ஒசூர் நெடுஞ்சாலை யிலும் பிற முதன்மையான சாலைகளிலும் மறியல் செய்து போராடினர். உயர்தொழில்நுட்ப நிறுவனங் களில் அதிக ஊதியத்திற்காக ஒரு நாளைக்கு 10 மணி நேரத்துக்குமேல் வேலை செய்யும் படித்த அலுவலர் கள் ஆடை தயாரிப்புப் பெண் தொழிலாளர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திப் பேசினர். மாதத் தில் 26 நாள்கள் வேலை செய்தால் ரூ.7,000-10,000 சம்பளம் பெறுகின்றனர். டெனிம் (Denim) நிறுவனத்தில் ஒரு பெண் தொழிலாளி ஒரு நாளில் 80-90 முழுக்கால் சட்டைகளைத் தைத்து முடிக்க வேண்டும். 60 முழுக்கால் சட்டை மட்டுமே ஒரு நாளில் தைக்க முடியும். ஆனால் இவர்கள் 80 தைக்குமாறு கட்டாயப்படுத்தப்படுகின்றனர். காவல்துறையினர் இவர் களைத் தாக்கினர். நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலா ளர்கள் கைது செய்யப்பட்டனர். இதனால் சினமுற்ற இப்பெண் தொழிலாளர்கள் 19-2-16 அன்று பெங்களூர் நகரின் இயக்கமே நிலைகுலையும் வகையில் போராடி னர். காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டனர். வாகனங்கள் பல எரிக்கப்பட்டன. அன்று இரவே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் 10-2-16 அன்று விதிக்கப்பட்ட கட்டுப்பாடு களை விலக்கிக் கொள்வதாக அறிவித்தார்.



எனவே போர்குணத்துடன் அஞ்சாமல் போராடுவ தன் மூலமே உரிமைகளை மீட்டெ டுக்க முடியும் என்பதை பெங்களூரு ஆடை தயாரிப்பு நிறுவனங்களின் பெண் தொழி லாளர்கள் மேநாள் செய்தியாக அறிவித் துள்ளனர்.

# நடந்தது நடந்தபடி.....

## சங்கரின் துணைவி கௌசல்யா வாய்மொழி! குமரலிங்கம் தீண்டப்படாத வகுப்பினரின் இன்றைய வாழ்நிலை என்ன?

குமரலிங்கம், உடுமலைப்பேட்டையை அடுத்து உள்ள ஒரு பேரூர்.

உடுமலைப்பேட்டையிலிருந்து 8-4-16 காலை 9.30 மணிக்கு வே. ஆனைமுத்து, சேலம் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் செ. ஆனையப்பன், உடுமலைப்பேட்டையைச் சார்ந்த தமிழியக்க - பெரியார் கொள்கைச் செயற்பாட்டாளர்கள் கொழுமம் ஆதி, உடுமலை அருட்செல்வன் ஆகிய நால்வரும் புறப்பட்டோம். வழியில் குமரலிங்கம் ஈசுவரன் எங்களுடன் சேர்ந்து கொண்டார்.

சிறீ வெங்கடேசபுரம், மலையாளக் கவுண்டனூர், உரல்பட்டி, சாமராயப்பட்டி, கொழுமம் ஆகிய ஊர்கள் வழியாக, நேரே குமரலிங்கம் அடைந்தோம்.

13-3-16க்குப்பிறகு 10, 12 தடவைகள், அருட் செல்வன் கொலை செய்யப்பட்ட சங்கர் வீட்டுக்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறியிருக்கிறார். கொழுமம் ஆதி, குமரலிங்கம் மேல்நிலைப் பள்ளியில் கல்வி பெற்றவர்; அவர் வயதிலுள்ள பலரையும் அவருக்குத் தெரியும். ஈசுவரன் நல்ல பொதுநல உணர்வு உள்ளவர்; உள்ளூர்க்காரர்.

மகிழுந்தை சாவடித் தெருவில் நிறுத்திவிட்டு, நாங்கள் அய்வரும் நேரே சங்கர் வீட்டுக்குச் சென்றோம்.

சிலர் அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்தனர். காவலுக்கு இருந்த காவலர்களுள் ஒருவரும் வந்து விட்டார்.

கீழ்ப்புறத் திண்ணையில் சோகமே வடிவமான கௌசல்யா வந்து அமர்ந்தார். அவருக்கு எதிரே மேல் புறத் திண்ணையில் நான் அமர்ந்தேன். கொழுமம் ஆதி, ஆனையப்பன் ஆகியோர் படம் எடுக்க வாட்டமாக அமர்ந்து கொண்டனர்.

சங்கரின் தம்பி விக்னேசுவரனும், சங்கரின் அப்பாயி (70)யும் கீழ்ப்புறத் திண்ணையில் அமர்ந் திருந்தனர். சங்கரின் தந்தை சி. வேலுச்சாமி, கௌசல் யாவை ஒட்டி நின்ற படியே, தன் குடும்பம் பற்றிக் கூறினார் :

‘‘எனக்கு வயது 47. என் பூட்டன் காலம் முதல் மூன்று தலைமுறைகளாக இங்கே வாழ்கிறோம்.



*சாதி ஆணவ வெறிச்செயலால் கொலையுண்ட சங்கரின் மனைவி கௌசல்யாவுடன் வே.ஆனைமுத்து*

இந்த வீட்டுமனை 2.5 செண்ட்; என் தந்தையுடன் பிறந்த நான்கு பேருக்கும் இது சொந்தம்.

என் மனைவி 3 ஆண்டுகளுக்குமுன் இறந்து விட்டார். என் தாயார் - இதோ உட்கார்ந்திருக்கிறவர் 65 (அ) 70 வயது இருக்கும். என் பூட்டன் காலம் முதல் எங்கள் குடும்பத்துக்கு வேளாண் நிலம் இல்லை. கூலி வேலைக்குப் போய்ச் சம்பாதித்துத் தான் சாப்பிடுகிறோம். பிள்ளைகளைப் படிக்க வைக் கிறோம். எனக்கு 3 மகன்கள் மட்டுமே.

பெரியவன் சங்கர், பொறியியல் 4ஆம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தான். இரண்டாம் மகன் விக் னேசுவரன், கணிப்பொறி அறிவியல் இரண்டாம் ஆண்டில் படிக்கிறான். மூன்றாவது மகன் 11ஆம் வகுப்பில் படிக்கிறான்.

நான் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சார்ந்தவன். எங்கள் சமூகத்தார் இவ்வூரில் 1500 பேருக்கு மேல் இருக்கிறார்கள். இவர்களில் பெரும் பாலோர் 10ஆம் வகுப்புப் படித்திருக்கிறார்கள். இதில் 25 விழுக்காட்டுப் பேர் பட்டப் படிப்புப் படித்திருக் கிறார்கள். எங்கள் சமூகத்தில் 20 குடும்பத்தாருக்கு அமராவதி ஆற்றுப் பாசனப் பகுதியில் புன்செய் 1 ஏக்கர், 2 ஏக்கர் வீதம் இருக்கிறது.

என் மருமகள் கௌசல்யா, வீட்டிலிருந்து கொண்டே பட்டப் படிப்பை தபால் மூலம் படிக்க விரும்புகிறாள்.

நாங்கள் அவரைப் படிக்க வைப்போம்; எல்லா வசதி களையும் செய்து தருவோம்'' எனக் கூறினார்.

இவ்வளவு விவரங்களையும் கௌசல்யா உன்னிப் பாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அமைதியாக இருந்த அந்தப் பெண், முதலில் வெட்டப்பட்டுத் தையல் போடப் பட்டிருந்த தன் இடக்கையை என்னிடம் நீட்டினார். உடனே நான் தலையைப் பிடித்துக் குனிய வைத்துத் தடவிப் பார்த்தேன். 4, 5 வெட்டுக் காயங்கள் குறுக்கும் நெடுக்குமாக இருந்தன; தையல் போடப்பட்டுக் காயங் கள் காய்ந்திருந்தன.

ஆனால் பிடரியில் புண் இருப்பதாகவும் ஆற வில்லையென்றும் கௌசல்யா சொன்னார்.

''நடந்தது நடந்தபடி சொல்லம்மா'' என்று நான் கேட்டேன்.

தடுமாற்றம் ஏதும் இல்லாமல், பின்கண்ட எல்லாச் செய்திகளையும் கௌசல்யா சொன்னார்:

''எனக்கும் சங்கருக்கும் 2014இல் அறிமுகம் ஏற்பட்டது. நாங்கள் நெருங்கப் பழகி வந்தோம்.

12.7.2015 அன்று, நானும் சங்கரும் அவருடைய நண்பர்களுடன் சென்று, பழனியில் பாதை விநாயகர் கோவிலில் திருமணம் செய்து கொண்டோம்.

திருமணம் நடப்பதற்கு 2 நாள் முன்பு நானும் சங்கரும் சேர்ந்து பேருந்தில் வந்த செய்தியை, அந்தப் பேருந்து நடத்துநர் என் பெற்றோரிடம் சொல்லிவிட் டார். அன்றைக்கே என் தாயார், அந்தப் பையனை நீ நம்ப வேண்டாம் என்று சொல்லிவிட்டு, வேறு மாப் பிள்ளை பார்க்க முயற்சித்தார். அது தெரிந்தவுடனே தான், நான் சங்கரைத் திருமணம் செய்து கொண் டேன்.

திருமணம் முடிந்ததும் உடனடியாக, உடுமலைப் பேட்டை மகளிர் காவல் நிலையத்துக்கு வந்து, எங்கள் உயிருக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று விண்ணப் பம் தந்தோம். அன்றைக்கே இரண்டு வீட்டுப் பெற் றோர்களையும் அழைத்து காவல் நிலைய அதிகாரிகள் விசாரித்தனர். காவல் நிலையத்தில் இருக்கும்போது நான் என் பெற்றோருடன் போக விரும்பாததால், என்னுடைய நகைகள், உடைகளைக் கழற்றித்தரச் சொல்லி என் பெற்றோர் வாங்கிச் சென்றுவிட்டனர்.

பிறகு குமரலிங்கம் பெரியவர்கள் நால்வர் எங் களுக்குப் பாதுகாப்பாக வர, நாங்கள் சங்கர் வீட்டுக்குச் சென்றோம்; குடும்பம் நடத்தினோம்.

ஒரு வாரம் கழித்து, என் அம்மாவைப் பெற்ற தாத்தா தொடர்ந்து 3 நாள்கள் குமரலிங்கத்துக்கு எங்கள் வீட்டுக்கு வந்தார்.

அவர் மூன்றாந்தடவை வந்த போது, ''எனக்கு மயக்கமாக இருக்கிறது. எதாவது ஒரு மருத்துவ மனையில் என்னைச் சேர்த்துவிடு'' என்று சொன்னார்.



*குமரலிங்கத்தில் சங்கர் குடும்பத்தினருடன் வே. ஆனைமுத்து*

நானும் சங்கருடைய ஒன்றுவிட்ட அக்காவும் என் தாத்தாவை அழைத்துக் கொண்டுபோய் மடத்துக் குளம் தனியார் மருத்துவமனையில் சேர்த்துவிட் டோம். அங்கிருந்து என் தாத்தா என்னை கார் மூலம் திண்டுக்கல் உறவினர் வீட்டுக்குக் கடத்திச் சென்றார்; அங்கு 3 நாள் தங்க வைத்திருந்தார்; நான் அணிந் திருந்த தாலி, மிஞ்சி எல்லாவற்றையும் கழற்றித் தரச் சொல்லி, அவற்றைத் தீயில் போட்டு எரித்துவிட்டார் கள்.


பிறகு வருச நாட்டில் உள்ள சொந்தக்காரர் வீட்டுக்கு என்னை அழைத்துப் போனார்கள். அங்கு மந்திரித்து மை வைக்கும் சாமியாரிடம் அழைத்துச் சென்றார்கள். அந்தச் சாமியார் என் நெற்றி, பிடரியில் மை வைத்தார். அத்துடன் அந்த மையை சோற்றில் கலந்து தந்து என்னைச் சாப்பிடச் சொன்னார்கள்; நான் அதைச் சாப்பிடவில்லை. இரண்டு நாள் எதை யுமே சாப்பிடவில்லை.

பிறகு என் தாத்தா திருப்பூரில் உள்ள என் பெரியப்பா வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

என் தாத்தா என்னை அழைத்துப் போன இரண்டு நாள் கழித்து, சங்கர், ''என் மனைவியை யாரோ கடத்திக் கொண்டு போய்விட்டார்கள்; அவளைக் கண்டுபிடித்துத் தாருங்கள்'' என்று மடத்துக்குளம் காவல் நிலையத்தில் விண்ணப்பம் தந்தார்.

காவல்துறை அதிகாரிகள் சங்கர் வீட்டுக்கு வந்து, ''ஜீப் மூலமாகப் பெண்ணைத் தேடிப்போக வேண்டும். டீசல் செலவுக்கு ரூபாய் 4000 கொடுங்கள்'' என்று கேட்டு வாங்கிக் கொண்டனர்.

காவல் துறை அதிகாரிகள் பழனியில் என் சொந்தக் காரர் வீட்டில் தங்கிக்கொண்டு, என் அப்பாவுக்குத் தொலைப்பேசி செய்து, ''நீங்கள் 20,000 ரூபாய் கொடுங்கள்; சங்கரை அடித்து விரட்டிவிடலாம்'' என்று கூறிவிட்டு, உடனே என்னிடம் பேசி, ''நீ உன் அப்பா வீட்டுக்குப் போய் விடு'' என்று அறிவுரை கூறினர்.



என் அப்பா காவல்துறைக்குப் பணம் தரவில்லை.

என் பெற்றோர் ஒரு வழக்கறிஞருடன் திருப்பூருக்கு வந்தனர். திருப்பூரில் வழக்குப் போட்டு, எங்கள் இருவரையும் பிரித்துவிடலாம் என்பது அவர்கள் திட்டம்.

வழக்கறிஞர், "சங்கருடன் போகிறாயா, அப்பாவுடன் போகிறாயா" என்று என்னிடம் கேட்டார்.

நான், "அப்பாவுடன் போகிறேன்" என்று வேண்டுமென்றே அப்போது சொன்னேன். அவர் வற்புறுத்திக் கேட்டவுடன், "நான் சங்கரோடு தான் போவேன்" என்று வழக்கறிஞரிடம் சொன்னேன். இதை என் பெற்றோர் மறைவாக இருந்து கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

வழக்கறிஞர் உதவியால் சங்கருடன் தொலைப் பேசியில் பேசினேன். திருப்பூரில் பெரியப்பா வீட்டில் இருப்பதாகச் சொன்னேன்.

எந்த இடம் என்று சங்கர் விவரம் கேட்டார். அது விவரம் தெரியவில்லை என்று சொன்னேன்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் பெற்றோர்கள், "இந்தப் பெண்ணை உயிரோடு வைத்திருப்பதைவிட - இவளை வீட்டுக்கு அழைத்துச் செல்வதைவிட, நாமே மருந்து கொடுத்துக் கொன்றுவிடலாம்" என்று பேசிக்கொண்டார்கள்.

பிறகு அவர்கள் தனியே பேசிவிட்டு, என்னை வழக்கறிஞர் மற்றும் தாத்தாவுடன் திருப்பூரிலிருந்து போகச் சொல்லிவிட்டனர்.

திருப்பூரிலிருந்து நேரே மடத்துக்குளம் காவல் நிலையத்துக்கு வந்தோம். அங்கு வந்தவுடன், "நாங்கள் தான் உன்னைக் கடத்தி வந்தோம் என்று யாரிடமும் சொல்லக்கூடாது" என்று கூறி, மிரட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

திருப்பூரில் பேருந்தில் ஏறிய உடனே, மடத்துக் குளத்துக்கு வந்து கொண்டிருப்பதாக, சங்கருக்குச் சொல்லிவிட்டேன். சங்கரும், ஊர்ப் பெரியவர்களும் மடத்துக்குளம் காவல் நிலையத்துக்கு வந்திருந்து, என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

வீட்டுக்கு வந்த 4 மாதம் கழித்து, சங்கருக்கு வேலை கிடைத்தது.

அவருக்குப் புதுத்துணி எடுப்பதற்காக, 13-3-2016 அன்று பகல் 1.00 மணிக்குப் புறப்பட்டு உடுமலைப் பேட்டைக்குச் சென்றோம். அப்படிப் போவதாக என் தாயாரிடமோ, வேறு எவரிடமோ ஏதும் சொல்லவில்லை.

எங்களுடைய நடவடிக்கையைப் பற்றிக் கண் காணிப்பதற்காக, அதற்கு ஒரு வாரம் முன்னதாக, நெய்க்காரப்பட்டி பிரசன்னா என்கிற பையனை உள வாளியாக வைத்துக் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

உடுமலைப்பேட்டையில் நாங்கள் துணி வாங்கிக் கொண்டு, சாலையில் கம்பங்கூழ் குடித்துவிட்டு, திரும்பி நடந்து வரும்போது, பின்புறமாக வந்து முதலில் என்னை தலையில் அரிவாளால் அடித்த பிறகு, என்னைக் காப்பாற்ற சங்கர் முயற்சிக்கும் போது, சங்கரை கழுத்தில் அரிவாளால் வெட்டினர். என்னைக் கீழே தள்ளி, நான் 2, 3 தடவை எழுந்த போது மீண்டும் மீண்டும் அரிவாளால் வெட்டினார்கள். நான் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன். மீண்டும் எழுந்து சங்கர் வெட்டப்பட்டுக் கிடப்பதைப் பார்த்த போது, வெட்டியவர்களை நான் பார்த்துவிட்டேன். எங்களை வெட்டும் போது பொது மக்கள் யாரும் தடுக்கவில்லை.

பிறகு எங்கள் 2 பேரையும் மருத்துவ உதவி வண்டியில் (ஆம்புலன்ஸ்) ஏற்றி, உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அரசு மருத்துவமனையில், சங்கருக்கு இரத்தம் அதிகமாக வெளியேறியதால் பஞ்சு மட்டும் வைத்துக் கட்டினார்கள்; சங்கருக்கு ஒரு பாட்டில் குளுகோஸ் ஏற்றினார்கள். எனக்குப் பஞ்சு மட்டும் வைத்துக் கட்டினார்கள்.

உடனே இருவரையும் ஆம்புலன்சில் ஏற்றி கோவைக்குச் சென்று காட்டுங்கள் என்று கூறி அனுப்பி விட்டனர். ஆம்புலன்சில் எங்களுடன் யாரும் வரவில்லை. கோவைக்குப் போகும் வழியில் சங்கருக்கு ஒரு கை தொங்கிவிட்டது. ஒரு கால் இடுக்கில் மாட்டிக் கொண்டது. அந்தக் காலை எடுக்கச் சொன்னார்; நான் எடுத்து விட்டேன். அதன் பிறகு சங்கர் பேசவில்லை.

கோவைக்குச் சென்ற பிறகுதான், வழியிலேயே சங்கர் இறந்துவிட்டார் என்று தெரிந்தது.

கோவையில் என்னை தீவிர வைத்தியப் பிரிவில் (ICU) வைத்து 15 நாள் வைத்தியம் செய்தார்கள். சங்கர் இறந்த மறுநாள் உடற்கூறு ஆய்வு செய்த பிறகு, அவர் உறவினர்கள் உடலை குமரலிங்கத்துக்கு எடுத்துச் சென்றார்கள். அவருடைய உடலைப் பார்க்க என்னை அனுமதிக்கவில்லை.

பிறகு சங்கருக்கு 16ஆம் நாள் சடங்கு செய்வதற்காக என்னை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டார்கள். இப்போது அவருடைய வீட்டில் இங்கு முழு மனநிறைவுடன் வாழ்கிறேன். மேற்கொண்டு அஞ்சல் வழியில் B.C.A. பட்டப் படிப்பு படிக்க விரும்புகிறேன்.

இவ்வளவு செய்திகளையும், கௌசல்யா தடங்கலின்றி, நிரல்படக் கூறினார்.

பெண்கள் ஆண்களைவிடத் திடமான உள்ளம் படைத்தவர்கள் என்பதற்கு, கௌசல்யா ஒரு சான்று.

உயிருக்குப் போராடும் கணவனோடு, தன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, 19 அகவை இளம் பெண்ணை மட்டும் மருத்துவ வண்டியில் தனிமையாக அனுப்பிவிட்ட உடுமலைப்பேட்டை மருத்துவத் துறை அதிகாரிகள் கடமை தவறிய வன்னெஞ்சர்கள் அல்லவா? வெட்டுண்டு உயிருக்குப் போராடும் இருவரையும் தனியே அனுப்பிய உடுமலை காவல்துறையினருக்கு, உடன் போவது கடமையல்லவா? வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் உடன் செல்லுவது கடமையல்லவா?

இவர்கள் எல்லாத் துறையினருமே சாதித் திமிர் பிடித்தவர்களாக இருந்ததால் தான், கணவரின் உயிர் போவது கூடத் தெரியாமல் ஒரு மதலைப் பெண் பரிதவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் - திருவள்ளுவர் பிறந்த தமிழ்நாட்டில் - பெரியார் 50 ஆண்டுக்காலம் சாதி ஒழிப்புக்குப் போராடிய தமிழ்நாட்டில் - பாமரர் நெஞ்சங்களில் பகுத்தறிவைப் பதிய வைத்த உடுமலை நாராயண கவி வாழ்ந்த உடுமலையில் - சாதி ஆணவக் கொலைக்கு இரக்கப்பட - தாக்கப்படுவதைக் கண்டவரெல்லாம் சான்று கூற நாதி என்பதே இல்லையே!

சங்கரும் கௌசல்யாவும் வெட்டிச் சாய்க்கப்பட்ட அதே கடைத் தெருவில் 30 அடி உயரத்தில், ஒரு கடை மாடியில் இருந்த - பேசத் தெரியாத படப்பிடிப்புக்கருவி மட்டும் தானே சான்று ஆயிற்று! சங்கரையும் கௌசல்யாவையும் வெட்டிச் சாய்த்தவர்களையும் கொலைகாரர்கள் பயணித்த சிவப்பு நிற மகிழுந்துவையும் அந்த ஆடி துல்லியமாக அடையாளம் காட்டிவிட்டது.

அண்மையில், சென்னை உயர்நீதிமன்றத்தில், ஒரு கலப்புத் திருமண வழக்கில் தீர்ப்பு அளித்த நீதிபதி வி. இராமசுப்பிரமணியம் அவர்கள், கலப்பு மணத் துணைவர்களுக்கு, காவல் துறையினர் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க வேண்டும் எனக் கூறியுள்ளவை சிறப்பானவை. அவை 9 நெறி முறைகள். நிற்க.

**பேசத் தெரிந்த இரண்டு கால் தமிழ் விலங்காண்டிகளே!**



*தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்களை வே.ஆனைமுத்து பார்வையிடுகிறார்*

**சாதிக் கலப்புக் கூடாது - அது சட்டப்படி தண்டனைக்கு உரிய குற்றம் என்று ஒரு காலத்தில் இருந்தது.**

**"சாதி" (Caste) என்பது பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நான்கு மட்டுமே.**

**அவர்கள் தங்களுக்குள் கலப்புத் திருமணம் செய்யக்கூடாது என்று சட்டத் தடை இருந்தது.**

**அந்தத் தடை 1930களிலேயே பம்பாய் நீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பின் மூலம் நீக்கப்பட்டுவிட்டது.**

**மற்றும் உள்ள 6,000 பிரிவுகள் உள்சாதிகள் (Sub-Castes) மட்டுமே. இவர்களுக்குள் கலப்புத் திருமணம் செய்யக்கூடாது என்று தடை இருந்தது.**

**அந்தத் தடை, சட்டம் மூலம் 1946இல் நீக்கப்பட்டுவிட்டது.**

**சங்கரும் கௌசல்யாவும் பிறவியால் வேறு வேறு உள்சாதிகள். அவர்கள் 2016இல் செய்து கொண்ட திருமணம் சட்டப்படி செல்லும்.**

**இதை ஊருக்கெல்லாம் சொல்லுங்கள்!**

இது நடைபெற என்ன தடை?

தீண்டப்படாத வகுப்பினர் மட்டும், ஊருக்கு வெளியே தனிக்குடியிருப்பாக வைக்கப்பட்டிருப்பது, முதலாவது தடை.

குமரலிங்கம் என்கிற பேரூரில் பள்ளர் தெரு தனி; பறையர் தெரு தனி; சக்கிலியர் தெரு தனி; இவர்களுக்கு சடங்கு செய்கிற குருக்களாக இருக்கிற வள்ளுவர் தெரு தனி. இது இரண்டாவது கொடுமை.

சங்கர் வீட்டிலேயே வாழ வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள கௌசல்யா நலமாக வாழ, இருக்கிற

வெளித்திண்ணையை 10 அடி நீட்டிப்பதும், குளிக்க இடம், கழிப்பிடம் இவற்றை 2, 3 இலக்கம் செலவிட்டு அமைப்பதும், கௌசல்யாவைப் படிக்க வைப்பதும் சி.வேலுச்சாமியின் கடமையாகும்.

இங்கே பறையர் வகுப்பினர் 58 குடும்பத்தினர் உள்ளனர். ஒரு குடும்பத்தாருக்குக்கூட ஒரு செண்ட் வேளாண் நிலம் இல்லை.

10, 12 குடும்பங்களில் 10ஆம் வகுப்புப் படித்தவர்கள் உள்ளனர். பட்டம் பெற்றவர் ஒருவர் கூட இல்லை. பி.ஏ. பொருளியல் படிப்பில் சேர்ந்த ஒரு பெண் மேற்கொண்டு படிக்க வசதி இன்றித், திருமணம் செய்து கொண்டார். இந்தப் பெண்ணும், தங்கராசுவின் மகன் நாகராசுவும்-58 வீட்டுக்காரரும் அற்றைக் கூலிக்காரர்கள் என்று ஆத்திரத்தோடு சொன்னார்கள். அவர்கள் வடித்த கண்ணீர் அமராவதி ஆற்றங்கரையில் காய்கிறது.

ஊரின் முதன்மைச் சாலையில், கீழ்ப் பகுதியில் அருந்ததியர் என்கிற சக்கிலியர் தெரு உள்ளது. அங்கு 30 குடும்பத்தினர் வாழ்கிறார்கள். பத்தாம் வகுப்புக்கு மேல் படித்தவர்கள் எல்லாக் குடும்பங்களிலும் உள்ளனர்; பட்டம் பெற்றவர்கள் 3 பேர்; பட்ட வகுப்பில் படிப்போர் 5 பேர் உள்ளனர். பாலர் பள்ளியில் ஒரு பெண் சத்துணவு அமைப்பாளராக உள்ளார்.

இந்த 30 குடும்பங்களில் எவருக்குமே வேளாண்மை செய்யச் சொந்தமாக நிலம் இல்லை. எல்லோரும் அற்றைக் கூலிகள்; ஒரு மின் விளக்கு மட்டும் உள்ள ஒற்றை அறை வீடுகளில் வாழ்கிறார்கள்.

வெளி விவரம் அறிந்த எம். மோகன் என்கிறவர், உடுமலை பள்ளபாளையத்தில் சிண்டிகேட் வங்கியில் அலுவலக உதவியாளராக (Attender) உள்ளார்.

அதே தெருவில் மேல் பகுதியில் வள்ளுவர் தெரு தனியே உள்ளது. அங்கு 40 குடும்பத்தினர் வாழ்கின்றனர். இவர்களில் 4 குடும்பத்தினர்க்கு தலைக்கு 4 ஏக்கர் வேளாண் நிலம் உள்ளது. 40 பேருக்குமேல் 10ஆம் வகுப்புப் படித்துள்ளனர். 30 பேர் பட்டம் பெற்றவர்கள்.

கொழுமம் ஆதியின் வகுப்புத் தோழர் ஞான. சக்திவேல். இவருடைய துணைவியார் முனைவர் பட்ட ஆய்வை முடிக்க உள்ளார். இவ்வகுப்பினர் பலரும் சோதிடம் பார்ப்பது, தீண்டப்படாதார் வீட்டில் மதச்சடங்குகள் செய்வதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

இவ்வூரில் கோமுட்டிச் செட்டியார், வன்னியர், இஸ்லாமியர், அடர்த்தியாக உள்ளனர். முக்குலத்தோர், கொங்கு வேளாளர், பார்ப்பனர், கம்ம நாயுடு, கவரை நாயுடு குடும்பத்தினரும் உள்ளனர்.

குமரலிங்கம் நிகழ்ச்சி காட்டும் படமும் பாடமும் என்ன?

இந்தியாவிலுள்ள 127 கோடி மக்களில், 106 கோடிப் பேராக இருக்கிற இந்துக்களிடையே முதலாவது சமூக சமத்துவம் அன்றும் இன்றும் இல்லை. அதாவது, இந்துக்களிடையே "பிறப்பால் எல்லோரும் சமம்" என்கிற உணர்வு இல்லை. முதலில் இது தனியாக வராது என்பதை நாம் உணர வேண்டும். சமூக சமத்துவமும், அரசியல் சம உரிமையும், பொருளாதார விடுதலையும், இறுதியாகப் பண்பாட்டுப் புரட்சியும் நம்மிடையே ஒருசேர வந்து தீர வேண்டும்.

சாதி ஒழிப்புக் கொள்கையினர் எல்லோரும் இத்திசை நோக்கிப் பயணிப்போம், வாருங்கள்!

**- வே. ஆனைமுத்து**

அன்னை என இங்கே அனைவரையும் ஆதரித்தீர்
மன்னர் மனம் பெற்ற வாழ்க்கைத் துணைவருடன்
தன்னேரிலாத தமிழ்ப் பணிக்குத் துணை நின்றீர்
முன்னே புறப்பட முடிவெடுத்து விட்டீரோ
செல்லும் திசையெல்லாம் சிறப்படையும் ஒளிபெருகும்
அல்லல் விலகும் அகங்குளிரும் முகம் மலரும்
நில்லாமல் இங்கிருந்து நீங்க முடிவெடுத்தீர்
எல்லோமும் ஆச்சி உம்மை வாழ்த்தி வணங்குவமே.

**20-4-2016 டாக்டர் பொற்கோ**

## திருமதி மெ. தெய்வானை மறைவு



பொறியாளர் அ.மெய்யப்பன், இயற்கை மருத்துவ ஆலோசகர், யோகாசன ஆசிரியர். அவர்களின் துணைவியார் தெய்வானை அம்மையார் 21-4-2016 அன்று இரவு 9.55க்கு இயற்கை எய்தினார். தமிழ் நூலக உரிமையாளராக இருந்து மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் பொற்கோ அவர்களின் பல நூல்களை வெளியிட்டுள்ளார். புலமை ஆராய்ச்சி இதழின் வெளியீட்டாளர். அவர்களின் கண்கள் தானமாக சங்கர நேத்திராலயாவிற்கு வழங்கப்பட்டன.

அருவி என்ற புனை பெயரில் சிறுகதைகள் புதுக்கவிதைகள் எழுதியுள்ளார். 'வைர நெஞ்சம்' என்ற சிறுகதைகள் நூல் எழுதியுள்ளார்.

அவருடைய துணைவரும் அன்பு மகளார் உலகம்மையும் அவர் குடும்பத்தாரும் அம்மையார் நினைவாக ரூ.2000 சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக வழங்கி உள்ளனர். திருமதி. தெய்வானை அம்மையாரை இழந்து வருந்தும் அவருடைய துணைவருக்கும் குடும்பத்தாருக்கும் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவினர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தேர்தல் திருவிழா

- இராமியா

"தேர்தலில் வாக்களிப்பது ஜனநாயகக் கடமை" என்றும் "வாக்களியுங்கள்" என்றும் மட்டுமே பரப்புரை கொண்டு இருந்த முதலாளித்துவ அரசும் ஊடகங்களும், இந்த 2016ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தலில் ஒரு வளர்ச்சியைத் திணித்து உள்ளன. இப்பொழுது "வாக்களிப்போம்" அதுவும் "100 விழுக்காடு நேர்மையாக வாக்களிப்போம்" என்று மக்களே கூறுவதாகப் பரப்புரை செய்கிறார்கள்.

வழக்கம் போல மாவோயிஸ்ட் உள்ளிட்ட நக்சலைட்டுக் குழுக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்றும், மக்கள் புரட்சிக்கு அணியம் ஆகும்படியும் அறைகூவல் விடுத்துள்ளன.

மக்களும் வழக்கம்போல் நக்சலைட்டுகளின் அறைகூவலைக் கண்டுகொள்ளாமல், பெருவாரியாக வாக்களித்து உள்ளனர். மேற்குவங்கத்திலும் அஸ்ஸாமிலும் 80 விழுக்காட்டுக்கும் அதிகமாக வாக்குகள் பதிவாகி உள்ளன. இது மிகப்பெரும்பான்மையான மக்கள் ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் தேர்தல் மூலம் விடிவு காலம் பிறக்கும் என்று நம்புவதைக் காட்டுகிறது; அல்லது தேர்தல் என்பதன் உட்பொருளைப் புரிந்துகொள்ளாமல் ஏதோ ஒரு திருவிழா என்று நினைக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

முதலாளித்துவ அமைப்பின்கீழ் நடக்கும் தேர்தல்களின் மூலம் சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியுமா?

முடியும் என்று ஸ்டாலினுடைய மரணத்திற்குப் பின் சிலர் வாதிட்டனர். முடியாது என்றும் சிலர் எதிர் வாதம் செய்தனர். இந்த விவாதம் நடந்துகொண்டு இருக்கையில், 1970ஆம் ஆண்டில் சால்வடார் அல்லெண்டே தேர்தலில் சிலி நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் புரட்சியின் மூலம் அரசைக் கைப்பற்றாமல், முதலாளித்துவ அமைப்புக்குக் கட்டுப்பட்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று அதிபராய்ப் பதவி ஏற்றதால், உழவும் தொழிலும் உழைப்பவர்க்கே சொந்தம் என்று உடனடியாக, ஒரே நாளில் சட்டம் இயற்ற முடியவில்லை. ஆனால் அதற்கான பாதையைச் செப்பனிடத் தொடங்கினார். உள்நாட்டு எதிரிகளும், வெளிநாட்டு எதிரிகளும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை. எதிர்ப்பாக இருந்தாலும் அதை ஜனநாயக முறையில்தான் எதிர்க்க வேண்டும் என்றும் நினைக்கவில்லை. உள்நாட்டு எதிரிகள் வெளிநாட்டு (அமெரிக்காவின்) உளவுத் துறை மற்றும் இராணுவ உதவியுடன் "ஜனநாயக" அரசைக் கவிழ்த்துவிட்டு, ஒரு பொம்மை அரசை நிறுவினர்.

**அதாவது முதலாளிகளுக்கு / முதலாளித்துவத்திற்கு ஆதரவானவர்களைத் தேர்ந்தெடுக்கத் தான் இந்தத் தேர்தலே ஒழிய, உழைக்கும் மக்களின் விடுதலைக்காக அல்ல என்று இந்நிகழ்வு தெளிவாகக் காட்டியது / காட்டுகிறது.**

அப்படி என்றால் தேர்தலினால் எவ்விதப் பயனும் இல்லையா? நக்சலைட்டுக் குழுவினர்கள் கூறுவது போல் தேர்தலை முற்றிலுமாக நிராகரிப்பதுதான் தீர்வா?

அப்படி எல்லாம் ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது. லெனின் வழக்கமாகக் கூறியதுபோல் சூழ்நிலையைப் பொறுத்துதத்தான் எது சரி என்று சொல்ல முடியும். இரஷ்யாவில் போல்ஷிவிக்குள் தேர்தலில் / நாடாளுமன்றத்தில் பங்கு கொண்டார்கள். நாடாளுமன்றத்தைத் தங்கள் கொள்கைகளை மக்களிடம் சொல்வதற்கான மேடையாகப் பயன்படுத்தினார்கள்; நாடாளுமன்றச் செயல்பாட்டை வலுவிழக்கச் செய்தார்கள்; இறுதியில் அதைக் கலைக்கவும் வழிவகுத்தார்கள். அந்த அளவிற்கு போல்ஷிவிக்குள் புரட்சிகரத் தத்துவத்தை மக்களிடையே பரப்பி வைத்து இருந்தார்கள்.

இந்தியாவில் உள்ள நிலை என்ன? இங்கு தேர்தலில் பங்குகொள்ளும் பொதுவுடைமைக் கட்சிகளும் உள்ளன. தேர்தலை நிராகரிக்கும் பொதுவுடைமைக் கட்சிகளும் உள்ளன. தேர்தலில் பங்குகொள்ளும் பொதுவுடைமைக் கட்சிகளுக்குக் "கூலி உயர்வு" என்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அக்கட்சிகளில் உள்ள தொண்டர்கள் (அல்லது வேறு யாரோ கூட) அதைத் தாண்டிப் பேசிவிட்டால், "நக்சல் வாடை வீசுகிறது" என்று கூறி, மற்றவர்களை "அச்சுறுத்தி" விடுவார்கள். இந்தப் பொதுவுடைமைக் கட்சிகளுக்குச் சோஷலிச சமூகத்தை அமைக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை என்பது மட்டும் அல்ல; சிறு சிறு சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்ற அக்கறையும் இல்லை. அவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் கூலி உயர்வு மட்டுமே.

தேர்தலை நிராகரிக்கும் பொதுவுடைமைக் கட்சிகள் பல குழுக்களாக உள்ளன. இக்கட்சிகள் மன உறுதி கொண்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு உள்ளன. இவை தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று மக்களை ஒவ்வொரு தேர்தலின் போதும் கேட்டுக் கொள்கின்றன. ஆனால் மக்கள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் பெருந்திரளாகச் சென்று வாக்களிக்கின்றனர். இக்குழுக்களில் எந்த ஒரு குழுவும் தாங்கள் சொல்வதை மக்கள் ஏன் கேட்பது இல்லை என்று சுயவிமர்சனம் செய்து கொள்வதே இல்லை.

**தேர்தலில் பங்குகொள்ளும் பொதுவுடைமைக் கட்சிகள் "கூலி உயர்வு" வட்டத்தில் சிக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்றால், தேர்தலில் ஈடுபடாத பொதுவுடைமைக் கட்சிகள் நடக்க வாய்ப்பு இல்லாத புரட்சிக்குத் "தலைமை தாங்கும்" கனவில் சிக்கித் தவிக்கிறார்கள்.**

புரட்சி நடக்க வேண்டும் என்றால் அங்கே புரட்சிகரத் தத்துவம் இருக்க வேண்டும் என்று லெனின் கூறினார். இந்தியாவில் மிக மிக.... மிகப் பெரும்பான்மையான மக்களுக்குப் புரட்சிகரத் தத்துவத்தின் அரிச்சுவடியே தெரியாது.

தெலுங்கானா விவசாயிகளின் ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத்தின் போது, அவர்களை ஒடுக்க இந்திய அரசு இராணுவ வீரர்களையும், ஆயுதங்களையும் போராட்டக் களத்திற்குத் தொடர் வண்டிகளின் மூலம் கொண்டு சென்றது. இதைச் சுட்டிக்காட்டிய ஸ்டாலின் புரட்சிகர உணர்வை ஒரு சிறு பகுதியில் வளர்த்து எடுத்ததற்கு மாறாக நாடு முழுவதும் வளர்த்து எடுத்து இருந்திருந்தால், தொடர் வண்டித் தொழிலாளர்கள் தெலுங்கானா போராட்டப் பகுதிகளுக்கு, இராணுவத்தையும் ஆயுதங்களையும் ஏற்றிச் செல்வதற்கு எதிராக வேலை நிறுத்தம் செய்ய முடிந்து இருக்கும் அல்லவா என்று கேட்டார்.

தேர்தலில் பங்குகொள்ளும் கட்சிகளும் சரி! பங்கு கொள்ளாத கட்சிகளும் சரி! ஸ்டாலினுடைய இந்த வினாவிற்க விடை தேடப் பிடிவாதமாக மறுத்துக் கொண்டு இருக்கின்றன.

**இன்று நம் முன் உள்ள பணி நம்முடைய பிரச்சினைகள் அனைத்துக்கும் சோஷலிச அமைப்பில் மட்டுமே தீர்வு காண முடியும் என்று மக்களுக்குப் புரிய வைப்பதுதான். அப்பணி பெரும் அளவிற்குச் செய்து முடிக்கும் வரையில் தேர்தலில் பங்கு கொள்வதால் எந்தவிதப் பயனும் ஏற்பட்டுவிடப் போவது இல்லை. "மேற்கண்ட யாரும் இல்லை" (None of the above - NOTA) என்று வாக்களிப்பதும்கூட வீண் முயற்சியே.**

பொதுவுடைமைத் தத்துவத்தின்பால் ஈர்க்கப்பட்டு உள்ள தோழர்களே! புரட்சிகரத் தத்துவம் மக்களிடையே நிலவாமல் புரட்சி வராது. ஆகவே மக்களிடையே புரட்சிகரச் சிந்தனையைப் பரப்புங்கள். இன்று மக்களை அழுத்திக் கொண்டு இருக்கும் எந்த ஒரு பிரச்சினைக்கும் முதலாளித்துவமே மூல காரணமாக உள்ளது; சோஷலிசமே அதற்குத் தீர்வாக உள்ளது. இதை மக்களுக்கு உணர்த்தி அவர்களைப் புரட்சிகரத் தத்துவத்தின்பால் ஆற்றுப்படுத்துவதை முதன்மையான பணியாகக் கொள்ளுங்கள்.

பொது மக்களே! கடந்த 68 ஆண்டுகளாகத் தேர்தலில் வாக்களிக்கின்றீர்களே! ஏதாவது முன்னேற்றத்தைக் கண்டு இருக்கிறீர்களா? தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் உண்மையாக நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஆளும் வர்க்கமாக உள்ள முதலாளிகளுக்கும் பார்ப்பனர்களுக்கும் சேவகம் செய்வதற்கு, அவர்களுடைய நலன்களைக் காப்பதற்காக உங்களை அடக்கி ஒடுக்குவதற்கு வேலை ஆணையை (Appointment Order) கொடுக்கிறீர்கள்.

இது தேவையா? சிந்தித்துப் பாருங்கள்! தேர்தலைப் புறக்கணியுங்கள்!

## சிறுநாத்தூர் ப. சுப்பிரமணியன் மறைந்தார்



திருவண்ணாமலை மாவட்டம், சிறுநாத்தூர் - பெரியார் நகரில் வாழ்ந்த பரசுராமன் - அம்மாகண்ணு இணையரின் மூத்த மகன் சுப்பிரமணியன் (வயது 72), 19-4-2016 செவ்வாய்கிழமை காலை 8.30 மணியளவில் திருவண்ணாமலை பொது மருத்துவ மனையில் மறைவுற்றார். இவருக்கு மனைவி காசியம்மாள், மகன்கள் காளியப்பன், அண்ணா துரை, கோபாலகிருஷ்ணன் உள்ளனர். இவருடன் உடன் பிறந்தோர் நான்கு தம்பிகள் ப.கண்ணன், ப. கண்ணையன், ப. வடிவேலு, ப.கிருஷ்ணன், ஒரு தங்கை கண்ணம்மாள்.

இவர் விவசாயத்தில் சிறந்து விளங்கியவர். ஆனைமுத்து அய்யா மீது அதிகப் பற்றுக் கொண்டவர். அய்யாவைப் பார்க்கும் பொழுதெல்லாம் கட்டித்தழுவிக் கொள்வார். இவருடைய தம்பியும், சிந்தனையாளன் மேலாளரும் ஆன ப.வடிவேலுவுக்கும், தன் மூத்த மகன் ப.சு. காளியப்பனுக்கும் அய்யா வே.ஆனைமுத்து தலைமையில் திருமணம் செய்து வைத்தவர். மனிதநேயப் பண்பாளர். அனைவரிடமும் அன்பாகப் பழகுவார். தான் வாழ்ந்த பகுதிக்குப் "**பெரியார் நகர்**" என்று பெயர் சூட்டி வாழ்ந்த பெருந்தகை சுப்பிரமணியன் அவர்கள்.

இறுதி நிகழ்வில், ஊர்ப் பொது மக்களும், நண்பர்களும், உறவினர்களும், பள்ளி ஆசிரியர்களும், மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் பொ. சுப்பிரமணியன், கோ. கோதண்டராமன், (ஆசிரியர் ஓய்வு), கோ. அன்பு ஆகியோரும் கலந்துகொண்டனர். தான் வாழ்ந்த பகுதிக்குப் "**பெரியார் நகர்**" என்று பெயர் சூட்டிய சுப்பிரமணியன் புகழ் ஓங்குக!

- ஆசிரியர் குழு



# படித்தவர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள்!

- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

**பொது மக்களுக்கு :**

கடந்த 30 ஆண்டுகளாக நான் உங்களுடைய அரசியல் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டு இருக்கிறேன். நான் உங்களுக்காக நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் தனித்தொகுதி பெற்றுக் கொடுத்திருக்கிறேன். நான் உங்களுடைய குழந்தைகளுக்கு கல்விக்கான முறையான சலுகைகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். அதனால் இன்றைக்கு நாம் முன்னேற முடியும். இன்றைக்கு சமூகத்தில் நிலவு கின்ற கல்வி, பொருளாதார, சமூக அநீதிகளைக் களையப் போராட வேண்டியது, உங்களுடைய கடமை. இதற்காக எந்தத் தியாகத்திற்கும் - ஏன் உங்கள் இரத்தத்தைச் சிந்துவதற்கும்கூட நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

**தலைவர்களுக்கு :**

சிலபேர் தங்கள் மாளிகைக்கு உங்களை வரவழைப்பார்கள். நீங்களும் விருப்பமாகச் செல்வீர்கள். உங்கள் சொந்த வீட்டையே நெருப்பில் எரித்துவிட்டு நீங்கள் அங்கு போகக்கூடாது. சில நாள்களில் உங்களிடத்தில் சச்சரவு வந்து உங்களை பங்களாவிலிருந்து அந்த அரசன் துரத்திவிடுவான். பிறகு நீங்கள் எங்கே போவீர்கள்? உங்களை நீங்களே அழித்துக் கொள்ள வேண்டும் என்றால் அங்கே போங்கள். அதற்காக சமூகத்திற்காக இருக்கின்ற இயக்கத்தை அழிக்காதீர்கள். எனக்கு மற்றவர்களிடமிருந்து எந்த அபாயமும் இல்லை. நம் மக்களிடம் இருந்தே எனக்கு ஆபத்து என்று எண்ணும் போதுதான் நான் வருந்துகிறேன்.

**நிலமற்ற உழைப்பாளர்களுக்கு :**

கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற உழைப்பாளர்களைப் பற்றி நான் பெரிதும் கவலைப்படுகிறேன். என்னால் அவர்களுக்கு அதிகமாக ஏதும் செய்ய முடியவில்லை. அவர்கள் படும் துன்பங்களையும் இடுக்கண்களையும் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. **அவர்களின் துன்பங்களுக்கு முதன்மையான காரணம் அவர்கள் நிலமற்றவர்களாக இருப்பதேயாகும். இதனால்தான் அவர்கள் இழிவுகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகிறார்கள். அவர்களுக்கு என்று நிலம் இருந்தால் ஒழிய, அவர்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள முடியாது. இந்த விடுதலைக்காக நான் போராடுவேன்.** இதற்கு அரசு ஏதேனும் தடைகளை உண்டாக்குமானால் இம்மக்களுக்கு நான் தலைமை தாங்குவேன். சட்டரீதியான போராட்டத்தை மேற்கொள்வேன். அவர்களுக்கு நிலம் கிடைக்கச் செய்வேன்.

**தொண்டர்களுக்கு :**

விரைவில் நான் புத்தர் கொள்கையைத் தழுவவுள்ளேன். புத்தம் ஒரு முற்போக்கான சமயம். புத்தம் சமத்துவம், சுதந்தரம், சகோதரத்துவம் என்கிற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இதைப் பல்லாண்டுகள் ஆழ்ந்து ஆய்வு செய்ததன் மூலம் அறிந்து கொண்டேன். மிக விரைவில் புத்த சமயத்தவனாக மாறுவேன். அப்படி மாறியபின் ஒரு தீண்டத்தகாதவனாக உங்களோடு நான் இருக்கமாட்டேன். ஆனால் ஓர் உண்மையான பௌத்தனாக இருந்து உங்கள் நலன்களுக்காகத் தொடர்ந்து போராடுவேன். கண்மூடித்தனமான தொண்டர்களைப் பெற்றிருப்பதை நான் விரும்பவில்லை. இந்த மாபெரும் மதத்தில் அடைக்கலம் புகவிரும்புகிறவர்கள் மட்டும் புத்த சமயத்தைத் தழுவலாம். அப்படிப்பட்ட உறுதிப்பாடுகள் மூலம் இந்த மதத்தில் இவர்கள் நீடிக்கலாம்; பௌத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றலாம்.

**பௌத்த பிக்குகளுக்கு :**

பௌத்தம் ஒரு சிறந்த சமயம். இச்சமயத்தை நிறுவிய விடுதலை வீரர் புத்தர், இச்சமயத்தைப் பிரச்சாரம் செய்தார். இதன் கொள்கைகளின் சிறப்பு இயல்புகளால் இந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் பௌத்தம் பரவிற்று. பௌத்தம் புகழின் உச்சியை அடைந்த பிறகு கி.பி.1213இல் பௌத்தம் இந்தியாவிலிருந்து அடியோடு மறைந்தது; இதற்குப் பல காரணங்கள் உள்ளன. பௌத்தபிக்குகள் மிக ஆடம்பரமான சுகபோகமான வாழ்க்கைக்கு ஆளாகிவிட்டமை இக்காரணங்களுள் ஒன்று. புத்த பிக்குகள் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்து பௌத்தக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதற்குப் பதிலாக பௌத்த மடங்களில் ஓய்வாக இருந்து கொண்டு அரசர்களைப் புகழ்ந்து நூல்களை எழுதுவதில் மூழ்கிவிட்டார்கள். இப்போது பௌத்தத்தைப் புனரமைப்புச் செய்வதற்காக அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். அவர்கள் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும். இப்போது உள்ள பிக்குகளின் எண்ணிக்கை மிகவும் கொஞ்சம். ஆகையால் நல்லெண்ணங் கொண்ட பொது மக்கள் பௌத்தத்தைப் பிரச்சாரம் செய்ய வேண்டும்; அதன் ஆசாரங்களைப் பின்பற்ற வேண்டும்.

**அரசு ஊழியர்களுக்கு :**

**நம்முடைய சமூகத்தில் படிப்பில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. படிப்பு கிடைத்ததால் நம்மில் சிலர் உயர்ந்த நிலைக்குச் சென்றுள்ளனர். ஆனால் இந்தப் படித்தவர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள். அவர்கள் படித்து உயர்ந்த நிலைக்குச் சென்ற பிறகு சமூகத்திற்கு ஏதாவது தொண்டு செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், நான் என்ன காண்கிறேன் என்றால், பெரும்பாலானவர்கள் சிறிய பதவியில் உள்ளவர்களாக இருந்தாலும், பெரிய பதவியில் உள்ளவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் ஒன்றுசேர்ந்து கொண்டு தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்வதிலேயே குறியாக உள்ளார்கள். அரசு வேலைகளில் உள்ளவர்களின் கடமை என்னவென்றால், அவர்களாகவே முன்வந்து ஊதியத்தில் 20இல் ஒரு பங்கை சமூக வளர்ச்சிக்கு அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் சமூகம் முன்னேறும். இல்லையென்றால், வேலையில் உள்ளவர்களின் குடும்பங்கள் மட்டும்தான் முன்னேறும்.**

**கிராமத்தில் ஒருவன் படித்திருக்கிறான் என்றால், அவனிடத்தில், இந்த சமூகம் நிறைய உழைப்பை எதிர்பார்க்கிறது. ஒரு படித்த பொது நல ஊழியர் அதை நிரூபிக்கும் வகையில் செயல்பட வேண்டும்.**

**மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் :**

மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அவர்கள் படிப்பை முடித்தபின் அரசு வேலைக்குச் செல்வதைவிட அவரவர்கள் கிராமத்தில் (அ) பகுதியில் அநீதியைக் களையப் போராட வேண்டும். அதன்மூலம் அறியாமையை அகற்றப் பாடுபட வேண்டும். உன்னுடைய அடிமைத்தளையை அறித்தெறிவது என்பது சமூகத்தின் ஒட்டுமொத்த அடிமைத் தளையை அறித்தெறிவதில்தான் உள்ளது என்பதை உணர வேண்டும்.

இன்றைக்கு என்னுடைய நிலை எப்படி இருக்கிறது என்றால், ஒரு பெரிய கொட்டகையைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஒரு கொம்பின் நிலைபோல் உள்ளது. எப்பொழுது இந்தக் கொம்பு இல்லாமல் போய்விடுமோ என்று நான் வருத்தப்படுகிறேன். என்னால் என் உடல்நிலையைச் சரியாக வைத்துக் கொள்ள முடியவில்லை. நான் எப்பொழுது உங்களை விட்டுப் போவேன் என்று எனக்குத் தெரியாது. இந்த ஆதரவற்ற அனாதை மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய எந்த இளைஞனையும் காணவில்லை. நான் நினைத்துப் பார்க்கிறேன் - நான் எவ்வளவோ உயர்ந்த படிப்புப் படித்தும் கூட சாதாரண சமையல் செய்து பாத்திரம் தேய்க்கும் பார்ப்பான்கூட என்னைத் தீண்டப்படாதவனாகவே கருதுகிறான். அப்படியிருக்கும்போது, கோடிக்கணக்கான என் சகோதரர்களுக்கு என்ன நேரும்? யாராவது சில இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து (என்னுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டால்) நான் மனநிம்மதியோடு சாவேன்.

**கடைசியாக உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது : கற்றுக்கொள்; பிறகு, நன்மையில் நம்பிக்கையுள்ளவர்களை ஒன்றுதிரட்டி, அதன் பிறகு உங்களுடைய உரிமைகளுக்காகப் போராடு! இந்த ஒரு வழியில்தான் உன்னுடைய அடிமைத் தளை அறுத்தலும் எதிர்கால விடுதலையும் நல்வாழ்வும் அடங்கி உள்ளது.**


(1956 மார்ச்சு 18இல் டாக்டர் அம்பேத்கர்
ஆக்ராவில் பேசியது.
"தலித்வாய்ஸ்", ஆகஸ்ட் 1-15, 1990)
தமிழாக்கம் : வாலாசா வல்லவன்

## தந்தை பெரியார் 1931இல் வெளியிட்ட 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'யின் தமிழாக்கத்துக்கு எழுதிய அறிமுகவுரை

".... உலக அரசாங்கங்களிலெல்லாம் ரஷிய ஜார் அரசாங்கமே மிக்க கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கிறது. அதனாலேயே அங்கு சமதர்ம முறை அனுபவத்துக்குக் கொண்டு வர வேண்டியதாயிற்று. இந்த நியாயப்படி பார்த்தால், அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷியாவைவிட இந்தியாவிற்கே முதன்முதலாக ஏற்பட்டு இருக்க வேண்டியதாகும். இங்கு அனேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வந்திருப்பதாலும் சூழ்ச்சிக்காரர்கள் இந்திய மக்கள் வெகு ஜாக்கிரையாகவே கல்வி, அறிவு, உலக ஞானம், சுயமரியாதை உணர்ச்சி முதலியவைகள் பெறுவதற்கு மார்க்கம் அல்லாமல் காட்டுமிராண்டித்தன்மையில் வைத்து வந்ததோடு கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும் மோட்ச சாதனமென்றும் புகட்டி வந்ததாலும், உலகில் சமதர்ம உணர்ச்சி முதன்முதலில் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி, ரஷியாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்பட வேண்டியதாயிற்று.

.... ஆனால் உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மையில் மற்ற தேசத்துக்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்து வருகின்றது. அதென்னவென்றால் மற்ற நாடுகளில் ஒரு விஷயந்தான் முக்கியமாய்க் கருதப்படுகிறது. அதாவது முதலாளி (பணக்காரன்) வேலையாள் (ஏழை) என்பதுவேயாம். ஆனால் இந்தியாவிலோ மேல்சாதியார்-கீழ்சாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால் அது பணக்காரன்-ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது."

(குடிஅரசு, 4-10-1931)



# பல்கலைக்குரிசில் க. பெருமாள் ஆசிரியர் நூறாம் அகவையில் மறைந்தார்!
## ஊனத்தைப் புறந்தள்ளி உயர்தகுதிகளைப் பெற்றவர்

2015 சூலையில் ஒருநாள், பரமத்தி வேலூரி லிருந்து பெருமாள் ஆசிரியவர்கள் தொலைப்பேசியில் பேசினார் : ''எனக்கு 100 ஆவது பிறந்த நாள். உங்களைப் பார்த்தா தேவலாம் போல இருக்கு. வேலூருக்கு வந்துட்டுப் போங்க!'' என அன்புக் கட்டளையிட்டார்.

என் பணிச் சுமைகளுக்கிடையே, இரண்டு தடவைகள் வருவதாக உறுதி தந்தவன் அதைக் காப்பாற்றத் தவறிவிட்டேன். நெஞ்சம் உறுத்தியது.

15.12.2015 அன்று கட்சிப் பணியாகப் புறப்பட்ட நான், 19.12.2015 இரவு சேலம் அடைந்தேன். 19.12.2015 அன்று பரமத்தி வேலூருக்குப் போக நானும், சேலம் செ. ஆனையப்பன் அவர்களும் புறப்பட்டோம். பிற்பகல் 2 மணியளவில், உயர்நிலைப் பள்ளிச் சாலையிலுள்ள பெருமாள் ஆசிரியர் இல்லத்தை அடைந்தோம்.

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி, 1975 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற அப்பெருமகனார், 29 அகவை இளங்காளை போல், நிமிர்ந்த தோற்றத்தில் வாய் நிரம்ப சிரித்தபடி நாற்காலியில் அமர்ந்திருந்தார். வண்டியிலிருந்து இறங்கிய நான் ஆவலுடன் ஓடிப் போய், ஒரு தந்தையைக் கட்டிப்பிடிப்பது போல், அன்னாரைக் கட்டிப் பிடித்துத் தழுவி உச்சிமோந்தேன். அவருக்கு எதிரே அமர்ந்திருந்த அவரின் அன்புத் துணைவியார் வீரமணி அம்மையாரும், அவர்களின் மூத்த மகளாரும் மகிழ்ச்சி மீதூரச் சிரித்தனர். 2.41 மணிக்குச் சில நிழற்படங்களெடுத்தார், சேலம் ஆனையப்பன்.

ஆனையப்பன் மாமனாரும் நானும் வேலூர் கந்தசாமி கண்டர் உயர்நிலைப் பள்ளியில் 1942-46ஆம் ஆண்டுகளில் 8 முதல் 11ஆம் வகுப்பு வரை பயின்றோம். அப்போது க. பெருமாள் ஆசிரியர் அவர்கள் அப்பள்ளியில் இடைநிலை ஆசிரியர். அவரும் ஆசிரியர்கள் கீழ்ப்பெரம்பலூர் ஆ. அரங்கசாமி, அ. கிருஷ்ணன் ஆகியோரும் பள்ளிக்கு எதிரே ஆசிரியர் குடியிருப்பில் குடியிருந்தனர்.

நம் பெருமாள் ஆசிரியரவர்கள், ஒரு கால் சோர்ந்திருந்ததால், சாய்ந்து சாய்ந்து நடப்பார். கதர் வேட்டி, கதர்ச்சட்டை, கதர் மூடு சட்டை (Coat) மட்டுமே அணிவார். எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருப்பார். ஓய்வாக இருக்கும் போது தச்சுவேலை செய்வார்.

நாமக்கல் மாவட்டம், பெரியப்பட்டி என்கிற சிற்றூரில் கருப்பண்ணன்-வாங்கலம்மன் இணையருக்கு மகனாக 15.7.1916இல் பிறந்தார்.

1946இல் இடைநிலை ஆசிரியராக இருந்த அவர், வருந்தி முயன்று பி.ஏ., பி.டி., என்னும் பட்டங்களைப் பெற்று, பாண்டமங்கலம் திருச்செங்கோடு, எடப்பாடி முதலான ஏழு ஊர்களில் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பேரோடும் புகழோடும் பணியாற்றி ஓய்வு பெற்றார். அங்கெல்லாம் அப்பெருமகனாரிடம் படித்த மாணவர்கள். தம் ஆசிரியர் பெருமாள் அவர்கள் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவி, ஆண்டுதோறும் இவருடைய தொண்டுகளை நினைவு கூர்வதாகப் பூரிப்போடு என்னிடம் கூறினார், நம் ஆசிரியப் பெருமகனார், பெருமாள்.

நான் 1963 முதல் 1975 வரை திருச்சியில், ''தமிழ்நாடு தனிப் பயிற்சிக் கல்லூரி'' என நடத்தினேன். அதன் அலுவலகம் மாடியில் இருந்தது. ஏதோ ஒரு பரிந்துரை கேட்டு 1970 (அ) 1971இல் திடுமென அம்மாடிக்கே வந்துவிட்டார், அவர். எனக்கு எதுவுமே புரியவில்லை; நான் ஏதும் செய்யவும் முடியவில்லை.

பன்முகத் திறமைகளைத் தம் முயற்சியால் பெருக்கிக் கொண்டார். கணக்கு ஆசிரியரான அவர் தொடக்கப் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரையிலான வகுப்புகளுக்குக் கணக்குப் பாடநூல்களை எழுதியுள்ளார்.





க.பெருமாள் குடும்பத்தினருடன் வே.ஆனைமுத்து

1961ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்காக இந்திய அரசின் பாராட்டையும் பதக்கத்தையும் பெற்றவர்; 1970ஆம் ஆண்டில் தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர்.

மூன்று ஆண் மக்களையும், நான்க பெண் மக்களையும் பெற்ற அவர் அனைவர்க்கும் உயர் கல்வி அளித்தார்; அவர்கள் நலமாக உள்ளனர்.

அவருடைய மூத்த மகள் பணிஓய்வு பெற்றுள்ளார். அவரும் அவருடைய அன்னையாரும் 19.12.2015 அன்று எங்களுக்கு இனிய தேநீரும், பழங்களும் அளித்தனர்.

அவரது 101ஆம் பிறந்த நாளில் நல்லாசிரியர் க. பெருமாள் வர்களைக் கண்டுகளிக்க வேண்டுமென ஆவலுடன் இருந்தேன். அந்தோ! அப்பெருமகனார் 23.3.2016இல் 100ஆம் ஆண்டிலேயே மறைந்து விட்டார்.

நெடிது வளர்க பெருமாள் ஆசிரியர் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

## புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகப் புரவலர் திரு.முத்தாண்டவன் அவர்கள் மறைவு

புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகச் செயலர், வழக்குரைஞர் மு.சேரன்; புரவலர், மருத்துவர் மு.உத்திராபதி ஆகியோரின் தந்தையார் திரு.அ.முத்தாண்டவன் அவர்கள், 03.04.2016 ஞாயிறு இரவு 8.15 மணியளவில், தம் 91ஆம் அகவையில், புதுச்சேரி, முத்தியால்பேட்டை, தம் இல்லத்தில் மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து வருந்துகின்றோம்.

அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் மா.பெ.பொ.க.சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் திருஉருவப் படத்திறப்பு விழா 17.04.2016இல், அவர்தம் இல்லத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

# கிடாவெட்டு

*- பாவலர் வையவன்*

நேர்த்திக்கடனை நிறைவேற்றும்
நேரம் நெருங்கிவிட்டது
எந்தெந்தக் கோவில்களுக்கு
எவரெவர் பூசாரிகள் என்னும்
பட்டியல் தயாராகிவிட்டது
அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும்
போதுமான மின்னணு அரிவாள்கள்
தயார் நிலையில் உள்ளன
யார் யார்
எத்தனை ஆடுகளை வெட்டுவார்கள்
என்னும் கருத்துக் கணிப்பும்
வெளியிடப்பட்டுவிட்டது
மாலை சாத்தி
மஞ்சள் குங்குமமும் வைத்தாகிவிட்டது
இனி...
**தலையில் தண்ணீர்த் தெளித்து**
**உத்தரவு கேட்க வேண்டியதுதான்**
**ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற**
**அணிவகுத்து ஆவலோடு காத்திருக்கின்றன**
**ஆடுகள்!**
**அவ்வளவுதான்...**
**ஒரே வெட்டு!**
**தலையும் முண்டமும்**
**தனித்தனியாக வீழ்ந்து**
**ரத்த வெள்ளத்தில்**
**துடிதுடித்துச் சாகும்**
**கறியை**
**இருநூற்று முப்பது நான்கு**
**துண்டுகளாகப் பிரித்துக் கொள்வார்கள்**
**‘ஆடுகளின்**
**பிரதிநிதிகள்!’**

# காஷ்மீரைப் பாருங்கள்
# நம்மால் அறியப்பட்ட காஷ்மீர்!
# நாம் அறிய வேண்டிய காஷ்மீர்!
# ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பும், இந்திய அரசமைப்பும்

**9**

இந்தியாவுடன் ஜம்மு-காஷ்மீர் இணைப்புக்கு, ஜம்மு-காஷ்மீர் சட்டமன்ற ஆதரவு கிடைத்தவுடன், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்குத் தனியான அரசமைப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கான பணியில் ஷேக் அப்துல்லா நாட்டம் செலுத்தினார். அப்படி ஒரு சட்டத்தை உருவாக்க முடியுமா என்கிற அய்யம் அவருக்கே இருந்தது.

மேலும், பல நேரங்களில், பல இடங்களில் ''தனி காஷ்மீர் தேசம்'' என்றும் ஷேக் அப்துல்லா பேசியதால், மற்ற அரசியல்வாதிகள் எச்சரிக்கை செய்யத் தொடங்கினர்.

குறிப்பாக ஜம்மு, லடாக் பகுதி மக்களும், அரசியல்வாதிகளும் தூங்கிக் கொண்டிருந்த இந்திய அரசை எழுப்பி உசுப்பிவிட்டனர். இதனால், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஜம்மு-காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து அளிக்கப்பட்டது-மீண்டும் விவாதத்துக்கு உள்ளாயிற்று. இந்த நேரத்தில் ஷேக் அப்துல்லா உண்மையில் அச்சம் கொண்டார். ஆனாலும் இந்திய அரசை மிரட்டும் தன்மையிலும் இந்திய அரசியல்வாதிகளையும் காங்கிரசுக் கட்சியையும் குறைகூறும் தன்மையிலும் பொதுக் கூட்டங்களில் பேசத் தலைப்பட்டார். காஷ்மீரின் சுயாட்சி பற்றிப் பேசிய போது, ''தனி காஷ்மீர் அரசு'' பற்றியும் பேசினார்.

ஷேக் அப்துல்லாவுக்கு மரியாதை நிமித்தமாக அளிக்கப்பட்டுவரும் சலுகையைத் தாண்டி அவர் வரம்பு மீறிப் பேசுவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. அவருடைய குற்றச்சாட்டின் வீச்சு அதிகரித்த போது, வேறு வழியில்லாமல், பண்டித நேரு ஷேக் அப்துல்லாவிடம் கடுமை காட்டி மடல் எழுதினார். அப்துல்லா மனம் சோராமல் நேருவுக்கு விடை மடல் விடுத்தார்; அவர்களுக்குள் மோதல் பெரிதானது. ஆனாலும் விரைவில் சமரச முயற்சி நடந்தது.

நேருவும் அப்துல்லாவும் தில்லியில் கலந்து பேசி, 24-7-1952இல் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அது ''தில்லி ஒப்பந்தம்'' என்று குறிப்பிடப்பட்டது. அவ்ஒப்பந்தத்துக்கு ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றம் 19-8-1952இல் ஒப்புதல் அளித்தது.

**அந்த ஒப்பந்தம் என்ன கூறியது?**

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370ஆம் விதியின் படியும், 24-7-1952இல் இந்திய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படியும் - ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு மட்டும் தனியாக ஓர் அரசமைப்புச் சட்டம், தனியாக ஒரு கொடி, அப்பகுதியை நிர்வகிக்கும் மக்கள் பிரதிநிதியை 'பிரதமர்' என்று பொருள்தரும் வசீர்-இ-ஆசம் (Vazir-i-Azam) எனக் குறிப்பிடுவது, காஷ்மீருக்கு என ஒரு தனி 'ஜனாதிபதி' அந்தஸ்தோடு 'சதர்-இ-ரியாசத்' எனக் (Sadar-i-Riyasat) குறிப்பிடும் ஒருவரை ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றமே தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட மற்றும் பல தனி உரிமைகள் அளிக்கப்பட்டன.**

**இவற்றுள் எதுவும் இந்தியாவிலுள்ள மற்ற எந்த மாநிலத்துக்கும் அளிக்கப்படாத உரிமைகள்.**

**இது, ஷேக் அப்துல்லாவுக்கு அளவுக்கு மீறி இடம் தரப்படுவதாகக் கூறி, இந்தியாவில் எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தன.**

**அப்படிப் போராடியவர்கள் யார்?**

**ஏற்கெனவே 1950 ஏப்பிரலில் பாக்கித்தான் பிரதமர் லியாகத் அலிகானுடன் நேரு செய்து கொண்ட சமரச ஒப்பந்தத்தை எதிர்த்து, நேருவின் முதலாவது அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்து அதற்காகவே அமைச்சரவையிலிருந்து விலகிய ஷ்யாம் பிரசாத் முகர்ஜி என்பவர்தான், இப்போதும் எதிர்த்தார்.**

நேருவின் அமைச்சரவையிலிருந்து விலகிய உடனே அவர் ''ஜனசங்கம்'' (Jan Sangh) என்ற ஓர் புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியிருந்தார். அவரே தலைமையேற்று, இப்போது ஷேக் அப்துல்லாவுக்கு எதிரான போராட்டங்களை நடத்தினார்.

''ஷேக் அப்துல்லா தலைமையில் இயங்கும் தேசிய மாநாட்டுக் கட்சி, இன்னொரு முஸ்லீம் லீக் போன்றதுதான். முஸ்லீம் அடிப்படை வாதத்தை (Fundamentalism) அது வளர்க்கிறது. நேரு அதை உணர மறுக்கிறார்'' என்று குற்றஞ்சாட்டி, இந்துக்

களின் உரிமையைக் காப்பாற்றப் போவதாகச் சூளுரைத்து, அவரே நேரடியாகப் போராட்டக் களத்திலிறங்கினார்.

**அவருடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இந்தியா ஒரு நாடு என்றால் - அதற்கு ஒரே ஜனாதிபதி, ஒரே அரசமைப்புச் சட்டம், ஒரே கொடி என்பதுதான் சரியானது" என்று வாதிட்டார்கள்.**

மேலும் "காஷ்மீரில் இந்தியக் குடிஅரசு சார்பில் பங்காற்றுபவர் மாநில ஆளுநர் (Governor) என்று அழைக்கப்பட வேண்டும் என்பதும், காஷ்மீருக்கு ஒரு முதலமைச்சர் (Chief Minister) தான் நிருவாகியாக இருக்க வேண்டும் என்பதும், அவர்களை வேறு பெயர்களில் அழைக்கக் கூடாது என்பதும்" அவர்களுடைய முக்கிய கோரிக்கைகள் ஆகும்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்தியாவில் நடந்த போராட்டம், 72 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமலாக்கப்படும் சூழலை உருவாக்கியது.

இதற்கிடையில், பாக்கித்தானில் அந்நாட்டுப் பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதியாகப் பொறுப்பேற்ற அயூப் கானுக்கும், காஷ்மீர் மீது படைகளை ஏவிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாக்கித்தான் தரைப் படைத்தளபதி அக்பர் கானுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால், அக்பர் கான் தனது இராணுவ விசுவாசிகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். 'மாஸ்கோ' வின் ஆதரவுடன், அவர் இராணுவ ஆட்சிகயைக் கொண்டுவர, ராவல்பிண்டி நகரில் சதித்திட்டம் தீட்டிய தாகவும், குற்றஞ்சாட்டப்பட்டார்.

காஷ்மீர் விவகாரத்திலும் பாக்கித்தான் இராணுவம் பிளவுபட்டு நிற்பதாகச் செய்தி பரவியது.

**இந்த இக்கட்டுகள் நிறைந்த சூழலில் 1952 அக்டோபரில் பாக்கித்தான் பிரதமர் லியாகத் அலி கான் அடையாளம் தெரியாத ஆள்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

காஷ்மீர் தொடர்பாக முஸ்லீம் நாடுகளின் ஆதரவை வேண்டி, வெளிப்படையான வேண்டுகோள் ஒன்றை முன்வைக்க லியாகத் அலிகான் திட்டமிட்டிருந்தார். அதற்கென்றே நடத்தப்பட்ட பொதுக்கூட்ட மேடையிலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காஷ்மீர் தொடர்பாக, பாக்கித்தான் இராணுவத்தில் பிளவு என்று வந்த செய்தியெல்லாம், இந்தியா மீது இன்னொரு போர் தொடுப்பதற்குத் திட்டமிட்டு வருவதற்கான முகாந்திரம் தான் என்று அரசல் புரசலாகப் பேச்சு அடிபட்டது.

"காஷ்மீர் தினம்" என, 24-10-1952 அன்று பாக்கித்தானியர் கொண்டாடினர். அன்றைக்கு பாக்கித்தானுக்கு வெளிப்படையான மிரட்டலை நேரு அறிவித்தார். காஷ்மீர் சம்பந்தமாக பாக்கித்தான் மீண்டும் சில்மிஷம் செய்தால், அதனால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் நேரு எச்சரித்தார். ஆனால் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு அளிப்பதாகத் திட்டமிட்டிருந்த சிறப்பு அந்தஸ்துடன் கூடிய சலுகைகளில் எந்த மாற்றத்தையும் நேரு செய்யவில்லை. அவற்றைச் செயற்படுத்தும் வகையில், இந்திய நாடாளுமன்றத்தில் அதற்கான சட்டத்தை நிறைவேற்றும் தன்மையில், காஷ்மீர் மாநிலத்தின் முதல் சதர்-இ-ரியாசத் ஆக - (ஜனாதிபதியாக) அரிசிங்கின் மகன் கரண்சிங், 15-11-1952 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னும் இரண்டு நாள்களில் அவர் அந்தப் பொறுப்பை ஏற்ற போது, வாரிசு உரிமைப்படி, ஜம்மு-காஷ்மீரில் கடந்த 106 ஆண்டுகளாக நடந்து வந்த 'மன்னர் ஆட்சி முறை' முடிவுக்கு வந்தது.

ஆனால் ஷேக் அப்துல்லாவுக்காகச் செய்யப்படும் பல முடிவுகள் அவர் வாழ்ந்த - அவர் அதிக அளவு ஆதரவு பெற்றுள்ள காஷ்மீர் பள்ளத்தாக்கு மக்களுக்கு மட்டுமே சாதகமாக உள்ளன என்றும், மற்ற ஜம்மு, லடாக் மக்களுக்கு உரிய கவனம் செலுத்தப்படாமல் இருக்கின்றன என்றும் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் மீண்டும் வலிமை பெற்றன.

இந்நிலையில், 'ஜனசங்கம்' காஷ்மீருக்கு சலுகைகள் வழங்கப்பட்டதை எதிர்த்து தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டது. 1953இல், ஜனசங்க நிறுவனர் ஷ்யாம் பிரசாத் முகர்ஜி வேறொரு கோரிக்கை முழக்கத்தை முன்வைத்தார். "ஒன்றுபட்டு இருக்க வேண்டிய பாரத தேசத்தை, முகமது அலி ஜின்னாவின் இரு தேசக் கொள்கையும் அதிகாரத் தாகமும் இரண்டாக்கியது. இப்போது ஷேக் அப்துல்லாவின் நடவடிக்கை 3ஆவது தேசத்தை உருவாக்க வழிசெய்கிறது" என, ஓங்கி முழங்கினார்.

1953, பிப்பிரவரியில் 'காஷ்மீர் சலோ!' - 'காஷ்மீரை நோக்கிச் செல்லுங்கள்' என்ற போராட்டத்தை முகர்ஜி தொடங்கினார். அவர் காஷ்மீருக்குள் செல்ல முயன்றார்.

அப்போது காஷ்மீருக்கு இருந்த சிறப்பு உரிமைகளில் ஒன்று - காஷ்மீர் குடிமகன் அல்லாத மற்றவர்கள் - இந்தியர்களாக இருந்தாலும்கூட, "நுழைவு அனுமதிச்சீட்டு" பெற்றுக் கொண்டுதான் காஷ்மீர் மாநி

லத்துக்குள் செல்லமுடியும். இதற்கும் முகர்ஜி எதிர்ப்புத் தெரிவித்தார்.

உரிய அனுமதிச் சீட்டு இல்லாமல் நுழைகிறார் என்பதால், முகர்ஜி காஷ்மீர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 11-5-1953இல் கைது செய்யப்பட்டார். ஆனால், ஜன சங்கம் இதை எளிதில் விடுவதாக இல்லை. ஜம்மு-காஷ்மீர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் பட்டது. இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு 23-6-1953இல் வெளியாக இருந்தது. ஆனால், முகர்ஜி, 22-6-1953 இரவு காஷ்மீர் சிறையிலேயே மறை வுற்றார்.

மாரடைப்பு நோய் கண்டுதான் முகர்ஜி இறந்தார் என, காஷ்மீர் அரசு சார்பில் சொல்லப்பட்டாலும், அதுகுறித்து அய்யங்கள் நிலவின. அய்யப்பாட்டுக்கு உரிய சூழலில் முகர்ஜி இறந்ததாக ஜனசங்கக் கட்சி யினரும் மற்றும் வலதுசாரிக் கட்சியினரும் ஷேக் அப்துல்லா மீது குற்றஞ்சுமத்தினர். இவை நிற்க.


பாக்கித்தானில் அக்பர்கான் அடக்கப்பட்டு, முகமது அலி போக்ரா நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றி ருந்தார். அதுசமயம் 1953 சூனில் இலண்டனில் நடைபெற்ற இரண்டாவது எலிசபெத் மகாராணியின் பதவி ஏற்பு விழாவுக்கு இந்தியா, பாக்கித்தான் பிரதமர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கே சந்தித்த வேளையில் இருநாட்டுப் பிரதமர்களும் காஷ்மீர் சிக்கல் பற்றிப் பேசினார்கள். அன்றைய பேச்சு வார்த்தை சமூகமாக இருந்ததாக, செய்தியாளர்கள் கருத்துக் கூறினார்கள்.

இந்தியா, பாக்கித்தான் பிரதமர்கள் இலண்டனில் பேசியதை ஒட்டி, மீண்டும் கராச்சியில் ஒரு தடவை யும், தில்லியில் ஒரு தடவையும் சந்தித்துப் பேசினார் கள். அப்பேச்சுகளின் போது, காஷ்மீர் முழுவதிலும் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்தும் பொறுப் பை யாரிடம் ஒப்படைக்கலாம் என்பது பற்றிப் பேசினர் எனத் தெரிகிறது.

அப்போது விவாதத்துக்கு உரிய பெயர்களில் அமெரிக்க அட்மிரல் நிம்திஸ் என்பவரைத் தவிர வேறு யார் பெயரையும் ஆய்வுக்கே எடுத்துக் கொள்ள முடியாது என்று பாக்கித்தான் பிடிவாதமாகக் கூறி விட்டது. அந்த அமெரிக்க அட்மிரலை மட்டும் ஏற்க முடியாது என இந்தியா மறுத்தது. மற்ற யார் பெயரை யும் இந்தியா முன்மொழிவதையும் பாக்கித்தான் மறுத்தது. அதன்பிறகு, காஷ்மீர் மக்களிடம் வாக் கெடுப்பு நடத்துவது பற்றிய முயற்சியில் எந்த முன் னேற்றமும் ஏற்படவில்லை.

(தொடரும்)

# ஒழிக்கப்பட வேண்டியவை



மற்றபடி ஒவ்வொரு ஜமீன்தாரர்களுக்கும் மீதி யாகும் 10 இலட்சம், 20 இலட்சக்கணக்கான ரூபாய்கள் என்ன கதி ஆகின்றன என்று பார்த் தால், அதன் உண்மை நன்கு விளங்கும்.

மற்றும் இதுபோலவே இன்னும் இரண்டொரு கூட்டம் உண்டு. அதாவது லேவாதேவிக்காரர்கள், மில் முதலாளிகள் முதலாகிய வர்களாவார்கள்.

லேவாதேவி என்பது ஒரு கொடுமையான தொழி லேயாகும். அதற்கு வேறு பெயர் சொல்ல வேண்டு மானால் சட்டப்படிக் கொடுமைப்படுத்திக் கொள்ளை யடிப்பதேயாகும். ஜமீன் தன்மையின் பயனாய் எப்படி உலக நிலங்கள் எல்லாம் நாளாவட்டத்தில் சிலருக்கே சொந்தமாகி விடுகின்றதோ அதேபோல், லேவாதேவியென்பதும் உலகச் செல்வங்களை யெல்லாம் சிலருக்கே சொந்தமாக்கும் சூழ்ச்சியே யாகும். இவர்களாலும் உலகத்திற்கு யாதொரு பயனும் கிடையாது. கேடே அதிகமாகும்.

மற்றும் மில் (இயந்திர சாலை) முதலாளிகள் என்பவர்களும் பாடுபட்டு உழைக்கும் மக்கள் பயனை அனுபவித்துக் கொண்டு பெரும்பான்மை மக்களை என்றும் ஏழைகளாக - தாழ்த்தப்பட்டவர்களாக வைத் திருப்பவர்கள். இந்தக் கூட்டத்தாரும் நாட்டுக்கு அவசியமில்லாதவர்களேயாவார்கள்.

இந்த மூன்று கூட்டமும் ஒருநாட்டில் இருக்குமா னால், அந்த நாட்டுக்கு எப்படிப்பட்ட “சுயராஜ்யம்”, “குடியரசு”, “குடிஆட்சி” கிடைத் போதிலும் அது ஒரு விநாடி கூட ஜனநாயகமாக இருக்க முடியவே முடியாது. ஏனெனில், மேற்கண்ட கூட்டம் எப்பொழு தும் செல்வம் பெருக்கிக்கொண்ட கூட்டமாகவும், மற்ற கூட்டம் என்றும் எழைக் கூட்டமாகவும்தான் இருக்கும். ஆகவே செல்வவான்கள் ஏழைகளின் வாக்கை (ஓட்டுகளை) விலைக்கு வாங்கித் தாங் களே ஆட்சிக்காரர்களாய் வந்துவிடக்கூடும்.

**- ஈ.வெ.ரா.**

(குடிஅரசு, தலையங்கம், 27.8.1933)

# புதிய பயிர்க்காப்பீட்டுத் திட்டமும், இணையதளச் சந்தையும் உழவர்கள் வாழ்வை உயர்த்துமா? வேளாண்மையை மேம்படுத்துமா?

- க. முகிலன்

2014-2015ஆம் ஆண்டில் இந்திய அளவில் 12 விழுக்காடும், 2015-2016ஆம் ஆண்டில் 14 விழுக் காடும் சராசரி மழை அளவில் பற்றாக்குறையாக மழை பெய்துள்ளது. சுதந்தரம் பெற்றபின் அடுத் தடுத்து இரண்டு வறட்சி ஆண்டுகள் அமைவது, இது மூன்றாவது தடவையாகும். 1901 முதல் என்று பார்த் தால் இது நான்காவது தடவையாகும்.

இந்தியாவில் உள்ள 670 மாவட்டங்களில் 307 மாவட்டங்கள் கடுமையான வறட்சியின் பிடியில் உள்ளன. இந்தியாவில் பயிரிடப்படும் நிகர நிலப் பரப்பு 14 கோடி எக்டேர். ஒரு போகத்துக்குமேல் பயிரிடப் படும் பரப்பையும் சேர்த்தால் மொத்த சாகுபடிப்பரப்பு 19 கோடி எக்டேர். இதில் 40 விழுக்காடு பரப்பு இப் போது கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள 91 பெரிய நீர்த்தேக்கங்களில் ஏப்ரல் மாதம் முதல் கிழமையில் அவற்றின் மொத்தக் கொள்ளளவில் 23 விழுக்காடு அளவுக்குத்தான் தண் ணீர் இருந்தது. மகாராட்டிரம், கர்நாடகம், குசராத், இராஜஸ்தான், அரியானா, சத்தீஸ்கர், பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட், தெலுங்கானா, ஆந்திரம் ஆகிய வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாநி லங்களில் 256 மாவட்டங்களைச் சேர்ந்த 2,55,923 கிராமங்களில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் 33 கோடி மக்கள் வறட்சியின் கொடுமையில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மகாராட்டிரத்தில் ஒரு சொட்டு நீர் கூடக் கிடைக்காத லத்தூர் பகுதிக்குத் தொடர்வண்டி மூலம் காவல் துறையின் பாதுகாப்புடன் நாள்தோறும் 50,000 லிட்டர் தண்ணீர் அனுப்பப்பட்டு வருகிறது.

பல மாநிலங்களில் கொடிய வறட்சி நிலவுவதற்கு அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகள் போதிய மழை பெய்யவில்லை என்பது முதன்மையான காரணம். எனினும் 1991 முதல் நடுவண் அரசும் மாநில அரசு களும் நீர்ப்பாசன வசதியைப் பெருக்காததும், மொத்த விவசாயிகளில் 83 விழுக்காட்டினராக உள்ள சிறுகுறு விவசாயிகளின் நலன்களைப் புறக்கணித்து, பெரும் பண்ணை-கார்ப்பரேட் வேளாண்மைக்கும், வேளாண் விளைபொருளின் சந்தையில் தனியார் ஆதிக்கத்தை ஊக்குவித்ததும் மற்ற முதன்மையான காரணிகளாகும்.

இந்தியாவில் 2 எக்டேருக்கும் (5 ஏக்கர்) குறை வாக நிலம் வைத்துள்ள 83 விழுக்காடு விவசாயி களிடம் உள்ள நிலம், மொத்தப் பரப்பில் 40 விழுக் காடாகும். **மீதி 17 விழுக்காட்டினராக உள்ள பெரிய விவசாயிகளிடம் 60 விழுக்காடு பரப்பு நிலம் உள்ளது. இவர்கள் மட்டுமே வேளாண்மையில் வருவாய் ஈட்டும் நிலையில் இருக்கின்றனர். ஒரு எக்டேருக்கும் (2.5 ஏக்கர்) குறைவாக நிலம் உடையவர்கள் 70 விழுக்காட்டினர். இவர்களின் நிலம் பெரும்பாலும் வானம் பார்த்த நிலமாக இருக்கிறது.**



*வறண்டுவிட்ட கிணற்றின் அருகே வாழ்வைத் தொலைத்துத் தவிக்கும் உழவர்*

1991இல் தாராள மயம், தனியார் மயம், உலக மயம் என்கிற முதலாளித்துவ நலன்களைப் பேணும் கொள்கையை நடுவண் அரசும், மாநில அரசுகளும் செயல்படுத்தத் தொடங்கிய பின், வேளாண் தொழில் நசிந்தது. வேளாண்மையில் வேலை வாய்ப்புக் குறைந்தது. வருவாய் தரக்கூடியதாக வேளாண்மை இல்லாத நிலை ஏற்பட்டதால், சிறு, குறு உழவர்களும், வேளாண் கூலித் தொழிலாளர்களும் வேளாண் தொழிலைக் கைவிட்டு, நகரங்களை நோக்கி வேறு வேலை தேடிச் சென்று கொண்டிருக்கின்றனர்.


2011-2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடுவண் அரசின் புள்ளியியல் துறையின் 68ஆவது தேசிய மாதிரி ஆய்வறிக்கையின்படி, 2004-2005 முதல் 2011-2012 வரையிலான காலத்தில் 360 இலட்சம் பேர் வேளாண் தொழிலைக் கைவிட்டு, வேளாண்மை அல்லாத தொழிலுக்கு மாறிச் சென் றுள்ளனர். எனவே மொத்த உழைக்கும் அகவையில் இருப்பவர்களில் (Workforce) வேளாண் தொழலில் இருப்போர் 50 விழுக்காட்டுக்கும் குறைவாக இருக்கும் நிலைமை சுதந்தர இந்தியாவில் முதல் தடவையாக ஏற்பட்டுள்ளது. வேளாண்மையிலிருந்து வெளியேறி நகரங்களை நாடிச் சென்றவர்களில் பெரும்பாலோர் கட்டுமானத் தொழிலில் கூலி வேலை செய்கின்றனர். மற்றவர்கள் உதிரிப் பாட்டாளிகளாக இருக்கின்றனர்.

1951இல் உழவர்களின் எண்ணிக்கை மக்கள் தொகையில் 71.9 விழுக்காடாக இருந்தது. ஆனால், 2011இல் இது 45.1 விழுக்காடாகக் குறைந்துள்ளது (ஃபிரண்ட் லைன், மார்ச்சு 4, 2016).

கடந்த இருபது ஆண்டுகளில் மூன்று இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். விவசாயிகளின் தற்கொலை ஆட்சியாளர்களுக்குத் தலைவலியான செய்தியாக இருப்பதால், மோடி தலைமை அமைச்சாரான பிறகு தற்கொலை செய்து கொள்ளுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட ஒரு குறுக்கு வழியைக் கையாண்டார். பொதுவாக, "விவசாயி" என்ற சொல் சொந்தமாக நிலம் உடையவர்களையும், குத்தகைக்குப் பயிரிடுவோரையும், வேளாண் கூலித் தொழிலாளர்களையும் குறிக்கும். ஆனால் மோடி அரசின் அறிவுறுத்தலின் பேரில், தேசியக் குற்றப் பதிவு ஆவணக் காப்பகம் 2014ஆம் ஆண்டில் சொந்த நிலம் உடைய உழவர்களின் தற்கொலையை மட்டும் விவசாயிகள் தற்கொலைப் பட்டியலில் காட்டியது. எனவே 2013ஆம் ஆண்டில் 11,744 பேர் என்றிருந்த விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கையைத் தேசியக் குற்றப்பதிவு ஆவணக் காப்பகம் 2014ஆம் ஆண்டில் 5,650 மட்டும் என்று கணக்குக் காட்டியது. 2014ஆம் ஆண்டில் குத்தகை விவசாயிகள், கூலித் தொழிலாளர் ஆகியோர் 6,710 பேர் வேளாண்மைக் கடன் சுமையாலும், வேலை கிடைக்காததாலும் தற்கொலை செய்து கொண்டனர். இந்த எண்ணிக்கையையும் சேர்த்தால் 2014இல் 12,360 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர் என்பது தெரியவரும். இந்த எண்ணிக்கை 2013இல் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையை விட அதிகம். எனவே மோடியின் ஆட்சியிலும் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது அதிகமாகி வருகிறது என்பதை மூடி மறைக்க முடியாது.

**நடுவண் அரசின் வேளாண் துறை அமைச்சர், 2015இல், நாடாளுமன்றத்தில் "விவசாயிகள் தற்கொலை செய்வதற்கான காரணிகளில் காதல் தோல்வி, வரதட்சணைக் கொடுமை, குழந்தையின்மை ஆகியவையும் அடங்கும்" என்று, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் பேசியிருக்கிறார்.**

திட்டக்குழுவைக் கலைத்துவிட்டு, அதற்கு மாற்றாக மோடி அரசு அமைத்துள்ள 'நிதி ஆயோக்' (Niti Aayog) 2015 திசம்பர் மாதம் வேளாண்மை குறித்து ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில், உற்பத்தித் திறனைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; விவசாயிகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கேனும் இலாபம் கிடைக்கச் செய்ய வேண்டும்; மரபணு மாற்றப்பட்ட பயிர்களை அனுமதிக்க வேண்டும்; வேளாண் விளை பொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price - MSP) அளிப்பதற்குப் பதிலாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் செலுத்தலாம் என்பன உள்ளிட்ட பல பரிந்துரைகள் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.




*ஒடிசா மாநிலத்தில் தண்ணீரைத் தேடி வெடிப்புற்ற வயலில் நடக்கும் சிறுவர்கள்*

விவசாயிகளுக்கு அரசின் மூலம் கிடைத்துவரும் குறைந்தபட்ச ஆதரவு ஏற்பாடுகளையும் ஒழிப்பதே இந்த அறிக்கையின் நோக்கமாக உள்ளது.

இப்பரிந்துரைகளில் விவசாயிகளுக்கு ஓரளவுக்கேனும் இலாபம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மட்டும் பார்ப்போம்.

புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பத்து ஆண்டுகளுக்கு முன், தேசிய உழவர் ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் நடுவண் அரசிடம் அளித்த அறிக்கையில், "விவசாயி ஒரு பயிரைச் சாகுபடி செய்வதற்குச் செலவிடும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு அளவுக்கு இலாபம் கிடைக்கும் வகையில் அரசு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்வதுடன் அந்த அளவுக்கு இலாபம் கிடைப்பதற்கான ஏற்பாட்டையும் உருவாக்க வேண்டும்" என்று வலியுறுத்தி இருந்தார். அமெரிக்காவில் இது நடப்பில் உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் இத்திசையை நோக்கி மய்ய-மாநில அரசுகள் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தேசிய உழவர்கள் ஆணைய அறிக்கையை அளித்துப் பத்தாண்டுகளானதையொட்டி எம்.எஸ். சுவாமிநாதன் 19.3.2016 அன்று அவருடைய கருத்தைத் தெரிவித்துள்ளார். "விவசாயிகளுக்குத் திட்டவட்டமான இலாபம் கிடைப்பது உறுதி செய்யப்பட்டால் தான், வேளாண்மையில் இளைஞர்கள் ஈடுபட முன் வருவார்கள். இந்தியாவில் இப்போது வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்கள் 90 விழுக்காட்டினர் 60 அகவையைக் கடந்தவர்கள். நிதி அமைச்சர் அருண் ஜெட்லியோ, நிதிநிலை அறிக்கையில், விவசாயிகளின் வருவாய் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் (2022)



மத்தியப் பிரதேசத்தில் திக்கம்கர் மாவட்டத்தில் ஒரு குடம் நீருக்காகப் பலமணி நேரம் காத்திருக்கும் பெண்கள்

இரண்டு மடங்காக உயர்த்தப்படும் என்று கூறியிருக் கிறார். அவ்வாறு நிகழ வேண்டுமானால், வேளாண் மையின் வளர்ச்சி ஆண்டிற்கு 14 விழுக்காடாக இருக்க வேண்டும். இப்போதுள்ள 1.5 விழுக்காடு வளர்ச்சியை வைத்துக் கொண்டு, இதை எப்படிச் சாதிப்பது என்று அவரோ, மற்றவர்களோ கூறவில்லை. தேசிய உழவர் ஆணையம் மொத்த உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு இலாபம் பெறுமாறு குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) நிர்ணயிக்க வேண்டும் என்று பரிந் துரைத்தது. இது நிறைவேற்றப்படவில்லை'' என்று சுவாமிநாதன் கூறினார் (''தி இந்து'', ஆங்கிலம், 20.3.2016). ஆனால் ''நிதி ஆயோக்'' குறைந்தபட்ச ஆதரவு விலை என்பதையே நீக்கிவிட வேண்டும் என்று அண்மையில் நடுவண் அரசுக்குப் பரிந்துரைத் துள்ளது. எனவே வேளாண் தொழிலை - உழவர் களின் நலனைக் காப்போம் என்று ஆட்சியாளர்கள் கூறுவது அப்பட்டமான பித்தலாட்டமே ஆகும்.


2016-2017ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக் கையை நிதி அமைச்சர் அருண் ஜெட்லி நாடாளு மன்றத்தில் முன்மொழிந்த போது, முன்னுரைக்குப் பின், முதலாவதாக, ''வேளாண்மை மற்றும் உழவர் கள் நல்வாழ்வு'' என்ற தலைப்பில் அறிக்கையைப் படித்தார். இந்த அரசு வேளாண்மைக்கே முதலிடம் தருவதாகக் கூறினார். முதலாளிகளுக்கான அரசு என்பதை மூடிமறைப்பதற்கான ஓர் அரசியல் உத்தி இது!

இதில் முதல் பத்தியில், வேளாண்மைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.35,984 கோடி என்று கூறப்பட்டுள்ளது. இது 2015-2016ஆம் ஆண்டில் வேளாண்மைக்காகச் செலவிடப்பட்ட ரூ.15,809 கோடி யை (திருத்திய மதிப்பீடு - Revised Estimation)விட இப்போது ரூ.20,074 கோடி கூடுதலாக ஒதுக்கப் பட்டுள்ளதாக மோடி அரசு பெருமை பாராட்டியது.

**ஆனால் உண்மை என்னவெனில், இந்த 20,074 கோடியில் ரூ.15,000 கோடி என்பது 2014-2015 ஆம் ஆண்டில் வட்டி மானியமாகச் செலவிடப் பட்ட தொகையாகும். இது கடந்த ஆண்டில் அரசின் செலவினத்தில் வேறு பிரிவில் கணக்கிடப் பட்டிருந்தது.**

விவசாயிகள் வங்கிகளில் பெறும் கடனில் ரூ.3 இலட்சம் வரையிலான குறுகிய காலப் பயிர்க்கடன்கள் மீதான வட்டியில் 2 விழுக்காடு தள்ளுபடி செய்யப் படுகிறது. **2016-2017ஆம் ஆண்டில் விவசாயி களுக்கான கடன் தொகை ரூ.9,000 கோடி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2015-2016இல் இதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.8,600 கோடியில் 75 விழுக்காட்டுத் தொகை ஒரு கோடிக்குமேல் கடன் பெற்றவர்களுக்குத் தரப்பட்டது. 25 கோடி வரை ஒருவருக்குக் கடன் தரும் நிலை உள்ளது. பெரிய நிலப் பண்ணையாளர்களும், உழு கருவிகள், சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் தயாரிக்கும் முதலாளிகள்தான் ஒரு கோடிக்கும் மேல் கடன் பெறுகின்றனர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.**

மேலும் வேளாண் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவோருக்கு 3 விழுக்காடு ஊக்கத் தொகை கடன் தொகையில் கழிக்கப்படுகிறது. இந்த வட்டி மானியம் 2006இல் ரூ.1000 கோடியாக இருந்தது. 2014-2015இல் ரூ.15,000 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த வட்டி மானியத் தொகையை 2016-2017ஆம் நிதிநிலை அறிக்கையில் வேளாண் மைக்கான செலவினத்தில் சேர்த்துவிட்டதை மாபெரும் சாதனையாக அருண் ஜெட்லி மார்தட்டிக் கொள்கிறார். கடந்த ஆண்டின் திருந்திய மதிப்பீட்டுத் தொகையுடன் (Revised Estimate) ஒப்பிடுகையில் உண்மையில் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.5,074 கோடி




மட்டுமே ஆகும். மொத்தத்தில் 2015-2016இல் வேளாண்மைக்கு பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகையைவிட 2016-2017ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் கூடுதலாக நிதி ஒதுக்கவில்லை என்பதே உண்மையாகும். ரிசர்வ் வங்கி அமைத்த தீபக் மொகந்தி தலைமையிலான குழு, 2015 திசம்பர் 28 அன்று அளித்த அறிக்கையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் வட்டி மானியத்தை நீக்குமாறும், அத்தொகையைப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்துக்கு ஒதுக்கலாம் என்றும் பரிந்துரைத்துள்ளது. எனவே விவசாயிகளின் வட்டி மானியம் கேள்விக் குறியாக நிற்கிறது!

வேளாண்மைக்கு முதலிடம் தரப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 2016-2017ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், பாசனத் திட்டங்களுக்கான நிதி, "கிருஷி கல்யாண் செஸ்" (வரி) மூலம் நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டுள்ளது. புதிதாக விதிக்கப்பட உள்ள இந்த வரி மூலம் எவ்வளவு தொகை திரட்டப்படும் என்பது கூறப்படவில்லை. ஏற்கெனவே கல்வி வரி (Education Cess) மூலம் வசூலாகும் தொகையில் கல்வி மேம்பாட்டுக்காக எவ்வளவு தொகை பயன்படுத்தப்படுகிறது என்பது யாருக்குமே தெரியாது. இந்நிலையில் பாசனத் திட்டத்துக்கும் புதியதாக வரி விதிக்கப் போவதாக நடுவண் அரசு கூறியிருப்பது, கல்வி, சுகாதாரம் போன்றவற்றிலிருந்து அரசு தன் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு, அவை தனியாரின் கொள்ளைக்குத் திறந்துவிட்டது போல், நீர்ப்பாசனத்தையும் தனியாருக்குத் தாரைவார்க்கப் போகிறதா?

விவசாயிகளின் வருமானத்தை அடுத்த ஆறு ஆண்டுகளில் இரண்டு மடங்காக உயர்த்திட இலக்கு நிர்ணயித்திருப்பதாக அருண் ஜெட்லி கூறியிருக்கிறார் என மேலே கண்டுள்ளோம். கடந்த 30 ஆண்டுகளில் விவசாயிகளின் வருவாய் 19 விழுக்காடு உயர்ந்திருக்கிறது. அரசு ஊழியர்களின் சம்பளம் 370 விழுக்காடு கூடியிருக்கிறது. கார்ப்பரேட் துறையினரின் சம்பளம் 1000 விழுக்காடு அதிகமாகி உள்ளது. 30 ஆண்டுகளில் உயராத விவசாயிகளின் வருவாய் 6 ஆண்டுகளில் இரண்டு மடங்காகிவிடுமா?

**பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்:**

நடுவண் அரசு 2016இல் "பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்" என்பதை அறிவித்துள்ளது. இது விவசாயிகளுக்குக் காப்பரணாக விளங்கும் புரட்சிகரமான திட்டம் என்று மோடி கூறுகிறார். உண்மையென்னவெனில், பயிர்க் காப்பீட்டுத் திட்டம் 1947 முதலே நடப்பில் இருக்கிறது. ஆனால் எந்த ஆட்சிக் காலத்திலும் இதனால் விவசாயிகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் பயன்பெறவில்லை.

**மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்களாலோ அல்லது பெருமளவில் பூச்சி நோய் தாக்குதலாலோ பயிர்கள் பாழ்பட்டு விளைச்சல் பாதிக்கப்படும் போது, விவசாயிகளுக்கு இழப்பீடு தருவதே பயிர்க்காப்பீட்டின் நோக்கம் ஆகும்.**

ஒரு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட பயிர் 50 விழுக்காடு பரப்பளவில் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீடு கோர முடியும். மேலும் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பிரீமியம் தொகையைச் செலுத்தி அதில் சேர்ந்திருக்கும் விவசாயிகளுக்கு மட்டுமே இழப்பீடு கோரும் உரிமை உண்டு. அரசு வங்கியில், வேளாண் கூட்டுறவு வங்கியில் விவசாயி கடன் பெறும் போது காப்பீட்டுக்கான பிரீமியத் தொகை



*24-04-2016 அன்று கம்பம் அருகே இராமசாமிநாயக்கன் பட்டி பகுதியில் வீசிய காற்றில் முறிந்து விழுந்த வாழை மரங்கள்*

பிடித்தம் செய்யப்படுகிறது.

பயிர்க் காப்பீடு விவசாயிகளுக்கான திட்டம்; ஆனால் பெரும்பாலான விவசாயிகளுக்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது. 2013ஆம் ஆண்டில் வேளாண் நிதிக்குழு வெளியிட்ட அறிக்கையில், பொதுத் துறை வங்கியில் அல்லது கூட்டுறவு வங்கியில் கடன் பெற்ற விவசாயிகளில் 65 விழுக்காட்டினருக்கு - கடன்பெறும் போது பயிர்க் காப்பீட்டுத்திட்டத்தில் கட்டாயம் சேர வேண்டும் என்பது பற்றி அறியாதிருந்தனர்; 28 விழுக்காடு விவசாயிகள் மட்டுமே பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேருவதற்காகப் பிரிமீயம் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிந்திருந்தனர்.

மேலும் பயிர்க் காப்பீடு திட்டம் பற்றித் தெரிந்து வைத்துள்ள விவசாயி, தான் பயிரிடும் பயிரின் பரப்பு முழுவதற்கும் காப்பீடு செய்து கொள்ள முடியாது. சாகுபடி செய்யும் பரப்பில் 25 விழுக்காடு பரப்பளவுக்கு மட்டுமே பயிர்க் காப்பீடு பெற முடியும். எனவே தற்போது மோடி அரசு அறிவித்துள்ள பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்ட அறிக்கையில், 19.44 கோடி எக்டேர் சாகுபடி பரப்பில் 25 விழுக்காடு மட்டுமே காப்பீடு செய்யப்படுகிறது; அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இதை 50 விழுக்காடாக உயர்த்திட இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

அரசின் புள்ளி விவரம் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் எந்த அளவுக்கு மோசமான நிலையில் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. 2012இல் நாட்டில் உள்ள நெல் விவசாயிகளில் 95.2 விழுக்காட்டினர் பயிர்க் காப்பீடு செய்யவில்லை. இதேபோல் கோதுமை விவ சாயிகளில் 95.3 விழுக்காட்டினர் பயிர்க் காப்பீடு செய்யவில்லை (தினமணி, 10.3.2016, பி.எஸ்.எம். ராவ் கட்டுரை). இதற்குக் காரணம் என்ன?

**மொத்த விவசாயிகளில் 70 விழுக்காட்டினர் ஒரு எக்டேருக்கும் குறைவாக நிலம் உடைய வர்கள். இவர்களுக்கு வங்கிகளில் கடன் கிடைப்ப தில்லை. எனவே இவர்கள் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேரவில்லை.**

மேலும் பெருமளவில் பயிர் பாழாகும் போது கட்டாயம் இழப்பீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாகப் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் இல்லை. ஏனெனில் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட மொத் தப் பரப்பில் 50 விழுக்காடு பரப்பில் பயிர் பாழா னால்தான் எந்தவொரு விவசாயியும் காப்பீடு பெற முடியும். இந்த அளவுக்குப் பயிர் பாழாவது அரிதினும் அரிதாகவே நிகழும். அப்போது வருவாய்த் துறையின் கிராம நிர்வாக அலுவலர், அரசின் வாய்மொழி ஆணை யைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, பாதிக்கப்பட்ட பரப்பு 50 விழுக்காட்டுக்கும் குறைவு என்று அரசுக்கு அறிக்கை தருவார். அந்நிலையில் விவசாயிகள் இழப்பீடு பெறமுடியாது. தற்போது நடுவண் அரசு கொண்டு வந்துள்ள பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 50 விழுக்காடு பரப்பு என்பதை 33 விழுக்காடு எனக் குறைக்கப்பட்டுள்ளது. இனி கிராம நிர்வாக அலுவலர் பாதிக்கப்பட்ட பரப்பு 33 விழுக்காட்டுக்கும் குறைவு என்று கணக்குக் கொடுத்தால் போதும், எந்த விவசா யிக்கும் காப்பீட்டுத் தொகை கிடைக்காது.

இதுவரையில் நடைமுறையில் இருந்த தேசிய விவசாயக் காப்பீட்டுத் திட்டம், மாற்றியமைக்கப்பட்ட விவசாயக் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கு மாற் றாக, பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. 2016 காரிப் பருவம் (சூன் 1) முதல் இது நடப்புக்கு வரும். இதன்பாடி காரிப் (சூன்-செப் டம்பர்) பருவப் பயிர்களுக்கு 2 விழுக்காடு பிரீமியம், ராபி (அக்டோபர்-மார்ச்சு) பருவப் பயிர்களுக்கு 1.5 விழுக்காடு பிரீமியம், தோட்டப் பயிர்களுக்கு 5 விழுக் காடு பிரீமியம் விவசாயிகளிடமிருந்து பெறப்படும். மீதி பிரீமியத் தொகையை அரசே ஏற்கும் எனக் கூறப் பட்டுள்ளது.

நடுவண் அரசு நிதிநிலை அறிக்கைப்படி இதற்காக ரூ.5,500 ஒதுக்கியுள்ளது. மாநில அரசுகள் அனைத் தும் சேர்ந்து ரூ.5,500 கோடி நிதியை ஒதுக்க வேண் டும். அதாவது நடுவண் அரசும் மாநில அரசும் 50:50 விகிதத்தில் இதற்கு நிதி வழங்க வேண்டும். இத்திட் டத்தை இந்திய விவசாயக் காப்பீட்டு நிறுவனமும், பத்து தனியார் காப்பீட்டு நிறுவனங்களும் இணைந்து செயல்படுத்த உள்ளன. ஒரு மாநிலத்துக்கு ஒரு தனியார் காப்பீட்டு நிறுவனம் என ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய காப்பீடு தொடர் பானவற்றில் தனியார் காப்பீடு நிறுவனங்களுக்கே முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மருத்து வக் காப்பீட்டுத்திட்டத்தில் தனியார் மருத்துவமனை களும் தனியார் காப்பீட்டு நிறுவனங்களும் பெருமள வில் ஆதாயம் அடைவதைப் போல, பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டமும் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் கொழுத்திடவே வழிவகுக்கும்.

**2014 நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி பயிர்க் காப்பீட்டுக்கான "அடிப்படை அலகு ஊராட்சி ஒன்றியம்" என்பதை "ஊராட்சி" என்ற அளவீடாக மாற்றுவதாக அறிவித்தார். ஆனால் இப்போது நடுவண் அரசு அறிவித் துள்ள பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றிய அளவிலான பரப்பே அடிப்படை அலகாக நீடிக்கிறது. இதை உடனடியாக ஊராட்சி அளவில் என்பதாக மாற்றுவதுடன், ஒரு விவசாயியின் பயிர் சேதமடைந்தாலும் (கோடையில் வேகமான காற்றில் வாழை மரங்கள் அடியோடு சாய்வது போன்றவை) அவர் சாகுபடிக்குச் செலவிட்டதை விடக் கூடுதலான தொகை இழப்பீடாகக் கிடைத் திடும் வகையில் உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், ஊர் விவசாயக் குழுக்களுக் கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இப்படி, பயிர் முற்றிலும் பாழாகும் நிலையில் கூடுதல் இலாபம் கிடைக்காவிட்டாலுங் கூட, செய்த செலவை முழுமையாக மீட்பதற் கான வழியை உண்டாக்குவதன் மூலம் விவசாயிகளை ஊக்கு விக்க முடியும் என்பதுடன், அவர்கள் தற் கொலை செய்து கொள்வதிலிருந்தும் தடுக்க முடியும்.**

**இணையதள வேளாண்மை**

28.2.2016 அன்று உத்தரப்பிரதேசம் மாநிலத் தில் பரேலியில் பிரதமர் மோடி உரையாற்றிய போது, "வேளாண் சமூகத்தினரின் நலனைக் காப்பதற்காக டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்பிரல் மாதம் 14 முதல், 'இணையதள வேளாண்மை' தொடங்கப்பட உள்ளது. அந்த இணையதளம் வழியாக நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் விவசாயிகள் தங்களது விளை பொருள்களை விற்பனை செய்ய முடியும்" என்று கூறினார்.

இணையதள வேளாண்மை என்பது எல்லா வகையிலும் விவசாயிகளுக்குக் கேடு பயப்பதாகவும், வேளாண் விளைபொருள் சந்தையை முற்றிலுமாகத் தனியார் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு செல்வதாகவும் உள்ளது. பயிர்களுக்கான விவசாய செலவினம் மற்றும் விலை நிர்ணய ஆணையம் (Commission for Agricultural Costs and Prices - CACP) ஆண்டு தோறும் நெல், கோதுமை, கரும்பு, பருத்தி முதலான முதன்மையான பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) நிர்ணயிக்கின்றது. இந்த விலையில் விவசாயியிடமிருந்து அரசே விளை பொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும். தனியாரும் இதைப் பின்பற்ற வேண்டும் என்கிற விதி இல்லை.

கடந்த பத்து ஆண்டுகளாக நடுவண் அரசு மற்றும் மாநில அரசுகள் நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் விளைபொருள் முழுவதையும் அரசால் கொள்முதல் செய்ய முடியவில்லை. தமிழ்நாட்டில் காவிரிப் பாசனப் பகுதிகளில் அரசு கொள்முதல் நிலை யங்கள் மூடப்பட்டு வருகின்றன. மற்றும் ஒழுங்கு முறை விற்பனை நிலையங்கள் உள்ள இடங்களில் நெல் அரசின் கொள்முதல் விலையில் 60-70 விழுக்காடு விலையில்கூட கொள்முதல் வணிகர்கள் வாங்குவதில்லை. ஆலைகளுக்குக் கரும்பு அளித்த வகையில் 2015ஆம் ஆண்டில் மட்டும் விவசாயி களுக்கு ரூ.6000 கோடி நிலுவை வரவேண்டியுள்ளது. தனியார் மற்றும் பொதுத்துறை கரும்பு ஆலைகள் மூலம் ரூ.21,000 கோடி கரும்பு விவசாயிகளுக்கு நிலு வைத் தொகை தரப்பட வேண்டியுள்ளது.



விடியல் வருமா இவர்கள் வாழ்வில்!

**குறைந்தபட்ச ஆதரவு விலை என்பதும், அதன் அடிப்படையில் அரசு கொள்முதல் செய்வது என்பதும் அறவே ஒழிய வேண்டும் என்பதே முன்பு ஆட்சி செய்த காங்கிரசின் கொள்கையும், இப்போது ஆளும் பா.ச.க.வின் கொள்கையும் ஆகும். இதற்கான வழிவகுப்பதே "இணையதள வேளாண்மை". இணையதள வேளாண்மை பதுக் கலுக்கும் கள்ளச் சந்தைக்கும் வழிவகுக்கும். பெரும்பாலான விவசாயிகள் கல்வி பெறாதவர் களாக உள்ள நம் நாட்டில், கிராமங்களில் 40 விழுக்காடு அளவுக்கு மின்சார வசதியே இல்லாத அவல நிலையில், இணையதள வேளாண் மை - இணையதளம் மூலமாக விளைபொருள்களை விற்பது என்கிற திட்டம் விவசாயிகளைத் திட்டமிட்டு வஞ்சிப்பதாகும்.**

**வேளாண்மை இடுபொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தல், விலைபொருளுக்கு உரிய விலையை கிடைத்தல் (செலவு + 50 விழுக்காடு இலாபம்) ஆகிய இரண்டின் மூலமே விவசாயிகள் உயிர் வாழ முடியும்; வேளாண்மையை மேம்படுத்த முடியும்.**

# மானிடத்தை அலைக்கழிக்கும் போர்கள் :
## அமெரிக்கரின் ஆயுத விற்பனைச் சந்தைகளான வளரும் ஏழை நாடுகளும், வளர்ந்த நாடுகளும் எதிரிலுள்ள பேராபத்தை உணர வேண்டும்

- வே.ஆனைமுத்து

முதலாம் உலகப் போர் 1914-1918இல் நடை பெற்றது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட் டிருந்த இந்தியர்கள் போர் நடக்கிற நாடுகளுக்குப் போய்ப் போரிட்டு மாண்டார்கள்; இந்திய மக்கள் வெள்ளையர்கள் கேட்ட எல்லா உதவிகளையும் செய்ய நேர்ந்தது.

அந்தப் போரினால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டு வதற்கு முன்னர், 1939-1945இல், இரண்டாம் உலகப் போர் வெடித்தது.

1. "யூதர்கள் செர்மானியரைச் சுரண்டுகிறார்கள். அவர் களை அழித்து ஒழிக்க செர்மானியர்கள் போரிட வேண்டும்."
2. "உலகத்திலேயே செர்மானியர்கள் தான் தூய ஆரிய இரத்தம் உள்ளவர்கள். செர்மானியர்கள் உலகத்தை ஆளப் பிறந்தவர்கள்" என ஆணவத் தோடு முழங்கினான், அடால்ஃப் இட்லர்.

இரஷ்ய நாட்டில், 1917இல் சோசலிசப் புரட்சி வெற்றி பெற்று, 1924க்குள் வி.இ. லெனின் அவர்களால், தேச உடைமைகள் சமூக உடைமைகளாக ஆக்கப்பட்டன; தனியார் நில உடைமைகளும், மத நிறுவனங்களின் உடைமைகளும் சமூக உடைமைகளாக ஆக்கப்பட்டன.

1924இல் லெனின் மறைந்தார்.

1924இல் தொடங்கி 1936க்குள் அனைவர்க்கும் இலவசக் கல்வி தரப்பட ஜோசஃப் ஸ்டாலின் வழி வகுத்தார். அவரவர் தாய்மொழியில் கல்வி கற்க ஏற்பாடு செய்யப்பட்டது.

உழைப்புக்கு ஏற்ற ஊதியம், அடிப்படைத் தேவைக்கு ஏற்ற வசதிகள் எல்லோருக்கும் கிடைக்க வழிகாணப் பட்டது.

இன்னொரு பக்கம் - அமெரிக்கா, முதலாளித்துவத் துக்கும், தனி உடைமையாளர்கள் பாதுகாப்புக்கும் வழிவகுத்தது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியம், உலகத்தின் மூன்றில் ஒரு பங்கு பரப்பிலுள்ள கண்டங்களையும் நாடுகளை யும் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு, எல்லா நாடுகளையும் சுரண்டி பிரிட்டிஷ் குடிமக்களை வளமான வாழ்க்கை உள்ளவர்களாக ஆக்கிட எல்லாம் செய்தது.

இந்தியத் துணைக்கண்டம், ஆப்பிரிக்கக் கண்டம், ஆஸ்திரேலியக் கண்டம் எல்லாம் பிரிட்டிஷாரின் ஆட்சி ஆதிக்கத்தின்கீழ் அடிமை நாடுகள் ஆக்கப்பட்டன.

இவ்வளவு ஆதிக்கங்களையும் எதிர்த்து நின்றான் அடால்ஃப் இட்லர். 1941இல் இங்கிலாந்து செர்மானிய ரால் ஆக்கிரமிக்கப்படும் சூழல் உருவாகியது.

சோவியத்து நாட்டைக் கைப்பற்ற 1941இல் எத் தனித்த இட்லர், மளமளவென முன்னேறி, லெனின் கிராடைக் கைப்பற்ற அவன் திட்டமிட்டான்.

மூன்று பெரிய ஆதிக்க நாடுகளாக விளங்கிய அமெரிக்கா, பிரிட்டன், சோவியத்து இரஷ்யா இவை கூட்டணி அமைத்து எதிர்த்தாலன்றி, இட்லரின் முன் னேற்றத்தைத் தடுக்க முடியாது என்கிற அச்சம் ஊட்டும் நிலை தோன்றியது.

அப்போதுதான் சோவியத்துத் தலைவர் ஜோசஃப் ஸ்டாலின், பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் ஆகியோர் ஓரிடத்தில் கூடி, இட்லரைத் தோற்கடிக்க வியூகம் வகுத்தனர்.

அவ்வியூகம் வெற்றி பெற்றது.

ஆனாலும் 1953இல் சோவியத்து அதிபர் ஸ்டாலின் மறைந்த பிறகு, 35 ஆண்டுகளில், சோவியத்து சோசலிச அமைப்பு நிலை குலைந்தது.

மேலே சொன்ன முத்தரப்பு நாடுகளின் ஒரு ஒப் பந்தப்படி, பிரிட்டன் தன் ஆதிக்கத்திலிருந்த எல்லாக் குடியேற்ற நாடுகளுக்கும் அரசியல் விடுதலை தர நேர்ந்தது.

இந்தியா 1946 ஆகத்து 15இல் பிரிட்டிஷாரிட மிருந்து விடுதலை பெற்றது.

**பிரிட்டிஷார், வேண்டுமென்றே இந்தியா - பாக்கித்தான் எல்லைக்கோடு, இந்தியா-காஷ்மீர் எல்லைக்கோடு இவற்றை உறுதிப்படுத்தாமலே வெளியேறினர்.**

விடுதலை பெற்ற இந்தியாவில் 68 ஆண்டு களுக்குப் பிறகும் எல்லோருக்கும் ஒத்த கல்வி, எல் லோருக்கும் நல்ல குடிநீர், எல்லோருக்கும் அடிப்படை மருத்துவம், எல்லோருக்கும் குறைந்த அளவு வாழ்க் கைக்கான வசதிகள் இவற்றைச் செய்வதற்கான எதை யும் செய்யவில்லை.

மக்கள் தொகை 15 விழுக்காடாக உள்ள மேல்சாதிக் காரர்களும், 10 விழுக்காடாக உள்ள பெருநில உடைமைக்காரர்களும், 2 விழுக்காடு பேராக உள்ள பெருந் தொழிலதிபர்களும் இந்தியாவிலுள்ள 105 கோடி கீழ்ச்சாதி வேளாண் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டி - அவர்களும், உயர் அதிகார வகுப்பினரும், படைத் துறையினரும், உயர் நீதித் துறையினரும் மக்களின் வரிப்பணத்தில் உயர் வாழ்வு பெற்றவர்களாக இருக்க வழிவகுத்துக் கொண்டனர்.

இன்று இந்திய அரசு நிருவாகப் பணிகளில் 50 இலட்சம் பேர் உள்ளனர்; ஓய்வூதியப் பணியினர் 60 இலட்சம் பேர் உள்ளனர்.

மாநிலங்களின் அரசு நிருவாகப் பணிகளில் ஒரு கோடிப் பேரும், மாநில ஓய்வூதியர்கள் ஒரு கோடிப் பேரும் உள்ளனர்.

இவர்களுக்குச் சமமான எண்ணிக்கையில் 113 இலட்சம் பேர் படைத்துறையில் பணிபுரிகின்றனர். இவர்களுள் ஜம்மு-காஷ்மீர் எல்லைப் பாதுகாப்புக்கு மட்டும் 7 முதல் 8 இலட்சம் போர் வீரர்கள் பயன் படுகின்றனர்.

மேலே கண்ட இவர்கள் குறைந்த அளவு வாழ்க்கை வசதி பெற்றவர்கள்.

இந்த ஈனநிலைக்கு என்ன காரணம்?

1965 இந்தியா - பாக்கித்தான் போருக்குப் பிறகு, இந்தியாவுக்கான வரவு-செலவில், குறிப்பிட்ட பகுதி இராணுவச் செலவுக்கும், ஆயுதங்கள் உற்பத்திக்கும் அயல்நாடுகளிலிருந்து ஆயுதங்களும், வானூர்திகளும், போர்க் கப்பல்களும் வாங்குவதற்கும் - கடந்த 50 ஆண்டுகளாக, இந்திய உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பின் (GDP) கணிசமான பகுதி செலவிடப்படுகிறது.

இது, வளர்ந்த பணக்கார நாடுகளைப் பின்பற்றியே செய்யப்படுகிறது. அந்த நாடுகள் தம் மக்களுக்குக் கல்வி, வைத்தியம், வேளாண்மைக்குப் பெரிய நிதி உதவி இவற்றைப் போதிய அளவில் செய்துவிட்டு, உலக இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்க வேண்டியும்; தம் ஆயுத உற்பத்தி நுட்பம், திறமை இவற்றைக் கொண்டு ஆயுதங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து வளரும் ஏழை நாடுகளுக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கவும்; ஆயுதங்களைக் கொண்டு - மத ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம் இவற்றை நிலை நாட்டிக் கொள்ள வளரும் நாடுகள் தங்களிடையே போரிட்டுக் கொண்டு பாழாகவும் - இருந்த இடத்தில் இருந்து கொண்டே, அமெரிக்கர் வழி செய்கிறார்கள்.

இதை, கடந்த பல பத்தாண்டுகளாக அமெரிக்கா செய்கிறது.

அமெரிக்காவில் எந்தக் கட்சி - எந்த இனத்து அதிபர் ஆட்சிக்கு வந்தாலும் - உலக ஏழை நாடுகளிடம் ஆயுதங்களை விற்று, அவர்களைக் கடன்காரர்களாகவும், சுய உற்பத்தித் திறன் பெறாதவர்களாகவும் வைப்பதில் தவறுவதே இல்லை.

இன்று, அமெரிக்கா என்ன செய்கிறது?

2014இல்,

| | | | |
|---|---|---|---|
| 1. | அமெரிக்கா செய்த பாதுகாப்புக்கான (இராணுவத்துக்குரிய) செலவு | 609.9 | மில்லியன் டாலர் |
| 2. | சீனா | 216.4 | மில்லியன் டாலர் |
| 3. | இரஷ்யா | 84.5 | மில்லியன் டாலர் |
| 4. | சவுதி அரேபியா | 80.8 | மில்லியன் டாலர் |
| 5. | பிரான்சு | 62.3 | மில்லியன் டாலர் |
| 6. | பிரிட்டன் | 60.5 | மில்லியன் டாலர் |
| 7. | இந்தியா | 50.0 | மில்லியன் டாலர் |
| 8. | செர்மனி | 46.5 | மில்லியன் டாலர் |
| 9. | சப்பான் | 45.8 | மில்லியன் டாலர் |
| 10. | தென்கொரியா | 36.7 | மில்லியன் டாலர் |

உலகத்தில் உள்ள 220 நாடுகளில், மேலே கண்ட 10 நாடுகள் மட்டுமே இராணுவத்துக்காக அதிகம் செலவு செய்யும் நாடுகள்.

அமெரிக்காவிலுள்ள இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி மற்றும் ஆயுத விற்பனை செய்வோர் எந்தப் பெரிய அளவில் விற்பனை செய்கிறார்கள், தெரியுமா?

உலகில் 140 நாடுகளின் தேசிய உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GDP)த் தொகை எவ்வளவு இருக்குமோ, அந்த அளவுக்கு அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்கள் ஆயுதங்களை விற்கிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள லாக்ஹீட் மார்ட்டின் (Lockheed Martin) என்கிற ஒரு ஆயுத வியாபாரக் குழுமத்தார் மட்டும் - மேலே கண்ட 10 நாடுகளில் அமெரிக்கா தவிர்த்த மீதி, 9 நாடுகளின் இராணுவச் செலவும் தவிர்த்து - மீதியுள்ள நாடுகளின் இராணுவச் செலவு எவ்வளவு ஆகுமோ, அவ்வளவு தொகைக்கு ஆயுதங்களை விற்கிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள 43 ஆயுத விற்பனைக் குழுமத்தார் மட்டும் - ஆயுத விற்பனையில் முதலாவதான 100 இடத்தைப் பிடித்துள்ள குழுமங்களைக் காட்டிலும் - அதிக மதிப்புள்ள ஆயுத விற்பனையைப் பிடித்துள்ளன. (“Times of India”, 30.3.2016, Chennai).

**இதன் பொருள் என்ன? உலக நாடுகளில் எங்கும் அமைதி நிலவக்கூடாது.**

**கட்டுரைத் தொடர்-39**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்



**தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு நடவடிக்கை விபரம்; நிறைவேற்றிய தீர்மானங்கள்**

இன்று (நவம்பர் 13, 1938) பிற்பகல் 1 மணிக்கு சென்னை பெத்தநாய்க்கன் பேட்டை கிருஷ்ணாங் குளத்தையடுத்த காசி விஸ்வநாதர் கோயில் முன் பிருந்து தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டு ஊர்வலம் புறப்பட்டது. மாநாட்டுத் தலைவர் திருவாட்டி-திரு வரங்க நீலாம்பிகை என்ற நீலக்கண்ணியம்மையார், தோழர்கள் தாமரைக்கண்ணியம்மையார், பண்டித நாராயணி அம்மையார், டாக்டர் தருமாம்பாள், மூவா லூர் இராமாமிர்தம் அம்மையார், பார்வதி அம்மை யார், மலர் முகத்தம்மையார், கலைமகளம்மையார் முதலியோரும் தலைவர் தோழர் ஈ.வெ. ராமசாமி, தோழர் அ. பொன்னம்பலம், உள்ளிட்ட 5000-த்திற்கும் மேற்பட்டவர் ஊர்வலத்தில் கலந்துவந்தனர். மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், வரவேற்புக் கழகத் தலைவர்களைக் கோச்சில் வைத்து அழைத்துவரப் பட்டது. ஆயிரக்கணக்கான பெண்கள் தமிழ்க் கொடிகளை ஏந்தி, 'தமிழ் வாழ்க', 'தமிழ்நாடு தமிழருக்கே', 'இந்தி வீழ்க', 'தமிழ்ப் பெண்கள் வாழ்க', 'தமிழர் வாழ்க' என்ற கோஷங்களிட்டு வந்தனர். தமிழ்ப் பெண்கள் தமிழ் வாழ்த்துகள் பாடி வந்தனர். ஊர்வலத்தில் பெண் கள் மட்டிலும் 2000 பேர்கட்கு மேலிருந்தனர். ஊர்வலம் குப்பையா தெரு, தங்கசாலைத் தெரு, ஆதியப்பன் நாயக்கன் தெரு, வால்டேக்ஸ் ரோடு ஆகியவைகளின் வழியாக வந்து சரியாக 2 மணிக்கு மாநாட்டுக் கொட்ட கையாகிய ஒற்றைவாடை நாடகக் கொட்டகைக்கு வந்து சேர்ந்தது.

ஊர்வலம் வரும் முன்பே கொட்டகையிலும், கொட்ட கைக்கு வெளியிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிரம்பியிருந்தனர். கொட்டகையில் ஒலிபெருக்கிக் கருவி அமைக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் பெண்கள் 5000 பேர்கட்கு மேல் வந்து கலந்து கொண்டனர். மாநாட்டுக் கொட்டகை வாழை மரங்களாலும், கொடி களாலும் வரவேற்பு வளைவுகளாலும் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெளியில் நிற்போர்க்கும் கேட்குமாறு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்ததால், பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியிலிருந்தே பேச்சு களைக் கேட்டனர்.

முதலில் தலைவர், திறப்பாளர் முதலியவர்களை வைத்து ஒரு 'குரூப்' போட்டோ எடுக்கப்பட்டது. பின்னர், மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவரின் வேண்டுகோளுக் கிணங்கி, திருவாட்டி மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் மூவரசர் தமிழ்க்கொடியை ஏற்றி வைத்தார். அக்காலை திருவாட்டி மீனாம் பாள் பேசியதாவது :-

இம்மாபெரும் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில் என்னைக் கொடி உயர்த்தப் பணியளித்த வரவேற்புக் கழகத்தாருக்கு எனது நன்றி. நாம் இக்கொடியை எதற்காக ஏற்ற வேண்டும்? அக்காலத்து நம் தமிழ் மொழியையும், நாட்டையும் நம் தமிழரசர்கள் மூவரும் மிகத்திறம்பட வளர்த்து வந்தார்கள். காலப்போக்கில் தமிழர் தங்கள் கலையை மறந்தனர். அதனால் தான் இன்று இத்தகைய கீழான நிலைமையிலிருக்கின்றோம். பண்டைக் காலத்து எத்துணையோ பெண்கள் வீரமுடையவராகவும், சிறந்த கல்வியறிவுடையவர்களாகவும் விளங்கி வந்த னர். இன்றோ நம் நாட்டில் பெண் கல்வி மிகக் குறை வாக இருக்கின்றது. இந்த நிலையில் இந்தியும் கட்டாயப் பாடமாம். இதை நீங்கள் அவசியம் எதிர்த்துப் போராட வேண்டும். பெண்கள் தலையிட்ட காரியம் வெற்றி பெறுவது நிச்சயம் எனக் கூற விரும்புகிறேன். நமது உரிமைக்காகப் போரைத் தொடர்ந்து நடத்த வேண் டும். ஆண்கள் முயற்சிக்கு நாம் உறுதுணையா யிருந்து வெற்றி தேடவேண்டும். ஆண்மகனை உயர்த் தவோ தாழ்த்தவோ பெண்ணால் முடியும். எனவே ஆண்களும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கிப் பெண்களை முன்னேற்ற வழிசெய்ய வேண்டும். நமது கலை, நாகரிகம் உயர்வடைய வேண்டும். தமிழ் நாடு தமிழருக்கென்றாகும்வரை உண்மையாகப் பாடுபட வேண்டும். இக்கொடியைப் போல் நம் நாடும் உயர்ந்து விளங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மீண்டும் உங்கட்கு வந்தனந் தெரிவித்து இத்தமிழ்க் கொடியை உயர்த்தி வைக்கிறேன்.

திருவாட்டிகள் சி. கலைமகள் பட்டு, தாமரைக் கண்ணியம்மையார், பார்வதியம்மையார் முதலியவர் கள் தமிழ்ப் பாட்டுகள் பாடினர்.

பின்னர் திருவாட்டி பண்டிதை அ. நாராயணியம் மையார் மாநாட்டைத் திறந்து வைத்தார் (பிரசங்கம் பின்னர் வெளிவரும்).

பின்னர், திருவாட்டி - திருவரங்க நீலாம்பிகை அம்மையாரைத் தலைமை வகிக்குமாறு வரவேற்புக் கழகத் தலைவர் கேட்டுக் கொண்டார். அதை ஆதரித்து திருவாட்டிகள் மூவலூர் இராமாமிர்தம், மலர்முகத்தம் மையார், இராணியம்மாள் (தோழர் கண்ணுத்துரை யவர்களின் மனைவி) ஆகியோர் பேசினர்.

டாக்டர் எஸ். தருமாம்பாள், மாநாட்டுத் தலை வருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்தார். அது வருமாறு :

தமிழ்ப் புலமைத் தனியரசமைப்பு மறைமலை யடிகள் பயக்த மாசிலா மாணிக்கமே!

எங்கள் வேண்டுகோட்டிற்கிணங்கி நானூறு கல் நடந்து இச்சென்னை நகர் போந்து இப்பேரவைக்குத் தலைமை தாங்கும்தங்களை உளம் ததும்பும் உவ கையுடன் யாங்கள் வரவேற்கிறோம்.

தமிழ்ப்பாதுகாப்பிற்காகத் திடமுடன் உழைத்துச் சிறைபுகுந்த தமிழ்ப் புலவரான மறைத் திருநாவுக் கரசின் தமக்கையார் பேறு வாய்ந்த தமிழ்ப் பெரு மாட்டியே!

தமிழுக்குப் பண்டெல்லாம் பேரிடர்கள் பல விளைந் தன. அவ்வப்போது அதற்கேற்ற தமிழ் வீரர்களும், வீரப் பெண்மணிகளும் தோன்றி அவ்விடர்களைக் களைந்தமை ஆராய்ச்சி வல்லார் நன்கறிந்ததே. அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழிக்கு இன்று நேரிட் டிருக்கும் பேரிடர்களைக் களைந்து அது மேன்மேலும் சிறப்புற்றோங்கும் திருப்பணியில் ஈடுபட்டுத் தலைமை தாங்கி நடத்தத் தங்களைக் காட்டிலும் சிறந்த ஒப்பற்ற தலைவியார் வேறெவருமில்லை என்பதை யாங்கள் எடுத்துக்கூறவும் வேண்டுமோ!

நூல் பல எழுதி நுண்பலம் தெரிந்த நங்கையர் திலகமே!

அரிதின் முயன்று தாங்கள் எழுதியுதவிய தனித் தமிழ்க் கட்டுரைகள், முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர், ஐரோப்பிய அருண் மாதரிருவர் என்ற தமிழ் நூல்களை எளிய இனிய தமிழ்க் கட்டுரைகள் எழுதுவதற்கு மேல் வரிச்சட்ட மாய் விளங்குகின்றன என்பதைத் தமிழ் நாட்டார் நன்கறிந்துள்ளனர். இவையெல்லாவற்றினும் மேலா கத் தாங்கள் இருபதாண்டுகளாகப் பற்பல இடைஞ்சல் களுக்கிடையில் அரும்பாடுபட்டு எழுதித் தொகுத்த வடசொல் தமிழ் அகரவரிசை தமிழுக்குரிய ஆக்க வேலைக்கு அடிப்படையாய் அமைவதொன்றாகு மென்பதை எண்ணி, எண்ணி மகிழ்கின்றோம்.

ஆலமர செல்வற் கன்புபூண்டொழுகும் நீலக்கண்ணி யாம் நித்திலச்சுடரே!

பொருள் வசதியும் காலம் சதியும், பெருஞ்செல்வர் உதவியும் இன்றித் தமிழ்நாட்டை கிளர்ந்தெழுந்துள்ள புத்துணர்ச்சியே பற்றுக்கோடாகவும் தமிழ்த் தொண் டாற்ற அணிவகுத்து முன்வந்துள்ள பெண்மணிகளே துணியாகவுங் கொண்டு இம்மாநாட்டதனைத் திறனேதும் மில்லா நாங்கள் கூட்டி வைத்துள்ளதில் எத்தனையோ குறையிருக்கலாம். அவற்றையெல்லாம் பொருட்படுத் தாது கண்ணோடி எங்களை நல்லாற்றின் உய்ந்துத் தமிழ்நாடு நலம் பெறச் செய்ய வேண்டியதற்கான பணியை ஏற்றருளுமாறு பன்முறையும் இறைஞ்சித் தங்களை இச்சென்னை மாநகரின் கண் இன்று கூடும் இப்பேரவைக்கு வரவேற்கிறோம். தங்கள் வரவு பெரு நலனும் பெரும் புகழும் அளிக்கும் நல்வரவாகுக! செம்மனச் செல்வியாம் தாங்கள் எல்லா நலங்களுஞ் சிறந்து ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரோடிச் சீரும் சிறப்புமெய்துமாறு தமிழ்த்தாய் இணையங் களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

வரவேற்புக் கழகத்தார், தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு.

தலைவர் தமது தலைமைப் பிரசங்கத்தை ஆற்றி னார் (அது நாளை வரும்). திருவாட்டி பார்வதியம் மையார் அவர்கள் ஈ.வெ.ரா. நாகம்மாள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார் (சொற்பொழிவு பின்னர் வரும்).

தலைவரால் கொண்டு வரப்பட்டு பல பெண்மணி களால் ஆதரிக்கப்பட்டு, தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. தீர்மானங்கள் வருமாறு :

நிறைவேறிய தீர்மானங்கள் :

1. **இந்தியாவில் இதுவரையும் தோன்றின சீர் திருத்தத் தலைவர்கள் செய்ய விடலாமற் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் செய்து வருவ தாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாக வும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொரு வருமில்லாமையாலும் அவர் பெயரைச் சொல்லிலும், எழுத்திலும் வழங்கும்போ தெல்லாம் 'பெரியார்' என்ற சிறப்புப் பெய ரையே வழங்குதல் வேண்டுமென இம்மா நாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது.**
2. மணவினை காலத்தில் புரோகிதர்களையும் வீண் ஆடம்பரச் செலவுகளையும் விலக்கி விடவேண்டு மென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.
3. மற்ற நாடுகளைப்போல் தமிழர்கள் ஒன்றுபட்டு ஒரு சமூகமாய் வாழ்வதற்கு இன்று பெருந் தடையாயிருப்பது சாதி வேற்றுமையாதலால், சாதிவேற்றுமைகளை ஒழிப்பதற்கு இன்றியமை

யாத கலப்பு மணத்தை இம்மாநாடு ஆதரிக்கின்றது.

4. தமிழ் மாகாணத்தில் எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக் கொள்வதுடன், பிற மொழிகள் தமிழ்மொழிக்கு விரோதமாகப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக வைக்கக் கூடாதெனத் தீர்மானிக்கிறது.

5. சென்னையில் முதலாவது மாகாண நீதிபதியாக இருக்கும் தோழர் அபாஸ் அலி அவர்கள், காலஞ்சென்ற பா.வே. மாணிக்க நாயக்கரவர்கட்குத் தமிழ் தெரியாது; அவர் தெலுங்கர் என்று கூறியதையும், நாடார் சமூகத்தைக் கேவலமான வார்த்தைகளால் கூறியதையும், தோழர் மு. இராகவையங்கார், தொல்காப்பியம் 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று கூறியதை மறுத்து 50 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று கூறியதைக் கண்டிப்பதுடன், தமிழறிவும், நூலறிவும் இல்லாத ஒரு நீதிபதி தன்னளவுக்கு மீறிக் கோர்ட்டில் பேசி வருவதை அரசாங்கத்தாரும், ஹைக்கோர்ட்டாரும் கவனித்து ஆவன செய்யும்படி இம்மாநாடு தீர்மானிக்கிறது.

6. சென்னை லார்டு எர்ஸ்கின் பிரபு அவர்கள் மதுரையில் காங்கிரஸ் மந்திரிகள் அரசாங்கத்தை நன்றாக நடத்தி வைக்கிறார்கள் என்று பேசியதைப் பார்த்தால், தங்கள் காரியம் நடந்தால் போதுமானதென்றும், பார்ப்பனரல்லாத தமிழர்கள் நிலை எப்படியானாலும் தங்களுக்குக் கவலையில்லை என்பதைக் காட்டுகின்றதாகையால் கவர்னர் அவர்களின் அவ்வபிப்பிராயத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

7. இந்திய மாதர் சங்கம் என்னும் பேரால் தங்கள் கமிட்டிக் கூட்டத்திலும் மகாநாட்டிலும், கட்டாய இந்தியை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதைக் கண்டிக்கின்றது.

8. இந்திய மாதர் சங்கம் என்பது சில பார்ப்பனப் பெண்களும், பார்ப்பன அன்புபெற்ற தாய்மொழியறிவில்லாத சில பெண்களும் கூடிய கூட்டமென்று கருதுகிறது.

9. இம்மாகாணத்தில் எப்பகுதியிலாவது பெண்களைக் கூட்டிக் கட்டாய இந்தியை நிறைவேற்ற வீரமிருந்தால் இந்திய மாதர் சங்கத்தார் செய்து பார்க்கட்டுமென இம்மாநாடு அறைகூவி அழைக்கிறது.

10. இந்தியை எதிர்த்துச் சிறைசென்ற ஈழத்துச் சிவானந்த அடிகள், அருணகிரி சுவாமிகள், சி.என். அண்ணாதுரை, எம்.ஏ. உள்ளிட்ட பெரியோர்களையும் தொண்டர்களையும் பாராட்டுகின்றது.

11. வகுப்புத்துவேஷக் குற்றம்சாட்டி 153 ஏ, 505 ஸி செக்ஷன்களின் கீழ் 18 மாதம் கடுங்காவல் தண்டனை அளித்த காங்கிரஸ் அரசாங்கத்தைக் கண்டிப்பதுடன், மகிழ்ச்சியுடன் தண்டனையை ஏற்றுச் சிறை சென்ற தோழர் பி. சாமிநாததனை இம்மாநாடு பாராட்டுகிறது.

12. தோழர்கள் சண்முகானந்த அடிகளும், சி.டி. நாயகமும் சிறை செல்வதை இம்மாநாடு பாராட்டுகிறது.

13. சென்னை நகர் தமிழ்நாடாதலானும் தமிழர்கள் முக்கால் பாகத்துக்குமேல்வாழ்ந்து வருவதாலும் இதுவரை முனிசிபாலிட்டியார் வீதிகளின் பெயரை ஆங்கிலத்திலும் தமிழிலும் விளம்பரப் பலகைகளில் போட்டு வந்திருக்க, இப்போது புதிதாக தெருக்களுக்கு பெயர் போடுவதில் ஆங்கிலத்தில் மட்டும் போடப்பட்டு வீதிகளின் பெயர் தமிழில் போடாமலிருப்பதால் ஆங்கிலமறியாத மிகுதியான தமிழ் மக்கள் தெருப் பெயர் தெரியாமல் தொல்லைப்படுவதை நீக்கி தமிழிலும் வீதிகளின் பெயர் போட வேண்டுமென, சென்னை நகர சபையாரையும் மற்ற தமிழ்நாட்டு நகர சபைகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

14. சென்னை இரயில் நிலையத்தில் பீச், போர்ட்டு, பார்க் என தமிழில் எழுதியுள்ளதை முறையே கடற்கரை, கோட்டை, தோட்டம் என தமிழில் எழுத வேண்டுமெனவும் அப்படியே இரயில் பயணச்சீட்டு (டிக்கெட்)களினும் எழுதவேண்டுமெனவும் இரயில்வே கம்பெனியாரையும், சென்னை அரசாங்கத்தாரையும் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது.

15. ஒரு அணா, நாலணா, நிக்கல் நாணயங்களின் மதிப்பைக் குறித்திருப்பதில் சுமார் மூன்று கோடிக்கு மேல் உள்ள தமிழ் மக்களுக்கு விளங்கும்படியாகத் தமிழிலும் குறிப்பிட வேண்டுமென அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது.

16. சென்னை அரசாங்க இந்திய மருத்துவப் பள்ளி சித்த வகுப்பில் நடைபெறும் பாடங்கள் ஒவ்வொன்றும் ஆங்கிலத்திலேயே பெரும்பாகம் நடைபெற்று வருவதை நிறுத்தி எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே நடத்த வேண்டுமெனவும், சித்த வகுப்பில் சேரும் மாணவர்கள் பள்ளிக்கூடப் படிப்பை ஆங்கிலத்தில் படித்து முடித்திருக்க வேண்டும் என்று கட்டாயமிருப்பதை எடுத்து, தமிழில் ஓரளவு இலக்கிய அறிவுடைய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் சென்னை அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது.

17. இந்திய மருத்துவப் பள்ளியில் சித்த மருத்துவ வகுப்புக்கு வேண்டிய பாடங்களில் உடற்கூறு, உடல்தொழில், கெமிஸ்ட்ரி எனும் இரசாயன நூல், மெட்ரியா மெடிக்கா, பிள்ளை பெறு நூல் முதலியவை தமிழில் இருப்பதாலும் அதனை அச்சிட்டு மாணவர்கட்கும் மற்றவர்கட்கும் பயன் படும்படிச் செய்விக்க அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

18. மேற்கண்ட பாடப் புத்தகங்களில் உடற்கூறு, கெமிஸ்ட்டரி, மெட்ரியா மெடிக்கல் முதலிய புத்த கங்கள் ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்குமுன் அச்சிடப்பட்டவைகளை அரசாங்கத்தாருக்கு அச்சிடக் கொடுக்க இசைந்துள்ள சென்னை தென் இந்திய வைத்தியச் சங்கம் நிறுவியவரும், அமைச்சரு மாகிய பண்டிட் எஸ்.எஸ். ஆனந்தம் அவர்கட்கு இம்மாநாடு நன்றி செலுத்துகிறது.

19. வியாபாரப் பத்திரிகைகளைப் போலல்லாமல், தமிழர் முன்னேற்றம் ஒன்றையே கருத்திற் கொண்டு பெரிய கஷ்ட நஷ்டங்களுக்கிடையே ஓயாது உண்மையாய் உழைத்துவரும் ‘விடு தலை’, ‘குடிஅரசு’, ‘நகரதூரன்’, ‘பகுத்தறிவு’, ‘ஜஸ்டிஸ்’, ‘சண்டே அப்சர்வர்’ முதலிய பத்திரி கைகளைத் தமிழ்ப் பெண்மணிகள் ஒவ்வொரு வரும் கட்டாயம் வாங்கிப் படிக்க வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

20. பத்திரிகைகளின் வாயிலாகப் பணம் சம்பாதிப்பது ஒன்றையே எண்ணி, தமிழர் இயக்கங்களைக் கேவலப்படுத்தி வெளிவரும் ‘ஆனந்த விகடன்’, ‘தினமணி’, ‘தமிழ்மணி’ முதலிய பத்திரிகை களைத் தமிழர்கள் இனி வாங்கக் கூடாதெனவும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

21. கணவனை இழந்த இளம் பெண்களின் துயர் நீங்க மாதர் மறுமணத்தை இம்மாநாடு ஆதரிக்கிறது.

22. தமிழநாட்டில் 100-க்கு 95 மக்கள் கண்ணி ருந்தும் குருடராய் தாய் மொழியில் கையெழுத் துப் போடத்தெரியாத நிலைமையில் இருக்கை யில், சென்னை முகன் மந்திரியார் அதற்காவன செய்யாமல் அதற்கு மாறாக இந்தியைக் கட்டாய மாகச் செய்திருப்பதையும் அதனைக் கண்டிக்குமுகத் தான் தமிழ்நாட்டுப் பெருமக்களும், அறிஞர்களும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், மாபெருங் கூட்டங்கள் கூட்டி தெரிவித்தும் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பிடிவாதமாகயிருப்பதையும், இதைப்பற்றித் தங்களுக்குள்ள மனக்கொதிப்பைக் காட்டும் முறையில் அமைதியாக மறியல் செய்ப வரைச் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்து வதையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக் கிறது.

23. தமிழ்மொழியைக் காப்பாற்றும் முறையில் இந்தி யைக் கண்டித்து மறியல் செய்து சிறை புகுந்த வீரர்களுக்கு இம்மாநாடு மனமார்ந்த நன்றி செலுத்துகிறது.

தீர்மானங்களை விளக்கியும், தமிழ்ப் பெண்கள் நிலைமையை விரித்தும் தோழர் ஈ.வெ. ரா. ஒரு சொற்பொழிவாற்றினார் (அது பின்னர் வரும்).

பின்னர் தீர்மானங்களை ஆதரித்தும் பெண்கள் நடந்துகொள்ள வேண்டிய நிலைமையை விளக்கியும் தோழர்கள் மீனாம்பாள் சிவராஜ், பண்டிதை ஆர். கண்ணம்மாள், கலைமகளம்மையார், இராமாமிர் தத்தம்மையார், கமலாம்பாள், சிறுமி குஞ்சிதமணி, நீலாயதாட்சி, பண்டித திருஞானசம்பந்தம், ஆர். நாராயணி அம்மாள், மலர்முகத்தம்மையார், சாமி அருணகிரிநாதர், இராணி அம்மையார் (தோழர் அண்ணாதுரை மனைவி), தோழர் அண்ணாதுரை அன்னையார் ஆகியோர் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு, தோழர் வ.பா. தாமரைக் கண்ணம்மையார் நன்றி கூறினார். தோழர் கள் பார்வதியம்மையார், தாமரைக் கண்ணம்மையார் வாழ்த்துப் பாடினர்.

இரவு 9 மணிக்கு தமிழ் வாழ்க! தமிழ்நாடு தமிழ ருக்கே! இந்தி வீழ்க! பெண்ணுலகு தழைக்க! என்ற பேரொலிகளிடையே மாநாடு இனிது முடிவுற்றது.

(“குடிஅரசு” 20-11-1938)

(தொடரும்)

# அனைவர்க்கும் நன்றி!



பாவலர் தமிழேந்தி அவர்களின் உடல்நிலை நன்கு தேறிவருகிறது. அவர் படிப்படியாக நலம் பெற்று வருகிறார். அவருடைய பாடல் இம் மாத இதழில் இடம் பெற்றுள்ளது. அவர் உடல் நலம் குறித்து நேரில் வந்து உசாவியோர், மடல்வழி தொடர்பு கொண்டோர், மற்றவர் வழி கேட்டறிந்தோர் அனைவர்க் கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் ஒத்துழைப்புக்கு எங்கள் அன்பு வணக்கம்.

**யு. அருவி** (மூத்தமகள்)
44, இராசாசி வீதி, அரக்கோணம் - 631 001.
தொ.எண்.9445815831

**யு.ரா.பாவேந்தேன்** (மகன்)
தொ.எண் : 94432 32069

**க. முகிலன்** (தமையனார்)
தொ.எண் : 94436 38614

# மருத்துவப் படிப்புக்கு இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு எனும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைத் தவிடு பொடியாக்குவோம்

- க. முகிலன்

இந்தியா முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இந்திய அளவில் நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வின் மூலமே கட்டாயம் இருத்தல் வேண்டும் என்று உச்சநீதிமன்றம் 28-4-16 அன்று மிகுந்த கண்டிப்பான முறையில் தீர்ப்பளித்துள்ளது. பொதுவாகவே வெகுமக்கள் தொடர்பான வழக்குகளில் மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் உயர்நீதித் துறை மதிப்பதில்லை. மருத்துவப் படிப்பில் சேருவதற்குப் பொது நுழைவுத் தேர்வு என்கிற ஒற்றைவாயில் மட்டுமே உண்டு என்கிற உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மாணவர்களுக்கு-கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு-தாய்மொழியில் படிக்கும் மாணவர்களுக்குப் பேரிடியாகும். உயர்கல்வியைப், பார்ப்பனர் மற்றும் பிற மேல்சாதியினரின்-நகர்ப்புற பணக்கார வீட்டுப் பிள்ளைகளின் முற்றுரிமையாக்குவதற்கான சூழ்ச்சியே இத்தீர்ப்பு.

ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கைப்பற்றி, 1800 களுக்குப் பின் அனைவருக்குமான பொதுப் பள்ளிகளைத் தொடங்குகின்றவரையில்-கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலோக, கல்வி, என்பது பார்ப்பனர்களின் முற்றுரிமையாக இந்துமத சாத்திரங்களின் பேரால் இருந்து வந்தது. 1850 முதல் 1950 வரையில் உயர்கல்வியைப் பார்ப்பனர்களும் மற்ற மேல்சாதியினர் மட்டுமே பெற்றுவந்தனர். அதன் பிறகுதான் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்புகளின் மாணவர்களில் சிலர் உயர்கல்வியில் நுழையத் தொடங்கினர். 1975-77 நெருக்கடி காலத்தின் காட்டுமிராண்டி ஆட்சியில் பார்ப்பன அதிகாரத் திமிர் பிடித்த இந்திராகாந்தி மாநில அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வியை பொது அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டு சென்றார். பெயரளவில் நடுவண் அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் அதிகாரம் உடையதுதான் பொது அதிகாரப் பட்டியல். ஆனால் நடப்பில் நடுவண் அரசு வைத்ததே சட்டமாக இருக்கிறது.

மோடி அரசில் மக்கள் நலவாழ்வு அமைச்சராக உள்ள ஜே.பி.நட்டா பொது நுழைவுத் தேர்வு குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒரு மைல்கல் என்று பாராட்டியிருக்கிறார் என்பதிலிருந்தே இத்தீர்ப்பு பார்ப்பன-மேல்சாதியினரின் நலனுக்கானது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இதற்கு முன்பே மாநில அரசுகள் கீழ் இயங்கும் மருத்துவக் கல்லூகளில் உள்ள மொத்த இடங்களில் 15 விழுக்காடு இடங்களை நடுவண் அரசு பறித்துக் கொண்டு, அந்த இடங்களுக்காக இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வை நடத்திவருகிறது இத்தன்மையில் 1-5-16 அன்று, 1,040 மய்யங்களில் நடைபெறவுள்ள மருத்துவ பொதுத்தேர்வை எழுதுவதற்காக 6,67,637 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

2016-17 ஆம் கல்வி ஆண்டில் மருத்துவ படிப்புக்குப் பொது நுழைவுத் தேர்வை நடத்தி முடிப்பதற்காக உச்ச நீதிமன்றமே வழிகாட்டி உள்ளது. 1-5-16 அன்று நடைபெறுவது முதல்கட்ட நுழைவுத் தேர்வு என்றும், இரண்டாம் கட்ட நுழைவுத் தேர்வை சூலை 24 அன்று நடத்தவேண்டும் என்றும், இந்த இரு தேர்வுகளின் முடிவுகளை ஆகத்து 17 இல் வெளியிட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. இக்கருத்துருவை நடுவண் அரசின் சார்பில் மூத்த வழக்குரைஞர் விகாஸ் சிங் முன்மொழிந்தார். எனவே இந்திய அளவில் மருத்துவப் படிப்புக்குப் பொது நுழைவுத் தேர்வு என்பது நடுவண் அரசும், உச்சநீதி மன்றமும் கூட்டாகத் தீட்டிய சதித்திட்டமாகும்.

பல மாநில அரசுகளும், தனியார் மருத்துவக் கல்லூரிகளும் உச்சநீதிமன்றத்தில் பொது நுழைவுத் தேர்வு முறையை எதிர்த்தனர். கல்வி பொது அதிகாரப் பட்டியலில் இருப்பதைக் காரணமாகக் கொண்டு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இத்தகைய மக்கள் விரோத-தேசிய இனங்களை ஒடுக்குகின்ற தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

உலகில் உள்ள 193 நாடுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களின் மக்கள் தொகையை-5 கோடிக்கும் குறைவான மக்களைக் கொண்டவை. அத்தன்மையில் இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் அடிப்படையிலான ஒவ்வொரு மாநிலமும் ஒரு தனி நாடாக விளங்கக் கூடிய தகுதி உடையவை. ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் அதன் தாய்மொழியில் உயர் கல்வியைப் பெற உரிமை உண்டு. இந்த உரிமை உணர்வு முகிழ்க்காமல் தடுப்பதற்காக நடுவண் அரசு கையாளும் சூழ்ச்சித் திட்டங்களில் ஒன்றே-மருத்துவப் படிப்புக்கு இந்திய அளவில் நுழைவுத் தேர்வு என்பது.

தற்போது ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு வகையான பாடத்திட்டத்தைப் பின்பற்றுகின்றன. இந்

நிலையில் பொதுநுழைவுத் தேர்வை இம்மாண வர்கள் எப்படி எதிர்கொள்ள முடியும்? சி.பி.எஸ்.சி. கல்வி முறையில் பயின்ற மேட்டுக்குடிகளின் பிள்ளைகளால் மட்டுமே இந்த நுழைவுத் தேர்வை எழுத முடியும்.

நடுவண் அரசின் கீழ் உள்ள கல்வி நிறுவனங் களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27 விழுக்காடு இடஒதுக்கீடு கிட்டத்தட்ட கிணற்றில் போட்டகல் போல இருக்கிறது. தமிழ்நாட்டில் 50 விழுக்காடு இடஒதுக்கீடு பெறும் மாணவர்களின் மருத்துவப் படிப்புக் கனவு இனி கானல் நீர்தானா? நடுவண் அரசு கல்வி நிறு வனங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் பழங்குடியினர் இடஒதுக்கீடும் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

உயர் கல்வியிலிருந்து ஒடுக்கப்பட்ட வகுப்பு மாண வர்களை விரட்ட வேண்டும் என்ற நடவடிக்கையால் தான் ரோகித் வெமுலா தற்கொலை செய்து கொண் டார். கன்னையா குமார் மீது தேசவிரோதச் சட்டம் பாய்கிறது.

பொது அதிகாரப் பட்டியலில் உள்ள கல்வியை மீண்டும் மாநில அதிகாரப் பட்டியலில் சேர்த்திட எல்லா மாநிலங்களிலும் உள்ள மக்கள், கட்சி வேறுபாடு கருதாது போராட வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இராசகோபாலாச்சாரி 1952இல் முதலமைச்சராகப் பதவி ஏற்றதும், 6000 கிராமப்புற பள்ளிகளை அன்றைய சென்னை மாகாணத்தில் மூடியபோதும்-1953இல் இராசகோபாலாச்சாரி கிராமப் புறத் தொடக்கப் பள்ளிகளில் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தபோதும்-சென்னை மாகாணத்தில் கல்வியில் இடஒதுக்கீட்டுக்குச் சட்டத்தில் இடமில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தபோதும், பெரியார் தலைமையில் கட்சி வேறுபாடு பாராமல் எல்லோரும் ஒன்றிணைந்து போராடி வெற்றி பெற்றதுபோல் இப் போது தமிழக மக்கள் தம் வீட்டுப் பிள்ளைகளின் உரிமைக்காகவேனும் பொது நுழைவுத் தேர்வு முறையை முறியடித்திட மாபெரும் மக்கள் திரள் போராட்டத்தை உடனடியாக நடத்தவேண்டும்.

உச்சநீதிமன்றத்துக்கும், நடுவண் ஆட்சியாளர் களுக்கும் ஒரு கேள்வி! கொஞ்சங் கொஞ்சங்கமாக மாநில உரிமைகளைப் பறிப்பதை விட்டுவிட்டு, நேரு தலைமையில் இருந்த இந்தியத் தேசியவாதிகளால் வேண்டாவெறுப்பாக உருவாக்கப்பட்ட மொழிவழி மாநில அரசுகள் என்ற நிலையை அடியோடு ஒழித்து விட்டு, 'ஏக இந்தியா (இந்து) அரசு' என்கிற ஒற்றை அரசை ஏற்படுத்திவிடுங்கள்! இந்த முயற்சியில் நீங்கள் உடனே ஈடுபட்டால் தேசிய இனங்கள் விடுதலை பெறுவது விரைந்து நிறைவேறும். இதைத்தான் எதிர் பார்க்கிறோம்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா



**வடக்கலூர் அகரத்தில்**
**போ.வெங்கடேசன்-த.இலாவண்யா திருமணம்**

*பெரம்பலூர் மாவட்டம், வே.ஆனைமுத்துவின் தமையனார் முருக்கன்குடி பெ.சின்னசாமி-அலமேலு பெயரனும், சி.போர்மன்னன்-புஷ்பவள்ளி மகனும் ஆன வெங்கடேசன்; கடலூர் மாவட்டம் பெரிய கொசப்பள்ளம் கோ.குழந்தைவேலன்-இன்பவடிவி யெர்த்தியும் மேற்படியூர் கெ.தமிழரசன்-குமுதம் மகளும் ஆன இலாவண்யா ஆகியோரின் வாழ்க் கைத் துணை ஒப்பந்தவிழா, 11-4-2016 திங்கள் கிழமை காலை 9 மணிக்கு, குன்னம் வட்டம் வடக் கலூர் அகரம் பள்ளித்திடலில், வே.ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது.*

*தலைமை ஆசிரியை தா.சாந்தி வரவேற்புரை ஆற்றினர். ஆசிரியர்கள் வீ.கோவிந்தன், ம.பெரியசாமி ஆகியோர் ஒருங்கிணைப்புச் செய்தனர். இன்பவடிவி அம்மையார், வரகூர் மா.நாராயணசாமி, ஆசிரியர் செ.முத்துசாமி, கு.தொல்காப்பியன், கு.மேழிச்செல் வன், கெ.தமிழரசன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.*

*மணமக்களுக்கு அறிவுரை கூறி, ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் குன்னம் வீரமணி உரையாற்றினார். சென்னை மக்கள் நெஞ்சம் ஆசிரியர் கலசம், பெரம்பலூர் தி.க. தலைவர் ந.ஆறுமுகம், அரியலூர் தமிழ்க்களம் இளவரசன் மற்றும் பலர் பங்கேற்றனர்.*

## சோவியத்தில் தனி உடைமை உண்டு! கூலிக்கு வேலை செய்வது உண்டு!

சோவியத்து நாட்டின் நாடாளுமன்றத்தில் (1) தனி மனிதர்கள் தொழிற்சாலை உரிமையாளர்களாக இருப்பது, (2) மற்ற உற்பத்திச் சாதனங்களுக்கு உரிமை யாளர்களாக இருப்பது, (3) தொழிலாளர்களைத் தனி நபர்கள் வேலைக்கு அமர்த்துவது ஆகிய உரிமைகள் வழங்கப்படுவதற்கான சட்டம் 6-3-1990இல், பெரு வாரியான வாக்குகள் மூலம் நிறைவேற்றப்பட்டது.

தனிநபர்கள் உற்பத்திச் சாதனங்களுக்கு உரிமை யாளர்கள் ஆகும் சட்டத்திற்கான வாக்கெடுப்பில் 354 பேர் ஆதரவாக வாக்களித்தனர்; எதிர்த்து ஒருவர்கூட வாக்களிக்கவில்லை; 13 பேர் நடுநிலை வகித்தனர்.

கடந்த 70 ஆண்டுகளில் சோவியத்தில் ஏற்பட்ட தலைகீழ் மாற்றம் இது. (The Hindu, 7-3-1990)

# பனாமா ஆவணமும் - பயமுறுத்தும் உண்மைகளும்

- குட்டுவன்

உலக நாடுகள் அச்சத்தில் உறைந்து போயுள்ளன. பெருகி வரும் மத பயங்கரவாதமாக இருந்தால்கூட தங்கள் நாடுகளில் தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள முடிகிறது. பெரிய அளவிலான நில அதிர்வு களைக்கூட மறுசீரமைப்பின் வழியாகக் கட்டமைக்க முடிகிறது. ஆனால் முதலாளித்துவ அமைப்பு உருவாக்கி வரும் திருட்டு புரட்டு மோசடி ஆகியன கட்டுக்கடங்காமல் பெருகி வருகின்றன. சந்தைப் பொருளாதாரத்தையும் உலகமயமாக்கல் வழியையும் பொருளாதாரப் பிரச்சி னைகளுக்குத் தீர்வாக முன்மொழிந்தவர்கள் விழிப் பிதுங்கி நிற்கிறார்கள். 1990ஆம் ஆண்டிற்குப் பிறகு தாராளமயமாக்கல் தனியார் மயமாக்கல் உலகமய மாக்கல் கொள்கைகளால் ஏற்படும் வர்த்தக-வரிச் சிக்கல்கள்- வர்த்தகத் தடைகள் ஏற்றுமதி-இறக்குமதி கட்டுப்பாடுகள் ஆகியவற்றை நெறிப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட உலக வர்த்தக அமைப்பு (WTO) தடையற்ற வணிகம் என்ற கோட்பாட்டினைப் பிணக் குழியில் ஆழத் தோண்டி புதைத்துவிட்டது. வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகள் மீது தொடர்ந்து பொருளாதார வர்த்தக மேலாதிக்கத்தைச் செலுத்தி வருவதால் அமைச்சர்கள் அளவிலான மாநாடு ஆறு முறை முடிந்து விட்டதாலும் டோஹா ஒப்பந்தத்திற்குப் பிறகு எவ்வித உடன்பாட்டினையும் எட்ட முடியவில்லை. வளர்ந்த நாடுகள், வளர்கின்ற நாடுகளுக்கு எவ்வித சலுகை களையும் அளிக்க விரும்பவில்லை.

இந்தச் சூழ்நிலையிலும் வளர்ந்த நாடுகளில் பொரு ளாதாரத் தேக்கமும் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகி வருகிறது. வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் 2 விழுக்காட்டு வளர்ச்சியை எட்டுவதற்குப் பல முயற்சி களை மேற்கொண்டாலும் தோல்வியில்தான் முடிந்து வருகின்றன. இந்த வீழ்ச்சிப் போக்கிற்குக் கட்டற்ற முதலாளித்துவத்தின் பேயாட்டம்தான் அடிப்படையாக அமைகிறது. உயர் லாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு பன்னாட்டு முதலாளித்துவ நிறுவனங்கள் செயல்படுகின்றன. வரியை ஏமாற்றி சந்தைப் பொரு ளாதார விதிகளை மிதித்து தங்கள் அமைப்பிற்குக் கிடைக்கும் அதிக லாபத்தை இந்தப் பன்னாட்டு நிறுவ னங்கள் தவறான முறையில் பல நாடுகளில் பெருக்கி வருகின்றன.

பணத்தைப் பதுக்குவதற்கும் அவ்வப்போது திருட்டுக் கணக்குகளைப் பார்ப்பதற்கும் சட்டவிதிகளைப் புறக் கணிப்பதற்கும் ஆயிரக்கணக்கான திறன்மிக்க கணக் காயர்களும் சட்ட வல்லுநர்களும் செயல்பட்டு வருகின்ற னர். உலக அளவில் இது போன்ற திருட்டு மோசடி விதி மீறல்கள் வழியாகப் பெறப்பட்ட பணம் 90 நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

சான்றாக நீரா ராடியா புகழ் டாட்டா நிறுவனம், அமெரிக்காவில் மென்பொருள் தொழிலில் புதிய தொழில் நுட்பத்தைத் திருடிப் பல இலட்சம் கோடியை இலாபமாக டாலரில் ஈட்டியுள்ளது. இதைக் கண்டுபிடித்த அமெரிக்க அரசு, டாட்டா நிறுவனத்திற்கு பல லட்சம் டாலரைத் தண்டமாக விதித்துள்ளது என்று இந்து ஆங்கில ஏடு 2016 ஏப்ரல் 17 அன்று வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் கோதாவரி நதிக்கரையில் ஓ.என்.ஜி.சி க்குச் சொந்தமான எரிபொருள் வாயுவை மோடியின் குஜராத்தி நண்பர் அம்பானி திருடியதாக மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. இவ்வகைத் திருட்டும் மோசடியும்தான் இன்றைய முதலாளித்துவத்தின் இலாப வேட்டையாகும். இதில் ஒரு துண்டு எலும்புதான் அரசியல் தலைமைக்குக் கிடைக்கிறது. இவ்வகை உலகளாவிய திருட்டுப் பணத்தின் ஒரு சிறு துளிதான் பனாமாவில் உள்ளது.

உலகில் உள்ள 190 நேர்மையான ஊடகவியலா ளர்களின் கூட்டமைப்புத்தான் பனாமா திருட்டு மோசடி களைக் கண்டுபிடித்துள்ளது. Suddetsche Zeitung என்ற நாளிதழும் அமெரிக்க வாஷிங்டன் நகரிலிருந்து செயல்படும் பன்னாட்டு துப்புத் துலக்கும் ஊடகவிய லாளரும் இணைந்துதான், பனாமா ஆவணத்தை வெளியிட்டுள்ளார்கள். இந்த அமைப்போடு இந்தியாவின் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனமும் இணைந்துள்ளது. இந்தச் சிறிய தீவில் கறுப்புப் பண ஆவணங்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 15 இலட்சமாகும்.

பனாமா ஆவணத்தில் நடிகர் ஜாக்கி சான், ரஷ்யாவின் விளாதிமிர். புதின், சீனாவின் ஜின்பெங், அமிதாப்பச்சன் ஐஸ்வர்யா ராய், டாடாவின் தரகர் நீரா ராடியா போன்றோர் இடம் பெற்றுள்ளனர். இந்தச் செய்தி வெளி வந்த பின்பு இதில் இடம் பெற்ற மருதுசகோதரர்களின் மரபு வழி உறவினர் அமிதாப்பச்சன் உட்பட அனைவரும் சட்டப் படிதான் நாங்கள் நடந்துள்ளோம் என்று கூறியுள்ளனர். சட்டத்தைப் புதைக் குழிக்கு அனுப்பிவிட்டு, மட்டைப் பந்து லலித் மோடியையும் மல்லையாவையும் தப்பவிட்ட புண்ணிய புமி அல்லவா இந்திய நாடு!

திருட்டுப் பணப்பட்டியலில் இடம் பெற்ற இந்தியாவைச் சேர்ந்தவர்கள் ஏன் சிறிதளவும் இதைப் பொருட்படுத்த வில்லை என்ற வினா எழுப்பப்படுகிறது. சோனியா வழிகாட்டுதலில் மன்மோகன் சிங் பிரதமராக 2004இல் பதவி ஏற்றபோது, நடுவண் அரசு இந்திய மைய வங்கி வழியாகப் பணம் எடுத்துச் செல்வதற்கான விதியைத் தளர்த்தியது. இந்தியாவைச் சேர்ந்தவர்கள் வணிகம், மற்றும் தொழில் செய்பவர்கள் ஒரு கோடி 50 லட்சம்

ரூபாயைத் தளர்த்தப்பட்ட விதி வழியாக வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லலாம் என்று கூறியது. தற்போது 150 கோடி ரூபாய் வரை எடுத்துச் செல்லலாம் என்று இது உயர்ந்துள்ளது. இவ்வழியாகத்தான் கறுப்புப் பணத்தைச் சட்டப்படி பனாமாவிற்கு இந்தப் பிரபலங்கள் எடுத்துச் சென்றுள்ளனர். எனவேதான் இந்தக் கறுப்புப் பணக்காரர்கள் கவலை இல்லாமல் உள்ளனர். இந்திய ஆட்சியாளர்களுக்கும் கறுப்புப் பண முதலாளிகளுக்கும் உள்ள உறவின் காரணமாகத்தான் இந்தியாவில் கறுப்புப்பண நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவில்லை. 2015 ஆண்டில் மட்டும் இந்தியாவின் கறுப்புப் பணம் 34 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளதாக நடுவண் அரசின் சிறப்புப் புலனாய்வு மையம் தெரிவித்துள்ளதைக் குறிப்பிடுகின்றனர். இந்த சிறப்புப் புலனாய்வு மையம் உச்ச நீதிமன்றத்தின் வலியுறுத்ததலால் அமைக்கப் பட்டது. இந்தியாவில் கறுப்புப் பணம் எவ்வாறு தொடர்ந்து பெருகி வருகிறது என்பதை ஆராய்தல் அவசியமாகிறது.

வரிக்கோட்பாடுகளில் நேரடி வரி, மறைமுக வரி என்ற இரு கோட்பாடுகள் சுட்டப்படுகின்றன. பெரும்பாலும் மறைமுக வரி ஏழை நடுத்தர மக்களை நேரடியாகத் தாக்குகிறது. அவர்களின் பொருளாதாரச் சுமைகளை மேலும் பெருக்குகிறது. மாறாக, நேர்முக வரி சமத்துவ நெறிக் கோட்பாடுகளின்படி அமைந்துள்ளது. குறிப்பாக வருமானம் உயர உயர வரியின் அளவும் உயரும். அதன் காரணமாக உயர் வருமானத்தைப் பெறுகிற வர்கள் அதிக வரியையும், குறைந்த வருமானத்தை ஈட்டுபவர்கள் அவர்களின் வரிதாங்கும் திறனிற்கு ஏற்ப வரியையும் அரசுக்குச் செலுத்துவார்கள். இதைத்தான் முற்போக்கு வரியியல் கொள்கை (Progressive Taxation) என்பர். ஆனால் வண்டியிழுக்கும் தொழிலாளி முதல் வேளாண் கூலி வரை அவர்கள் ஈட்டும் சொற்ப வருமானத்திலிருந்து தீப்பெட்டி உட்பட்ட பொருட்களை வாங்கும்போது, மறைமுக வரி செலுத்துகிற கட்டாயத் திற்கு உட்படுகிறார்கள். இம்முறையில் உயர் குறைந்த வருமானம் உள்ளவர்கள் ஒரே நிலையில் ஒரே விகித வரியைச் செலுத்தும் நிலைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எனவேதான் மறைமுக வரியைக் கடுமையான சுமை தரும் வரி (Regressive Taxation) என்று குறிப்பிடு கிறார்கள்.

இந்தியாவில் நிரந்தர மாத வருமானத்தைப் பெறுகிற அரசுப் பொதுத்துறை மற்றும் தனியார் ஊழியர்கள் ஏறக்குறைய 5 கோடிப்பேர் இருக்கிறார்கள். ஏறக்குறைய 2000 பெரும் முதலாளிகள் இருக்கிறார்கள். அதற்கு அடுத்த கட்டத்தில் நடுத்தர சிறு முதலாளிகள் பெரு வணிகர்கள் சிறு வணிகர்கள் ஆகியோர் இடம் பெறு கின்றனர். இந்தப் பிரிவில் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுடைய நேர்முக வருமான வரி மாத ஊதியத்திலேயே பிடிக்கப்படுகிறது. நிதியாண்டு முடிவதற்கு முன்கூட்டியே மாதந்தோறும் வருமான வரியைக் கட்டும் கட்டாயத்திற்கு உட்படுத்தப் பட்டுப் பிடிக்கப்படுகிறது. மிக அதிக வருமானத்தை ஈட்டும் மற்ற பிரிவினர் ஆண்டுக்கு ஒரு முறை கணக்குத் தணிக்கையாளர் வழியாகக் கணக்குகளை அளித்து வருமான வரியைக் கட்டுகின்றனர்.

நேரு காலத்தில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நிக்கோலஸ் கால்டார் என்ற பொருளாதார அறிஞர் வரிகளை மறுஆக்கம் செய்யுமாறு நடுவண் அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவரது பரிந்துரையின்படிதான் மிக அதிக வருமானம் ஈட்டும் பிரிவினர் தங்கள் வருமானத்தில் 75 விழுக்காட்டை வரியாகச் செலுத்த வேண்டும் என்று அவர் பரிந்துரை செய்தார். நேரு காலத்திலேயே இது மிக அதிகமான வரி என்று முதலாளிகளும் பெரும் பண முதலைகளும் நடுவண் அரசிற்கு அழுத்தம் கொடுத்தபோதுகூட, நேரு கால்டாரின் பரிந்துரைகளை மாற்றம் செய்ய உடன்படவில்லை.

**எனது மாணவரின் தந்தை முனைவர் சிவசாமி என்பவர் வருமான வரித்துறையில் முதன்மை ஆணையராகப் பல மாநிலத் தலைநகரங்களில் பணியாற்றியவர். பின்பு நடுவண் அரசின் நேரடி வரி வாரியத்தின் தலைவராகப் பணிபுரிந்தபோது, சென்னைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத் துறையில் ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவிற் காக அவரை அழைத்திருந்தேன். அப்போது அவர் என்னிடம் பல அதிர்ச்சி தரும் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். 75 விழுக்காடு உயர் வரிவிகி தத்தை வருமான வரியாக இவ்வாரியம் திரட்டிய போது, அரசிற்கு அதிக வருவாய் கிடைத்தது. ஆனால் 1985க்குப் பிறகு, வருமான வரியின் உயர் வரிவிகித்தை 75 விழுக்காட்டிலிருந்து 30 விழுக் காடாகக் குறைத்த பிறகு நடுவண் அரசு எதிர் பார்த்த நேர்முக வரி வருமானம் கிட்டவில்லை. இந்த வரிச்சலுகைகளைப் பெற்றுக் கொண்ட பெரும் முதலாளிகளும் வணிகர்களும் கணக்கில் வராத கறுப்புப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் பதுக்குவதற்கு முற்பட்டனர் என்று குறிப்பிட்டார்.**

வருமான வரியை முறையாகச் செலுத்தாத பெரும் பணக்காரர்கள் பெரும் முதலாளிகளுக்கும் நடுவண் அரசால் அவ்வப்போது அளிக்கப்படும் தாமாக முன்வந்து வருமானத்தைத் தெரிவிக்கும் திட்டத்தால் (Voluntary Disclosure Scheme) கிடைக்கும் வருவாயைவிட அத்திட்டம் ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகள்தான் அதிகம் என்று முனைவர் சிவசாமி அப்போது குறிப் பிட்டார். பெங்களூரில் வருமான வரி ஆணையராக

இருந்த போது ஒரு பெரும் முதலாளி தான் பத்தாண்டு களாக வரி செலுத்தாத கறுப்புப் பணத்திற்கான கணக்கை இத்திட்டத்தின் கீழக்காட்டிவிட்டு வரிப் பணத்தைப் பெட்டி பெட்டியாக ஒப்படைத்துவிட்டு வெள்ளை மனிதராக வெளியேறினார். ஏனென்றால் இத்திட்டத்தின்படி பத்தாண்டுகளாக எவ்வகையில் இந்த வருமானம் இந்த முதலாளியால் ஈட்டப்பட்டது? ஏன் வரியைக் கட்ட வில்லை? போன்ற எவ்வித வினாக்களும் இத்திட்டத்தில் கேட்கப்படுவதில்லை.

''பணம் பாதாளம் வரை பாயும்'' என்ற ஒரு பழமொழி சுட்டப்படுகிறது. இது உண்மையா என்று நான் வினவினேன். அதற்கு அவர் பாதாளத்தில் மட்டுமல்ல பணக்காரர்களின் வீட்டில் உள்ள நீச்சல் குளங்களில் கூட பணம் பதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னார். ஒரு முறை ஒரு பெரும் பணக்காரர் வீட்டில் கறுப்புப் பணம் பதுக்கப்பட்டுள்ளது என்ற தகவலின் அடிப்படையில் சோதனை செய்த போது, எவ்வித ஆவணமும் கிடைக்க வில்லை. பிறகு ஒரு வருமான வரி அலுவலர் சந்தேகத்தின் அடிப்படையில் நீச்சல் குளத்தில் இருந்த நீரை வெளியேற்றிவிட்டுக் கீழ்ப் பகுதியை உடைத்த போது கட்டுக்கட்டாக, பாலிதீன் உறைகளில் கோடிக் கணக்கான ரூபாய் கைப்பற்றப்பட்டது என்று குறிப் பிட்டார்.

இந்நிகழ்வு நடந்த பத்தாண்டுகளுக்குப் பிறகு சென்னையில் வருமான வரித்துறையின் ஆணையராக அவர் இருந்தபோது பெங்களூரில் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றிய அதே நபர் மீண்டும் சென்னைக்கு வந்து அதே முறையில் வரியைச் செலுத்திவிட்டு எவ்வித சலனமுமின்றி வெளியேறினார். என்னைப் போன்ற நேர்மையான அதிகாரிகள்தான் இந்நிகழ்வால் வேதனையடைந்தோம் என்று குறிப்பிட் டார். 1951க்குப் பிறகு இது வரை பத்து முறை தானாக முன்வந்து வருமானவரியைச் செலுத்தும் திட்டத்தை நடுவண் அரசு நடைமுறைப் படுத்தியுள்ளது. நேர்மை யாக வரி செலுத்தி வருகிற வெள்ளை மனிதர்களின் முகத்தில் கறுப்பு மையை வீசி வருகிறது அரசு.

2014இல் மோடி அரசு அமைந்த பிறகு 2015இல் இயற்றப்பட்ட கறுப்புப் பணச் சட்டத்தின்படி மூன்று மாதங்களுக்குள் தாமாக முன்வந்து கறுப்புப் பணத் திற்கான வரியைச் செலுத்தி வெள்ளைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம் என்று அறிவித்த பிறகும், பெரிய அளவிற்கு இத்திட்டம் வெற்றி பெறவில்லை. இந்தியாவில் 664 பேர்தான் இச்சலுகையைப் பயன்படுத்தி ஏறக் குறைய 4000 கோடி வரியைச் செலுத்தினர். மேற் குறிப்பிட்ட 664 பேர் என்பது மிகமிக குறைவான எண்ணிக்கையாகும். ஏறக்குறைய ஒரு இலட்சம் பெரும் பணக்காரர்கள் தவறான வழியில் ஈட்டிய பணத்தையும் பல நாடுகளில் மறைத்து வைப்பதற்கும், மீண்டும் அதே பணத்தைஇந்தியப் பங்கு சந்தையில் முதலீடாகச் செய்வதற்கும் சட்டங்களில் இடம் இருப்பதனால் இந்தப் பெரும் பண முதலைகள் எந்த விதிக்கும் அஞ்சாமல் வலம் வருகின்றனர்.

இதுவரை சுவிட்சர்லாந்து, ஹாங்காங், மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ் போன்ற நாடுகளில்தான் இந்தியாவின் கறுப்புப்பணம் பதுக்கி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், பனாமாவில் இந்திய முதலாளி களும் அரசியல் தலைவர்களும் பதுக்கி வைத்துள்ள பணத்தைப் பற்றி அறிந்தவுடன் அனைவரும் அதிர்ந் துள்ளனர். பனாமாவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை வெளிக்கொண்டு வருவதற்கு மேற்கத்திய நாடுகள் முனைப்புக் காட்டி வருகின்றன. மேலும் சேனல் தீவுகள், கரிபீயக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள பிரித்தானிய வெர்ஜின் தீவுகள், கேமன் தீவுகள், பசுபிக் கடற்கரையை ஒட்டிய பனாமா நாடு, பஹரைன் நவுரு வனாட்டுத் தீவுகள் ஆகியவற்றிலும் பெருமளவில் பணம் பதுக்கப்பட்டுள்ளதாக வருமான வரித்துறையின் முன்னாள் உயர் அலுவலரும் தேசியப் பொது நிதியியல் ஆய்வு மையத்தில் பணியாற்றியவரும் ஆன தீக்ஷத் சென்குப்தா ஓர் ஆய்வுக் கட்டுரையில் ('The problem of secretive tax havens', The Hindu, April, 11 2016) குறிப்பிட்டுள்ளார். மேலும் கேப்ரியல் சுக்மேன் (Gabriel Zucman), நாடுகளின் மறைத்து வைக்கப்பட்டுள்ள செல்வங்கள்: வரி ஏமாற்றுவோரின் புகலிடம் (The Hidden Wealth of Nations: The Scourge of Havens) என்ற நூலில் வரியைக் கட்டாமல் எவ்வாறு ஏமாற்று கிறார்கள் என்றும், அதை எவ்வாறு மேற்குறிப்பிட்ட தீவுகளில் பதுக்கி வைக்கிறார்கள் என்பதையும், அவற்றை எவ்வாறு கைப்பற்ற முடியும் என்றும் விளக்கமளிக்கிறார் இந்நூலாசிரியர். மேலும் இந்திய அரசியல் தலைமை கடுமையான நடவடிக்கைகளின் வழியாக இந்தக் கணக்கில் வராத பணத்தை எடுத்து வருவதில் சிறிதளவும் அக்கறை காட்டவில்லை என்பதைப் பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பனாமா ஆவணம் வெளியிடப்பட்டு இந்தியாவில் இருந்து பணம் பதுக்கியவர்களின் பெயர்கள் வெளி வந்த பின்னரும், உரிய நடவடிக்கை எடுப்போம் என்று மேம்போக்காக பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். உரிய சட்டங்கள் வழியாகக் கடுமையான நடவடிக்கைகளின் வழியாக இது போன்று பணம் பதுக்குவோர்களைத் தண்டித்தால் ஒழிய ஒரு நாளும் இந்தப் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணம் வெளிவராது என்பதுதான் உண்மை. ஒரு பக்கம் இந்தியாவின் பொருளாதார

வளர்ச்சி சீரற்ற தன்மையில் இருந்து வருகிறது. வேளாண்மை சரிந்து வருகிறது. உழவர்கள் ஆயிரக் கணக்கில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். பல வட மாநிலங்களில் குடிநீர் கிடைப்பதே அரிதான செயலாக உள்ளது. மக்கள் போராடிய பிறகு தான், கறுப்புப் பணக்காரர்களும் சூதாட்டக்காரர்களும் சேர்ந்து நடத்துகிற ஐபில் மட்டைப் பந்து போட்டிகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.


அண்மையில் இந்திய மைய வங்கியின் ஆளுநர் ரகுராம்ராஜன் தேர்தல் நடக்கும் மாநிலங்களில் 60000 கோடி அளவிற்குப் பணம் சுழலுவதாக எச்சரித்துள்ளார். பனாமாவில் பாதாளம் வரை கறுப்புப் பணம் பதுக்கப்பட்டு வெளிக் கொணரப்படுகிறது என்பதே இந்திய மைய வங்கி ஆளுநரின் எச்சரிக்கையாகும். இதற்குப் பின்பும் இந்திய அரசியல் தலைவர்களை நாடு நம்ப வேண்டுமா?

உள்நாட்டில் பாதாளத்தில்-வெளிநாடுகளில் வங்கி களில் பதுக்கப்பட்ட பணத்தின் அளவு இதுவரை யாராலும் துல்லியமாகக் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு வருமானத்தின் சம அளவிற்குக் கறுப்புப் பணம் இந்தியாவில் உருவாக் கப்படுகிறது. இதனால் பாதிக்கப்படுவோர் அரசு மட்டு மல்ல-ஏழை நடுத்தர வர்க்கத்தினரும் என்பதை யாரும் உணரவில்லை. நடுவண் அரசினுடைய இவ்வாண்டு வரி வருவாயில் ஏறக்குறைய 60 விழுக்காட்டிற்கு மேல் மறைமுக வரியின் வழியாகத்தான் கிடைத்திருக்கிறது என்பதை அண்மையில் அரசுப் புள்ளிவிவரங்களே பறைசாற்றுகின்றன. வரிச்சுமையைச் சுமக்கும் ஏழை கள்-வரியை மொத்தமாக ஏமாற்றும் பணக்காரர்கள் வளர்ந்து வருவது காரல் மார்க்சே நினைக்காத-எதிர்பார்க்காத ஒரு புதிய சுரண்டும் வர்க்கம், இந்தியாவில் உருவாகி வருகிறது. இந்த வர்க்கம்தான் இந்திய அரசியலையே உருவாக்குகிறது; ஆட்டிப் படைக்கிறது என்பதை மக்கள் எப்போது உணர்வார்களோ?

## தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் அண்ணல் அம்பேத்கர் 125ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில், அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழா 23.4.2016 சனிக்கிழமை மாலை, சென்னை, திருமுல்லைவாயி லில் நடைபெற்றது. நா.க. தமிழ்ச்சிற்பி தலைமை தாங்கினார். ஆவடி நாகராசன் வரவேற்புரையாற்றி னார். கரு அண்ணாமலை, து. கஜேந்திரன், ச. குமரன், இரா. திருநாவுக்கரசு, இரா. பரந்தாமன், கி.மு. திராவிட மணி, முல்லை தமிழின் ஆகியோர் உரை யாற்றினர். சீனு. விடுதலையரசு சிறப்புரையாற்றி னார். து. சுதர்சனன் நன்றியுரையாற்றினார்.

## பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், தமிழ்வழிக் கல்வி இயக்கக் காப்பாளர் முனைவர் ச. முத்துக்குமரன் மறைந்தார்!



தமிழ்நாட்டில் தமிழறிஞர் களாகவும், பெரிய பொறுப் பில் இருந்தவர்களாகவும் நம்மிடையே உள்ளவர்கள் மக்கள் இயக்கங்களோடு சேர்ந்து போராடுவது அருகி வருகிறது. இப்படிப்பட்ட வறிய சூழலில், தமிழ் நாட்டில் தமிழ்வழியில் மட்டுமே எல்லாக் கல்வியும் தரப்பட வேண்டும் என எவர் எந்த நிகழ்ச்சியை நடத்தினாலும் - மிக மகிழ்ச்சியோடு அதில் பங் கேற்று, வெற்று ஆரவாரம் இன்றித், தமிழ் வழிக் கல்வியின் இன்றியமையாமை பற்றி உறுதிப் படவும் மனந்திறந்தும் பேசியவர் நம் பேராசிரியர் முனைவர் ச. முத்துக்குமரன் அவர்கள் ஆவார்.

மா.பெ.பொ.க. சார்பில், ஆண்டுதோறும் ''சிந்தனை யாளன்'' பொங்கல் மலரை வெளியிடுகிறோம். அம்மலருக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் தமிழ்வழிக் கல்வி, சமச்சீர் கல்வி, இந்திய ஆட்சி மொழிச் சிக்கல் பற்றிக் கட்டுரைகளை வழங்கி உதவினார், பேராசிரியர் முத்துக்குமரன் அவர்கள்.


கட்சி, தலைமை வழி சாராமல், தமிழர் நலம் சார்ந்த சிக்கல் அல்லது செயல் வழியில் நின்று, மிகவும் ஆய்வு நோக்கில் கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும், ஆய்வு அறிக்கைகளையும் வழங்கியவர் பேராசிரியர் ச. முத்துக்குமரன். அவற் றுக்கான ஆழ்ந்த அறிவையும், நேர்மையையும், துணிச்சலையும் பெற்றிருந்தவர் அவர்.

அத்தகு சிறப்புகளுக்குரிய முனைவர் ச. முத்துக் குமரன் அவர்கள் 14-4-2016 அன்று மறைவுற்றார் என்பதை அறிந்து வருந்துகிறோம்.

அப்பெருமகனாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தார், அவர்பால் அன்பு கொண்டவர்கள் ஆகிய அனைவர்க்கும் மா.பெ.பொ.க. சார்பிலும், 'சிந்தனையாளன்' இதழ் சார்பிலும் ஆழ்ந்த இரங் கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

வளர்க பேராசிரியர் ச. முத்துக்குமரன் புகழ்!

**- வே. ஆனைமுத்து**



# பிட்டி. தியாகராயர்
## நீதிக்கட்சி நிறுவனர், அரசியல் தலைவர்

நீதிக்கட்சி நிறுவனர்களில் முக்கியமானவரும், சென்னை மாகாணத்தின் முக்கிய அரசியல் தலைவராக விளங்கியவருமான பி.தியாகராயர் பிறந்த தினம் இன்று. (ஏப்ரல் 27). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* சென்னை கொருக்குப்பேட்டையில் வசதியான குடும்பத்தில் (1852) பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார். தந்தை நடத்திய நெசவு, தோல் பதனிடுதல், உப்பளம், சுண்ணாம்புக் காளவாய் ஆகிய தொழில்களைக் கவனித்து வந்தார்.

* தொழில்களுக்கு உதவியாக 100 படகுகளுடன் சொந்தமாகப் போக்குவரத்துக் கம்பெனி நடத்திவந்தார். தன் வீட்டருகில் 'பிட்டி' நெசவாலை என்ற நெசவாலையை ஏற்படுத்தினார். இங்கு தயாரிக்கப்பட்ட பிட்டி மார்க் கைக்குட்டைகள் உலகப்புகழ் பெற்றவை.

* 'சென்னை உள்நாட்டினர் சங்கம்' என்ற அமைப்பை 1882-ல் தொடங்கினார். இது பிற்காலத்தில் 'சென்னை மகாஜன சபை' என்று மாற்றப்பட்டது. இச்சபை அவ்வப்போது கூடி விவாதித்து தங்கள் கோரிக்கையை ஆங்கிலேய அரசுக்குத் தெரிவித்தது.

* சென்னையில் இந்திய தேசிய காங்கிரஸின் 2-வது மாநாட்டை முன்னின்று நடத்தினார். சென்னை வந்த காந்தியடிகளுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார். 1916 வரை காங்கிரசில் இருந்தவர், கருத்து வேறுபாடு ஏற்பட்டு அக்கட்சியில் இருந்து விலகினார். அதே ஆண்டு வேப்பேரியில் ஒரு சிறப்புக் கூட்டம் கூட்டி 'தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார்.

* இந்த அமைப்பு சார்பில் 'நீதி' என்ற இதழை நடத்தினார். இதன் பெயரைக் கொண்டே இந்த அமைப்பு நீதிக்கட்சி (Jusitice Party) எனக் குறிப்பிடப்பட்டது. இதன் தலைவராகப் பொறுப்பேற்று, கட்சியைச் சிறப்பாக நிர்வகித்தார்.

* இவரது தன்னலமற்ற முயற்சியால், 1921-ல் சென்னை மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தலில் நீதிக்கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. முதல்வர் பதவி இவரைத் தேடிவ வந்தாலும் அதை மறுத்து வேறு ஒருவரைப் பொறுப்பேற்கச் செய்தார்.

* கட்சிப் பணியைத் தொடர்ந்து செய்தார். கோயில் திருப்பணிகளையும் மேற்கொண்டார். சென்னை நகராட்சி உறுப்பினராகத் தொடர்ந்து 40 ஆண்டுகள் சேவை புரிந்தார். சென்னை நகரமன்றத் தலைவராக (மேயர்) இருந்து மகத்தான பணிகளைச் செய்தார். அரசுப் பள்ளியில் இலவச மதிய உணவுத் திட்டத்தை முதன்முதலில் தன் சொந்தச் செலவில் தொடங்கி வைத்தார்.

* இலவச மதிய உணவுடன் கூடிய தொடக்கப் பள்ளியை 1892-ல் தொடங்கினார். 'திராவிடன்' என்ற தமிழ் நாளேடு, 'ஆந்திரப் பிரகாசிகா' என்ற தெலுங்கு நாளேட்டை நடத்தினார். பார்வையற்றோருக்கான பள்ளி, பிச்சைக்காரர் இல்லம், இலவச மருத்துமனைகள் தொடங்கினார். மது ஒழிப்புக்காகப் பாடுபட்டார். சாதி ஆதிக்கத்தை எதிர்த்தார்.

* சென்னையில் உள்ள தியாகராயர் கல்லூரி இவரால் நிறுவப்பட்டது. சென்னை, ஆந்திரா பல்கலைக் கழகங்களை நிறுவ அரும்பாடுபட்டார். தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கினார்.

* சென்னையில் புதிததாக உருவாக்கப்பட்ட நகருக்கு இவரது நினைவாக தியாகராய நகர் (தி.நகர்) என்று பெயர் சூட்டப்பட்டது. இவரைப் பற்றிப் பல நூல்கள் வெளிவந்தன. 'வெள்ளுடை வேந்தர்' எனப் போற்றப்பட்ட சர் பிட்டி. தியாகராய செட்டியார் 73-வது வயதில் (1925) மறைந்தார்.

**- ராஜலட்சுமி சிவலிங்கம்**

**(நன்றி : ''தி இந்து (தமிழ்)'', ஏப்ரல் 2016)**

# கெயில் குழாய் அமைக்கப் பச்சைக்கொடி காட்டும் நீதிமான்களே! ஈக்வெடாரின் எண்ணெய்க்குழாய்களைப் பாருங்கள்!

**இரணியன்**

**தென்** அமெரிக்காவின் வடமேற்கில், நிலநடுக் கோட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடு ஈக்வடார்.

தென் வடக்கு - வடகிழக்கில் கொலம்பியாவும், தெற்கு-தென் கிழக்கில் பெரு நாடும், மேற்கில் பசிபிக் பெருங்கடலும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

பரப்பளவில் இது அமெரிக்காவின் ஒரு மாகாணத்திற்கே ஒப்பானது.

இங்கு முப்பதுக்கும் மேலான எரிமலைகள் உண்டு. அதே சமயம், அடர்ந்த காடுகளும், வானளாவிய அருவிகளும், எண்ணற்ற பறவை இனங்களும், அரிய வன விலங்குகளும் இங்கு உண்டு. உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இயற்கைப் பேரெழில் இந்நாட்டின் செல்வம். சுபானிய (Spain) மொழி பேசும் மக்களும், பல்வேறு பழங்குடியின மக்களும் இங்கு வாழ்கிறார்கள். எளிமையும், களங்கமற்றும், தன்னிறைவோடும் திகழ்ந்த இந்நாடு 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனங்களால் நாசமாக்கப்பட்டது.

1968ஆம் ஆண்டில், டெக்சகோ என்னும் நிறுவனம் ஈக்குவடாரின் அமேசான் பகுதியில் பெட்ரோலியத்தைக் கண்டுபிடித்தது. அதன்பின்பு பல நிறுவனங்கள் எண்ணெய்க் குழாய்த் தொடர்களை அமைத்தன. எண்ணெய் ஏற்றுமதி முதலிடம் பிடித்தது. 300 மைல் நீளமுள்ள ஒரு குழாய்த் தொடர் மூலம் அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதி தொடங்கப்பட்டது.

ஆனால், 'டிரான்ஸ் ஆண்டியன்' எண்ணெய்க் குழாய்த் தொடரில் கசிந்து வெளியேறிய எண்ணெய் மட்டும் ஐந்து இலட்சம் பீப்பாய்களாகும். எக்சோன் வால்டெஸ் என்ற நிறுவனம் பதித்த குழாய்களிலும் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் பீப்பாய் எண்ணெய் கசிந்து வெளியேறியது.

இந்த எண்ணெய்க் கசிவால் பரந்து விரிந்த மழைக்காடுகள் முற்றும் நாசமாகிவிட்டன. ‘‘ஐந்து வண்ணக் கிளிகள்’’ முதலான எண்ணற்ற பறவை இனங்களும், சிறுத்தை முதலான வனவிலங்குகளும் இந்த எண்ணெய்க் கசிவால் அழிந்துபோய்விட்டன. ஈக்வெடாரின் பழம்பெரும் ஆறுகள், எப்போதும் புகையை உமிழ்ந்து தள்ளும் சாக்கடைகளாக மாறிப் போயின. மூன்று பழங்குடி இனங்கள் அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டன.

மேலும், இந்த எண்ணெய் நிறுவனங்கள் 1971 மற்றும் 1972 ஆண்டுகளில் மட்டும், நாள் ஒன்றுக்கு நாற்பது இலட்சம் கேலன் அமிலக் கழிவுநீரை ஆறுகளிலும் திறந்தவெளிக் குளம் குட்டைகளிலும் குழிகளிலும் கொட்டிச் சென்றன. கசடு எண்ணெய், கனவகை உலோகங்கள், புற்றுநோயை உண்டாக்கும் வேதிக் கழிவுகள் நிறைந்த இந்த அமிலக் கழிவுநீர் மண்ணையும் நிலத்தடி நீரையும், புல், மரம், செடி, கொடி முதலான இயற்கையையும் நாசமாக்கியது. ஊர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவன என எல்லா வகை உயிரினங்களையும் அழிவுக்கு உட்படுத்தியது. மக்கள் கடுமையான தோல் நோய்களுக்கும், உள்ளுறுப்புகளின் சிதைவுகளுக்கும் ஆட்பட்டனர்.

இந்த எண்ணெய் வளத்தால் மிகப்பெரும் பொருளியல் வளர்ச்சி ஏற்படும் எனச் சொல்லப்பட்டது. ஆனால், வறுமை 50 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடாக உயர்ந்தது. வேலையற்றோர் எண்ணிக்கை 15 விழுக்காடாக இருந்தது, 70 விழுக்காடாக மாறியது. பொதுக் கடன்கள் நூற்றின் மடங்குகளில் அதிகரித்தன. ஆனால் மக்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 20 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடாகக் குறைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நடு அமெரிக்க, தென் அமெரிக்க நாடுகளை நாசமாக்கிய அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களைத்தான் இந்தியாவை ஆளும் மோ(ச)டிக் கும்பல், இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஓடி ஓடி அழைத்துவந்து களம் இறக்குகிறது. பாதகம் செய்பவர்கள் 'பாரத் மாதா கீ ஜே' என்கிறார்கள். இந்தியத் தேசங்களின் மக்கள் எப்பொழுது கண் திறப்பார்களோ? தெரியவில்லை. கண்கள் திறக்கக் கலகம் பிறக்கும்! இது உறுதி.

(செய்திக்கு அடிப்படை : ‘‘ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்’’ - ஜான் பெர்க்கின்ஸ், விடியல் பதிப்பகம், கோவை)

## அம்பேத்கர் பிறந்தநாள் கூட்டம்



திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சியை அடுத்த அரிதாரிமங்கலத்தில் 14.4.2016 அன்று நடைபெற்ற அம்பேத்கர் பிறந்த நாள் கூட்டத்தில், வழக்கறிஞர் கோ. முருகன், பாவலர் வையவன், தோழர்கள் வீரபத்திரன், சாக்கியமுனி, சக்திவேல், மாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பத்துத் தமிழர்களைச் சுட்டுக் கொன்றவர் இராசாசி!
# அதை ஏன் என்று கேட்காதவர் ம.பொ.சி.!

- வாலாசா வல்லவன்

(ஏப்பிரல் இதழ் தொடர்ச்சி...)

''கிளர்ச்சி நடத்த இருந்த அறிஞர் அண்ணாவையும் கலைஞர் கருணாநிதியையும் இந்த சர்க்கார் சிறையில் அடைத்தது.இன்னும் இதுபோல பல ஆயிரக்கணக்கான பேர்கள் சிறையில் கிடக்கிறார்கள். தலைவர்கள் இல்லாதபோது சர்க்கார் பலாத்கார முறையில் போலீஸ் படையின் உதவி கொண்டு சுட்டிருக்கிறது. இதை இன்றைய தினம் விசாரிக்க வேண்டுமென்றால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமாயிருந்த அதிகாரிகளைக் கொண்டே விசாரணை நடத்தும் படியாக ஏற்பாடு செய்திருக்கிறார். மேலும் கலெக்டர் விசாரிக் கும்போது பின்னால் சாட்சி சொல்லவேண்டிய கீழ் அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள். இதில் ஏதாவது நியாயமுண்டா? நீதி உண்டாகுமா? ஏன் கனம் ராஜா சிதம்பரம் போன்ற தனிப்பட்ட பிரமுகர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து விசாணை நடத்தக்கூடா தென்று நான் கேட்கிறேன். அரசாங்க உத்தியோகஸ்தர் களைக் கொண்டே விசாரிக்கச் சொல்வதில் நியாயம் கிடைக்காது. கட்சி சார்பற்ற தனிப்பட்ட பிரமுகர்களைக் கொண்டுதான் விசாரிக்கச் செய்யவேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் இராசாசி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், போலீஸ்காரர்கள் திறமை யாகச் சுட்டிருக்கிறார்கள் என்று, அவர்கள் செய்கையை இவர்தான் பாராட்டுகிறார். தாலியை இழந்த தாய் மார்களின் கண்ணீர் ஓய்ந்தபாடில்லை. அவர்கள் அலறும் அலறல் ஓய்ந்த பாடில்லை. அதுவெல்லாம் ஆச்சாரியாருக்குத் தெரியவில்லை. டால்மியாபுரத்தில் சுமார் பகல் 2 மணிக்குக் சுட்டிருக்கிறார்கள். எனக்கு உடனே மூன்று மணிக்கு ஒரு தந்தி, 3.24 மணிக்கு ஒரு தந்தி, 3.34 மணிக்கு ஒரு தந்தி என்று வரிசையாகத் தந்தி அடித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தந்தியாவது எனக்கு அன்றே கிடைக்கவில்லை. ஒரு நாள் கழித்து எனக்குக் கிடைக்கும் படியாக இந்த சர்க்கார் செய் திருக்கிறது. இது தான் ஜனநாயகத்தின் போக்கா? இப்படிச் செய்தியை மறைத்து விட்டால் உண்மை வெளிப்படாமலேயே இருந்துவிடுமென்று எண்ணமா? குடையைக் கொண்டு சூரியனை மறைக்க முடியுமா? இதேமாதிரியே தன்மானத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது உரிமைக் கிளர்ச்சியை நன்கு அறிந்து கொள்ளவேண்டும். வட நாட்டவர்கள் நம்மை இழிவுபடுத்திப் பேசுவதை நிறுத்தும்படி செய்யவேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கையை இந்தச் சர்க்கார் எடுக்கவேண்டும். மிருகத்தனமாக நடந்து கொண்ட போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதா இல்லையா என்பது பற்றி விசாரிக்க உடனே ஒரு



தனிப்பட்ட பிரமுகர்கள் கொண்ட–அதாவது அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அற்ற ஒரு கமிட்டியை நியமித்து விசாரணை நடத்தவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.'' (சட்டமன்ற விவாதக் குறிப்புகள் பக்கம் 547–850, நாள்.21–7–1953)

A. Govindasami Nayagar:- "Sir, on a point of Order – கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்கள் ஆரம்பக் கல்விக்காக இரயில் நிறுத்தம் செய்யப் பட்டதாகச் சொல்லுகிறார். ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கும், இரயில் நிறுத்தத்திற்கும், எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. தமிழர்களை அவமதிக்கும் முறையில் இந்தியப் பிரதமர் பேசிக்கொண்டே வருவதைக் கண்டிக்கத்தான் இரயில் நிறுத்தம் செய்யப்பட்டது என்பதை அவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் எம். கல்யாணசுந்தரம் தன்னுடைய கண்டன உரையில் கூறியதாவது:–

Sri. M. Kalyanasundaram:- ''கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும் எனக்கு உணர்ச்சி வேகம் ஏற்படுகிறது. ஒரு புறத்தில் துக்கம், இன்னொரு புறத்தில் கோபம் – ஆகவே வார்த்தைகள் வருவதுகூட கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலம் 10, 12 உயிர்களை மாய்க்கவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர வேறு வழியே அவர்களுக்குத் தெரியவில்லையா என்று நான் கேட்கவிரும்புகிறேன்''.

The Hon. Sri Rajagopalachari :- ''பத்து பன்னிரண்டு பேர்கள் இறக்கவில்லை. டால்மியாபுரத்தில் நால்வரும், தூத்துக்குடியில் இருவரும் ஆக ஆறு பேர்கள் தான் இறந்திருக்கிறார்கள்.''

Sri. M. Kalyanasundaram:- ‘‘கனம் முதல் மந்திரி அவர்கள் சொல்லுகிறார், ‘‘ஆறு உயிர்கள்தான் இறந்தனவென்று, அப்படியே இருக்கட்டும். அதை நான் மறுக்கவோ, திருத்தவோ விரும்பவில்லை. இந்த ஆறு பேர்களைத் தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கான பேர்கள் கையும், காலும், மண்டையும் உடைபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள். இது நியாயமா, நீதியா, தப்பு யாருடையது என்று விவாதத்திற்கு வரும்முன் நான் முதலில் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் இறந்த வர்களுடைய குடும்பத்திற்கு மனப்பூர்வமான அனு தாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

‘‘இம்மாதிரி துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தக் காரணம் என்ன? கனம் ராசாசி அவர்கள் இந்த இயக்கத் தலைவர்களை சிறையில் அடைத்தபோதே தலைவர்கள் வெளியில் இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்பதை உணரவில்லையா? நேரில் காணும் பிரச்சினைகளை ஒப்புக்கொள்ள மறுத்து விஷயங்களை மழுப்பக் கூடாது. நம் எதிரேயுள்ள உண்மை விஷயத்தை அப்படியே எடுத்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கும். ஒரு குறிப்பிட்ட பிரச்சினைப்பற்றி, வடநாட்டான் தென்னாட்டை ஆதிக்கம் செலுத்துவதை ஒரு கட்சி விரும்பாமல் இருக்கலாம். அது அந்தக் கட்சியின் அபிப்பிராயம். ஆனால் ஒரு பொறுப்புள்ள அந்தஸ்த்தில் இருக்கக்கூடிய இந்தியப் பிரதம மந்திரி அவர்கள், இவைகளையெல்லாம் சில்லியென்றும், நான்சென்ஸ் என்றும் இழிவுப்படுத்திப் பேசுவது ரொம்பவும் கண்டிக்கத்தக்கதாகும். தமிழ் மக்களின் எழுச்சியை இழிவுப்படுத்துவது தமிழ்நாட் டையே இழிவுபடுத்துவது போலாகும். தமிழ் நாட்டி லுள்ளவர்கள் கௌரவமாக வாழவேண்டும். மானத் தோடு வாழவேண்டும். வடநாட்டானுக்கு அடிமைப்பட்டுத் தன்மானத்தை இழக்கக்கூடாது. வடநாட்டான்தமிழனை இழிவுப்படுத்திப் பேசுவதைப் பார்த்துக் கொண்டி ருக்கக்கூடாது. வடநாட்டானின் ஆதிக்கச் சின்னமான வடநாட்டுப் பெயர்கள் தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு கட்சி சாத்வீக முறையில், முன்னறிவிப்புச் செய்துவிட்டு, டால்மியாபுரம் என்ற பெயரைக் கல்லக்குடி என்று திருத்தி எழுதுவதற்கு முயற்சி செய்தபோது கூட்டத்தின்மீது 64 ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம், கனம் இராசாசி அவர்களின் அதிகார ஆதிக்க வெறியைக் காட்டாது வேறு எதைக் காட்டுகிறதென்றுதான் நான் கேட்கவிரும்புகிறேன். சபையிலே பேசும்போது கடந்த ஒரு மாதமாக திராவிடப் பத்திரிகைகளான ‘‘விடுதலை’’, ‘‘நம்நாடு’’ போன்ற தினத்தாள்களைப் பார்த்தாலேயே உங்களுக்குத் தெரியும். இதுமாதிரியான ஒரு நிலையை உண்டு பண்ணவே அவர்கள் ரொம்பவும் தூபம் போட்டு வந்தார்கள். ஆகவே இதுமாதிரியான ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பது பற்றி நான் ஆச்சரியப்பட வேயில்லை’, என்று இராசாசி சொன்னாரே, முன்பே என்ன நடக்கும் என்று எதிர்ப்பார்த்த ஸ்ரீ இராசாசி துப்பாக்கிப் பிரயோகம் செய்யச் சொல்லித்தான் போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டாரா? குறிப்பாக சபையிலுள்ளவர்கள் இராசாசி பதவிக்கு வந்தபின், அதாவது அதிகாரம் அவர்கள் கைக்கு வந்தபின் எப்படி நடந்து கொண்டு வருகிறார் என்பதைப் பார்க்கவேண்டும்.

‘‘பலமான எதிர்ப்புகளிடையே கனம் இராஜகோ பாலாச் சாரியார் மந்திரி சபையை அமைக்க ஒப்புக் கொண்டதும், தீரமாக மந்திரி சபையை அமைத்ததும் – கொல்லைப்புர வழியாக வந்தாலும் அதன் பின் தனது சாகஸங்களை உபயோகித்துத் தனது சாணக்கிய–சட்ட நுணுக்கத்திறமை களைக் காட்டி மந்திரி சபையை நிலைக்க வைத்துக் கொண்டதையும் எல்லோரும் பாராட்டலாம். அது தனிப்பட்ட விஷயம். ஆனால் நாட்டின் நிலைமை கொஞ்சமாவது முன்னேற்றம் அடைந்திருக் கிறதா? பொதுநலனைப் பாதுகாக்க எப்படிப்பட்ட எதிர்ப்பு இருந்தாலும் ஒன்றுபட்டு அதை முறியடிக்கப் போராடு வோம் என்பதை மக்கள் பல சந்தர்ப்பங்களில் இந்தச் சர்க்காருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கனம் இராஜகோபாலாச்சாரியார் மந்திரிசபைக்கு எதிராக உணவுப்பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், பசிப்பட்டினிச் சாவுகள் போன்ற பல பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. ஆகவே இதுமாதிரியாக மக்கள் ஒன்று சேர்ந்து போராட இப்பொழுது சந்தர்ப்பம் அளித்தால் இந்த எதிர்ப்புச் சக்திகள் எல்லாம் நிச்சயமாக ஒரு காலத்தில் ஒன்று திரண்டு இந்தச் சர்க்காரையே கவிழ்த்துவிடும் என்ற அச்சத்தாலேயேதான் மக்கள் உள்ளத்தில் பயத்தை உண்டுபண்ண, அவசியமானால் துப்பாக்கிப் பிரயோகத் தையும் கூடச் செய்து இந்த இயக்கத்தை நசுக்க வேண்டுமென்று இராசாசி உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லுகிறேன். அதை அவர்கள் மறுக்க முடியுமாவென்று கேட்கிறேன்? முன்பு நடந்த ஹிந்தி ஒழிப்பு இயக்கத்தின்போது போலீஸ் அதிகாரிகளுக்கு என்ன உத்தரவிட்டார்கள். அவர்கள் சாத்வீக முறையில் அழிக்கும் போது பேசாமல் இருங்கள். நிலைமை மோசமாகிவிடாமல் மாத்திரம் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதோடு கடைசி பாராவில் இதில் கம்யூனிஸ்ட்டுகள் பங்குக் கொள்ளுகிறார்களா என்று பார்க்கவும் எனக் கண்டிருந்தது.

முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார்: ‘‘அப்படி எந்த உத்தரவும் போடவில்லை.’’

Sri. M. Kalyanasundaram:- ‘‘உங்களால் உத்திரவும் போட முடியும். உத்திரவு போடவில்லையென்று மறுக்கவும் முடியும். ஆனால் எங்களால் அந்த இரகசிய உத்தரவைக் கொண்டுவந்து காட்ட முடியாதல்லவா? நீங்கள் உத்திரவு போடவில்லையென்றால், போலீஸ் அதிகாரிகளுக்கு என்ன உத்தரவு கொடுத்தீர்கள்? என்ன உத்தரவு கொடுத்தீர்களோ அதன் நகல் ஒன்றை சபையின் முன்பு உங்களால் வைக்கமுடியுமா?’’

முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார்: ‘‘இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது போட்ட உத்தரவையா?’’

Sri. M. Kalyanasundaram:- ''அந்த உத்தரவையும் தான், இப்பொழுது போட்ட உத்தரவையும்தான், தமிழ்நாட்டில் இரயில் நிறுத்த மறியல் பல இடங்களில் நடந்தபோதிலும்கூட, துப்பாக்கிப் பிரயோகம் எந்த இடங்களில் நடந்திருக்கிறதென்று பாருங்கள். ஒன்று டால்மியாபுரத்தில், மற்றொன்று தூத்துக்குடியில். டால்மியாபுரத்தில்தான் சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. தொழிலாளர்களின் நலனை நசுக்க எல்லாவித வழியையும் கையாளும் அந்த வட நாட்டு முதலாளி, மற்றவர்களுக் கெல்லாம் கிடைக்காத இந்திய சர்க்காரின் சலுகையைப் பெற்றுத் தொழிலாளிகளின் உயிரை உறிஞ்சி வருகிறான். தூத்துக்குடிதான் ஆர்.வி. மில்லின் கோட்டை. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளிகள் பட்டினி கிடந்து செத்தாலும்கூட தன்னு டைய நாலு பங்கு லாபத்தில் ஒரு பங்கு லாபம் குறைந்தாலும் கூட அவன் அலறுவான். அவர்களின் நஷ்டத்தைக் கோடிக்கணக்கில் கொடுத்து ஈடு செய்யவும் சர்க்கார் முன்வரும். இந்த இரு இடங்களில்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம், உணவு கிடைக்காத திண்டாட்டம் போன்ற பல பெரிய பெரிய பிரச்சினைகள் நாட்டில் கிளம்பிக்கொண்டி ருக்கிறது. இப்பொழுதிலிருந்தே எதிர்ப்புச் சக்திகள் ஒன்று சேர இடம் கொடுக்கக்கூடாது என்ற கருத்தோடுதான் கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அவர்களைச் சுட்டுக்கொல்ல உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதுவே தமிழ் நாட்டிலுள்ள மக்களின் அபிப்ராயம். சர்க்காரிடம் அவர்கள் ஆத்திரப்படு கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள்மேல் பழியைச் சுமத்தி விட்டு, சந்தர்ப்பங்களை தனது சமயோசித புத்தியால் எப்பொழுதும் தனக்குச் சாதகமாகவே வைத்துக்கொண்டு விட்டால் மாத்திரம் போதாது. சர்க்கார் தரப்பிலிருந்து பேசியவரால் கூட, துப்பாக்கிப் பிரயோகம் சரி என்று சொல்வதற்கு நாக்கு வரமாட்டேன் என்று விட்டது. அவர் மனம் அதற்குத் துணியவில்லை. ஆகவே கனம் ராஜகோபாலாச் சாரியாருக்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். பிரச்சினையை நேருக்கு நேராகப் பார்க்கவேண்டும். சென்ற ஒரு மாதகாலமாகவே சர்க்காரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தையும், மற்ற விஷயங்களையும் கண்டிக்கும் முறையில் அவர்கள் மகாநாடுகள் கூட்டினார்களே. பலப்பல இடங்களில் கூட்டங்கள் போட்டுத் தீர்மானங்கள் அனுப்பினார்களே. அவர்களது தினத்தாள்களில் ரொம்பவும் எதிர்த்து எழுதி வந்திருப்பதாக கனம் ராஜகோபாலாச்சாரியாரே ஒப்புக்கொண்டிருக்கிறாரே. அப்படியிருக்க ஜனநாயகத் தில் ரொம்பவும் நம்பிக்கையுள்ள கனம் இராசாசி அவர்கள் அந்தக் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு வைத்து, அவர்கள் எதிர்க்கவேண்டியதன் அவசியத்தைக் கேட்டாரா? அப்படி எதுவும் சமரச முறையில் நடந்ததாகத் தெரியவில்லை. விபரீதமான செய்கை ஏற்படலாம் என்று உணரும் போதாவது கண்ணீர்ப் புகை எல்லா இடங்களிலும் கிடைக்கும்படி வழி செய்தாரா? போதுமான முன்னறிவிப்பு இன்றி, சாத்வீகமான முறையில் கூட்டத்தைக் கலைக்க வழியிருந்தும், அவைகள் ஒன்றையும் கைப்பற்றாமல் சுடுவதற்கு உத்தரவு எப்படிக் கொடுத்தார் என்று கேட்கிறேன்? கனம் இராசாசியின் உத்திரவு இல்லாவிட்டால் அவர்கள் அப்படித் துணிந்து செய்திருப்பார்களா? கூட்டத்தினரின் தொகை அதிகமாக இருந்தது என்று வைத்துக்கொண்டாலும், இவர்களைக் கலைப்பதற்கு வேறு வழி ஒன்றுமேயில்லை யென்று வைத்துக்கொண்டாலும் முப்பது வயதுகூட நிரம்பப் பெறாத ஒரு அதிகாரி, ஒரு ரவுண்டா இல்லை.... 64 ரவுண்டுகள் சுடு, சுடு என்று சொல்ல வேண்டுமானால் அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமலா தைரியமாக அப்படி மக்களின் உயிர்களைத் திரணமாக மதித்து உத்தரவு இட்டிருப்பார்? நான் கேட்கிறேன்? யாரோ தெரியாமல் செய்துவிட்டதாக, ஸ்தல அதிகாரிகளின்மீது பழியைப் போட்டுவிட்டு கனம் ராஜகோபாலாச்சாரியார் தப்பித்துக்கொள்ள முடியாதென்று நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

''ஆகவே ஒரு பாரபட்சமற்ற கமிட்டியை நியமித்து இதைப்பற்றி விசாரிக்க வேண்டும். இந்த சம்பவத்திற்குக் காரணமாயிருந்த அதிகாரிகளைவிட்டே இதை விசாரிக்கச் சொல்வது ரொம்பவும் தப்பாகும். அதில் நியாயம் கிடைக்காது. நீதி இருக்காது. ஆகவே ஜனநாயகத்தை காலில் போட்டுத் துவைக்காமல், இரத்தத்தைச் சிந்தி இந்த நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டிய ஒரு நிலைமை ஏற்படாமல் செய்ய வேண்டுமென்றால், உடனே தனிப்பட்ட அங்கத்தினர் களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து இதுபற்றிப் பாரபட்சமற்ற விசாரணையை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அல்லது ஜனங்கள் இரத்தத்தைச் சிந்தியாவது ஜனநாயகத்தை நிலைநாட்ட இந்த எதேச்சதிகார ஆட்சியை ஒழித்துக் கட்டுவார்கள் என்று சொல்லிக்கொண்டு என்பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.'' (சட்டமன்ற விவாதக் குறிப்புகள் பக்கம் 855-858, நாள்.21-7-1953)

அண்ணா, ''திராவிட நாடு'' இதழில் தம் கண்டனத் தைப் பதிவு செய்துள்ளார்.

**நன்றிகெட்ட ம.பொ.சி. ஒரு வரிகூட தமிழர் சுட்டுக்கொல்லப்பட்டதைப் பற்றிஎழுதவில்லை. ஏனென்றால் சுட்டுக் கொல்லக் காரணமாக இருந்தவர் அவருடைய குருநாதர் இராசாசி ஆவார். வடக்கெல்லைப் போராட்டத்தில் இருவர் இறந்ததைப் பற்றி எழுதியுள்ள ம.பொ.சி., வடக்கெல்லைப் போராட்டத்திற்கு ஆதரவாக இரயில் மறியல் செய்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட 10 தமிழர்களைப் பற்றி ஒரு வரி கூட எழுதவில்லை.**

1967 தேர்தலில், தி.மு.க. இராசாசியின் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டதால் அவர்களும் இந்த வரலாற்றை மறைத்துவிட்டனர் என்பது ஒரு சோக வரலாறு.

பட்டம் தாணுப்பிள்ளை திருவிதாங்கூரில் 11 தமிழர்களைச் சுட்டுக்கொன்றதைக் கண்டிக்கும் தமிழ்த்

தேசியவாதிகள். வடக்கெல்லைப் போருக்கு ஆதரவாகப் போராடி இரயில் மறியல் செய்தபோது 15.07.1953 அன்று இராசாசியின் அடக்குமுறை ஆட்சியால் 10 தமிழர்கள் சுட்டுக் கொன்றதைப் பற்றி வாய் திறப்ப தில்லையே ஏன்? இவர்கள் தமிழர்கள் இல்லையா?

கோல்டன் ந. சுப்ரமணியமும் தன்னுடைய நூலில் இதைப் பற்றி வெளியிடவில்லையே ஏன்?

தகராறுக்கிடமான பிரதேசம் என்றறிவிக்குமாறு பிரதமர் நேருவிடம் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்துமாறு மீண்டும் ஒரு முறை அவரை வற் புறுத்திக் கேட்க விரும்பினேன். அதன்படி 26.06.1953-இல் முதல்வர் இராசாசியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினேன்... ஆந்திரர் நிலைக்கு எதிராகத் தமிழர் மட்டுமே நடத்தும் கிளர்ச்சிக்கு ஆதரவாக முதல்வர் என்ற முறையில் தாம் எதையும் செய்யா மலிருப்பதை எனக்கு உணர்த்தினார்.

அன்று சங்கடமான நிலையை உணர்ந்தேன். ஆயினும் அன்றைய நிலையில் அவரிடம் எனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திப் பிரதமர் நேருவிடம் தொலைபேசியில் பேசி எல்லைக் கமிஷன் அனுப்பவுதாக உறுதிமொழி வாங்கித் தருமாறு அவரைக் கட்டாயப் படுத்தினேன். அவர் அதற்கு இணங்கவில்லை என்றா லும் மாற்று யோசனை ஒன்றை எனக்குத் தெரிவித்தார்.

விரைவில் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் ஆந்திரப் பிரிவினை மசோதா விவாவதத்திற்கு வரவிருப்பதால் அந்த மசோதாவிலேயே சித்தூர் மாவட்டத்தைத் தகராறுக்குரிய பிரதேசமாகக் கருதி ஆந்திரம் பிரிந்து ஓராண்டுக்குள் எல்லைக் கமிஷன் அனுப்படவேண்டும் என்ற விதியைச் சேர்த்துவிடலாம் என்பது இராசாசி கூறிய மாற்று யோசனை. இதற்கு அமைச்சரவையிலும் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலும், உள்ள ஆந்திரர்களுடைய ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்று இராசாசி நம்பினார்.

எனக்கு அந்த நம்பிக்கை இல்லை என்பதோடு, அப்படியே சென்னை மாநில சட்டமன்றம் இசைந்தாலும் மத்திய அரசு அதனை ஏற்குமென்று எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை-கோல்டன் நா. சுப்பிரமணியம் (மேற் கண்ட நூல் பக்.98-93) ம.பொ.சி.யின் எனது போராட்டம் நூலிலிருந்ததை, கோல்டன் சுப்பிரமணியம் மேற் கோளாகக் காட்டியுள்ளார்.

இராசாசி அரசு தயாரித்த ஆந்திரபிரிவினை சட்டமசோதாவில் எல்லை நிர்ணயம் அமைக்க வேண்டும் என்ற விதி இல்லை. திருத்தணி விநாயகம், கோசல ராமன், ப. ஜீவானந்தம் ஆகியோர் சட்டமன்றத்தில் வற்புறுத்திய பிறகு அவ்விதியைச் சேர்த்தார் என்பதே உண்மை.

வடக்கெல்லைப் பிரச்சனையில் ஒரு எல்லை வரையறை ஆணையம் அமைப்பதற்கு மத்திய அரசு ஏற்காது என்று கூறுகின்ற ம.பொ.சி., சென்னை தலைநகர் மீட்பதில் தான் நகர மன்றத்தில் கொண்டு வந்த தீர்மானத்தினால் நேரு மனமாற்றம் அடைந்து சென்னையைத் தமிழகத்திற்குக் கொடுத்துவிட்டார் என்று எழுதுவதில் என்ன நியாயம் இருக்கிறது? சட்டமன்றம் பெரியதா? மாநகராட்சி மன்றம் பெரியதா? என்பதை ம.பொ.சி. அன்பர்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

வடக்கெல்லைப் பிரச்சிணையில் ம.பொ.சிக்கு இராசாசி எந்தவிதமான ஆதரவையும் வழங்கவில்லை என்பதை அவரே ஒப்புதல் வாக்குமூலமாக நமக்கு அளித்துள்ளார். பின்பு எதற்காக அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டார் என்பது அவருக்கே வெளிச்சம்.

வேறுவழியின்றி ம.பொ.சி. திருத்தணி மார்கெட் பகுதியிலுள்ள காந்தி சிலையின் முன் 03.07.1953 அன்று சத்தியாகிரகம் இருக்கப்போவதாக அறிவித்தார்...

சத்தியாகிரகத்தில் ஈடுபடுவதற்கு முந்தைய நாள் இராசாசி எனக்குத் தந்திக் கொடுத்திருந்தார். அதில் "தாங்கள் தடையை மீறிச் சிறைப்புகுவதற்கு முடிவு செய்துவிட்டதாக அறிகிறேன். அது தேவையற்ற முயற்சி. அந்த முயற்சியைக் கைவிட்டு உடனே சென்னைக்கு வந்து என்னைப் பார்க்கக் கோருகிறேன்"...... "இராசாசியின் அன்புக் கட்டளையைப் புறக்கணிப்பது என் மனதுக்குத் துன்பம் தருவதுதான்"

....சென்னை மாநில காங்கிரசிடமோ, அதன் முதல்வராகிய தங்களிடமோ எனக்கு எந்தவிதமான மனத்தாங்கலும் இல்லை. மத்திய அரசின் நீதியற்ற போக்குத்தான் என்னைப் போராட்டத்தில் ஈடுபடுத்தி யுள்ளது. இப்போதுங்கூட சித்தூர் மாவட்டம் தகராறுக் குரிய பிரதேசம் என்பதனை ஒப்புக்கொண்டு அதற்காக எல்லைக்கமிஷன் அனுப்ப மத்தியஅரசு உறுதி கூறுமானால், நான் போராட்டத்தை அடியோடு கைவிட்டு விடுவேன். தாங்கள் என் தலைவர். அந்த வகையில் தங்கள் ஆணைக்குக் கட்டுப்பட நான் கடமைப்பட்ட வன்"..... (மேற்கண்ட நூல் பக். 100-101)

இந்தக் கடிதத்தை ம.பொ.சி. ஒரு ஆள்மூலம் முதல்வர் கைக்குக் கிடைக்கும்படி அன்று இரவே அனுப்பிவிட்டார்.


03.07.1953 காலை 9 மணிக்குத் திருத்தணி காந்தி சிலைமுன் போடப்பட்டிருந்த மேசையின் மீதேறி வடக்கெல்லைப் பகுதிகளை மீட்கும் போராட்டத்தில் ஈடுபடுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துப் பேசத் தொடங்கினேன். இரண்டு மணித்துளி ஆவதற்குள் கைது செய்யப்பட்டேன்.....

"ஒன்றரை ஆண்டுக்கு முன்பு 1952இல் நடந்தப் பொதுத் தேர்தலிலே எந்தக் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்காக இரவு பகல் பாராமல் சரியான ஊண், உறக்கம் இல்லாமல் நாடு சுற்றிப் பிரச்சாரம் செய் தேனோ அந்தக் கட்சியின் ஆட்சி என்னைச் சிறையில் அடைத்தது". (மேற்கண்ட நூல் பக். 102)

பா. குப்பனின் தலைவர் தேர்தலில் காங்கிரசுக்கு உழைத்ததை அவரே எழுதியுள்ளார். இதுதான் தமிழ்த் தேசியம் அமைக்க அவர் தீவிரமாகப் போராடியதா....?

- தொடரும்.

# ஜனநாயகம்



கேள்வி : உலகத்தில், மகா பித்தலாட்டமான சொல் எது?

பதில் : அதுவா, அதுதான் ஜனநாயகம் என்கின்ற சொல்.

கேள்வி : அது என்ன,கடவுள் என்பதைவிட மகா பித்தலாட்டமான சொல்லா?

பதில் : அய்யய்யோ, கடவுள் என்பது ஒரு பொதுப் பித்தலாட்டமான சொல்; இந்தப் பித்தலாட்டத்தில் எல்லோருக்கும் பங்கு வரும். ஜனநாயகம் என்கின்ற பித்தலாட்டச் சொல் அப்படி அல்ல; தந்திரக்காரனுக்கு - அயோக்கியனுக்கு - இவர்களே சேர்ந்த கோஷ்டிக்குத்தான் பங்கும், பயனும் உண்டு. போக்கற்ற ஆளுக்கெல்லாம், பித்தலாட்ட வாழ்வு கோஷ்டிக்கெல்லாம் பிழைக்கும் வழி - ஜனநாயகம் தான்.

கேள்வி : இதுவே இப்படியானால் - ஜனநாயக முன்னணி, ஜனநாயக அய்க்கிய முன்னணி, ஜனநாயக முற்போக்கு முன்னணி, ஜனநாயக தீவிர முன்னணி, ஜனநாயக அதிதீவிர முன்னணி, ஜனநாயக சுயேச்சை முன்னணி, சுயேச்சை ஜனநாயக முன்னணி, ஜனநாயகக் கூட்டணி - என்பது போன்ற சொற்களின் தன்மை என்ன ஆவது?

பதில் : அவைகளா? துப்பாக்கியின் வயிற்றில் பீரங்கி பிறந்ததுபோல். அது மகா பித்தலாட்டமானால், இவை மகா மகா பித்தலாட்டமாகும்; ஏன் - பித்தலாட்டத்தில் எல்லையென்றே சொல்லலாம். சந்தேகமிருந்தால் இவைகளில் இருக்கின்ற - இவைகளில் சேர்ந்த தனித்தனி ஆள்களை எடுத்துக் கொண்டு, அவர்களது சென்ற கால, நிகழ்கால, எதிர்கால பலனைக் கொண்டே ‘சாதக’த்தையும், அவர்களது கொடிவழிப் பட்டியையும் பார்.

எங்கேயோ போகிற பனாதி; பிழைப்புக்கு எத்தனையோ வழியில் வகை பார்த்து உதைபட்டு வந்த உதவாக்கரை; மற்றும் சகலவிதமான அயோக்கியத் தனங்களுக்கும் புகலிடமாக இருக்கிற பரம அயோக்கியர்கள்; தினம் ஒரு கட்சி புகுகிறவர்கள்; சமயத்திற்கேற்ற கொள்கைகளைப் பேசுகிறவர்கள்; எதைச் சொன்னால் மக்கள் ஏமாறுவார்களோ அதைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறவர்கள்; கலவரம் உண்டாக்குவதாலேயே பிழைக்கக் கூடியவர்கள் - இவர்களும், இவர்களைப் போன்றவர்களையும் பெரிதும் கொண்ட ஸ்தாபனங்கள்தானே! எந்தப் பெயர் இருந்தாலும் - அதற்குச் சொந்தப் பெயர், ‘பித்தலாட்ட மோசடி ஸ்தாபனம்’ என்றுதானே சொல்ல வேண்டும்?

கேள்வி : சிலர் - இரண்டொரு, அப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்களும் இருக்கிறார்களே?

பதில் : இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளுவோமே! இருந்தால் அவர்களை மோசடிப் பித்தலாட்ட அயோக்கியர் என்று சொல்ல வேண்டாம்; முட்டாள்கள் என்று சொல்லு!

கேள்வி : இப்படிச் சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ள மாட்டார்களா?

பதில் : யாரும் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். தேவடியாளை, ‘விலைமாதர்’ என்றால் கோபிப்பார்களா? நியாயவாதியைப் பொய் விற்பனையாளர்கள் என்றால் கோபிப்பார்களா? வாணிபர்களை ஏமாற்றுக்காரர்கள் என்றால் கோபிப்பார்களா? அதுபோல்தானே இதுவும். ஆதலால், கோபித்துக் கொள்ளுபவர்கள் யாராய் இருந்தாலும் - அவர்கள் தலைக்கு இந்தக் குல்லாய் சரியாய் இருக்கிறது என்று அவர்களே ஒப்புக்கொள்ளுவதாகத்தான் அர்த்தமாகும்.

கேள்வி : சரி.

பதில் : சரி!

கேள்வி : வணக்கம்.

பதில் : வணக்கம்; வணக்கம்!

**(‘சித்திரபுத்திரன்’ என்ற பெயரில் ஈ.வெ.ரா எழுதியது. ‘விடுதலை’ 4.10.1952)**

# தமிழ்ப் பண்பாட்டுப் பேரமைப்பு

**அரியலூர் மாவட்டம்**

அன்புடையீர்,

வணக்கம். தமிழ்ப் பண்பாட்டுப் பேரமைப்பு கீழ்க்காணும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அரியலூரில் உருவாக்கப்பட்டுள்ளது.

1. தாய்மொழி அறிவினை வளப்படுத்துதல்.
2. பிற மொழிகளைக் கற்க ஊக்குவித்தல்.
3. தனித்தன்மை வாய்ந்த தமிழ் இலக்கியங்கள், காப்பியங்கள், அறநூல்கள், இலக்கணங்கள் ஆகியவற்றைக் கற்பித்தலும் உலக அளவில் பரவச் செய்தலும்.
4. தமிழ் மரபுக் கலைகளான இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம் போன்றவற்றைப் பேணவும் பரப்பவும் ஏற்பாடுகள் செய்தல்.
5. தொல்லியல் ஆய்வுகளின் மூலம் அரியலூர் மாவட்டத்தின் தனித்தன்மை வாய்ந்த வரலாற்றினை அறிய முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
6. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையினையும், இயற்கை மருத்துவத்தையும் ஊக்குவித்தல்.
7. அரியலூர் மாவட்டக் கல்வி மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.
8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
9. குழந்தைகள் நலன், முதியோர் நலன் இரண்டிலும் முழு அக்கறை கொள்ளும் சமூகச் சூழலை உருவாக்குதல்.
10. ஒப்புரவு மனப்பான்மையை அனைவரிடத்திலும் வளர்த்தெடுத்தல்.
11. சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு முகாம்கள் ஏற்பாடு செய்தல்.
12. ஆண்டுதோறும் அரியலூரில் புத்தகத் திருவிழா நடத்துதல்.

தாங்கள் இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். நுழைவுக் கட்டணமாக ரூபாய் நூறும், ஆண்டு உறுப்பினர் கட்டணமாக ரூபாய் ஐந்நூறும் செலுத்தி உறுப்பினராகலாம். இவ்வமைப்பு தொடர்ந்து செயற்படவும் பல்வேறு ஆக்கப் பணிகளை மேற்கொள்ளவும் உறுதுணையாகப் புரவலர்களைச் சேர்க்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. புரவலர் கட்டணம் ரூபாய் பத்தாயிரம் ஆகும். இவ்வமைப்பின் இன்றியமையாமையை நன்குணர்ந்து உதவ இயன்றவர்கள் புரவலர்களாகச் சேர்ந்து அமைப்பிற்கு வலிவான அடித்தளத்தினை உருவாக்க முன்வருமாறும் வேண்டுகிறோம்.

உறுப்பினராகவோ புரவலராகவோ சேர விரும்புகிறவர்கள் உரிய தொகையினை நேரில் அளிக்க இயலாதவர்கள் கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

**UNION BANK OF INDIA ARIYALUR BRANCH**

SB Account Number 639702010005339 IFSC Code : UBIN 0563978

in favour of **THAMIZHP PANPAATTUP PEERAMAIPPU**

நன்றி,

**க. இராமசாமி,** செயலாளர்

## எல்லா மக்களுக்கும் பட்டை நாமம்

50 ஆண்டுகள் நம்மை ஆட்சி செய்வதர்கள் தான் பதவியில் இருந்து கொண்டு சொத்துக்களை குவித்துக் கொண்டு வந்துள்ளனர். மக்கள் நலன் இன்றுவரை சரியாகக் காக்கப்படவில்லை.

குடிநீர் வியாபாரத்தைத் தொடங்கியது, பால் விலை, பேருந்து, மின்சாரக் கட்டணங்களை உயர்த்தியது, அரசு ஊழியர்களைக் கையூட்டு வாங்கி தரும் கையா ளாக மாற்றியது, சமச்சீர் கல்வியைக் கொண்டுவருவ தாகக் கூறி ஏமாற்றியது, தனியார் கல்வி நிறுவனங் களை கட்டணக் கொள்ளையடிக்கவிட்டது, பொதுப் பணி களைத் தரமற்றதாகச் செய்தாலும் கையூட்டுப் பெற்று, கணக்கை தீர்த்தது, நீர்நிலைகளைப் பங்கு போட்டு விற்றது, விவசாய நிலங்களைப் பெருந்தொகை பெற்று மனை போட்டு விற்றது (இன்று மனைகள் மானம் பார்த்து கொண்டுள்ளது) போன்ற பல பாதிப்புகளை உண்டாக்கியது நம்மை ஆட்சி செய்கின்ற, செய்த அரசுகளேக் காரணம்.

இப்பொழுதெல்லாம் புதுப்புது வார்த்தைகளைக் கூறி மக்களை ஏமாற்ற வருகின்றனர். ஒருவர் அண்ணா, புரட்சித் தலைவர், பெருந்தலைவர், பெரியார், அம் பேத்கர் நாமம் வாழ்க என்று கூறி மக்களுக்கு நாமம் போட ஒரு கும்பல் வந்துள்ளது. அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று, கூத்தாடிகள் போல் ஒரு கும்பல் வருகின்றது. செய்யாததையும் செய்வோம் என்று கூறி ஒரு கும்பல் வருகின்றது. ஓட்டுக் கேட்கும் தோரணையே நம்மை மயக்க வைக்கும்.

அந்தக் கட்சிக்காரன் இவ்வளவு கொள்ளையடித் தான்; இதைச் செய்யவில்லை; அங்கே இவ்வளவு சொத்து; இந்த வங்கியில் இவ்வளவு பணம் உள்ளது என்று அவர்களே காட்டிக் கொடுக்கின்றனர். இன்னும் பணம் வரும் என்றால் ராஜபக்சேவுக்கே நாட்டை விட்டுக் கொடுப்பார்கள். இன்னும் நாங்கள் வந்தால் இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று சொல்லி ஓட்டுக் கேட்டு வருகின்றார்கள்.

வெளிப்படையாகக் கையூட்டு கேட்கும் அனை வரையும் ஒழிக்க வேண்டும். கல்வியில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. நிலத்தடி நீர் மற்றும் நீர்நிலைகள் காப்பாற்றப்பட வேண்டும். விவசாயத் தொழில் சிறக்க வேண்டும். நம் மக்களைச் சிந்திக்க விடாமல் செய்யும் மதுவை ஒழிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் அவர்கள் யாரும் செய்ய மாட்டார்கள். எந்த மாற்றமும், ஏற்றமும் ஏற்படாது அதனால் நமக்கு நாமம் போட நடத்தும் தேர்தலைப் புறக்கணிப் பதே ஒரே வழி.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மே-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | சூரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மே - 2016

| | | |
|---|---|---|
| முனைவர் **ஆ. முத்தமிழ்ச்செல்வன்** | சென்னக்குணம் .... | 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119